# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## பி.ஏ., (தமிழ்)

## முதலாமாண்டு - இரண்டாம்பருவம்

## 137 23

# அற இலக்கியம்

**Author:**
**DR. M.K. KOVAI MANI**, *Associate Professor & HOD , Department of Palm - Leaf - Manuscripts, Tamil University, Thanjavur - 613010.*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr. S. Senthamizh Pavai,** *Professor & Director, Centre for Tamil culture, Alagappa University, Karaikudi. 630003.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No.AU/DDE/DE12/B.A. Tamil/Printing of Course Materials/2021 Dated 23.04.2021 Copies 2200**

# பி.ஏ., (தமிழ்)

## முதலாமாண்டு இரண்டாம் பருவம்

## தாள் 137 23 - அற இலக்கியம்

**பிரிவு 1. திருக்குறள் - குடிமை - மானம்**

கூறு 1. வாழ்வியல் நூல் - திருக்குறள்

கூறு 2. குடிமை

கூறு 3. மானம்

**பிரிவு 2. திருக்குறள்-பெருமை-சான்றாண்மை-பண்புடைமை**

கூறு 4. பெருமை

கூறு 5. சான்றாண்மை

கூறு 6. பண்புடைமை

**பிரிவு 3. நாலடியார் - பழமொழி நானூறு**

கூறு 7. நாலடியார் - அறன் வலியுறுத்தல்

கூறு 8. நாலடியார் - அறிவுடைமை - பிறர்மனை நயவாமை

கூறு 9. பழமொழி நானூறு -51-75 வரையிலான பாடல்கள்

கூறு 10. பழமொழி நானூறு - 76-101 வரையிலான பாடல்கள்

**பிரிவு 4. திருமந்திரம் - நீதிநெறி விளக்கம்**

கூறு 11. திருமந்திரம் - யாக்கை நிலையாமை

கூறு 12. திருமந்திரம் - செல்வம் நிலையாமை

கூறு 13. திருமந்திரம் - இளமை நிலையாமை

கூறு 14. நீதிநெறி விளக்கம் - 1 - 50 பாடல்கள்

# பி.ஏ., (தமிழ்)

## முதலாமாண்டு இரண்டாம் பருவம்

## தாள் 137 23 - அற இலக்கியம்

| | | |
|---|---|---|
| பிரிவு | 1. | **திருக்குறள் - குடிமை - மானம்** |
| கூறு | 1. | வாழ்வியல் நூல் - திருக்குறள் |
| கூறு | 2. | குடிமை |
| கூறு | 3. | மானம் |
| பிரிவு | 2. | **திருக்குறள்-பெருமை-சான்றாண்மை-பண்புடைமை** |
| கூறு | 4. | பெருமை |
| கூறு | 5. | சான்றாண்மை |
| கூறு | 6. | பண்புடைமை |
| பிரிவு | 3. | **நாலடியார் - பழமொழி நானூறு** |
| கூறு | 7. | நாலடியார் - அறன் வலியுறுத்தல் |
| கூறு | 8. | நாலடியார் - அறிவுடைமை - பிறர்மனை நயவாமை |
| கூறு | 9. | பழமொழி நானூறு -51-75 வரையிலான பாடல்கள் |
| கூறு | 10. | பழமொழி நானூறு - 76-101 வரையிலான பாடல்கள் |
| பிரிவு | 4. | **திருமந்திரம் - நீதிநெறி விளக்கம்** |
| கூறு | 11. | திருமந்திரம் - யாக்கை நிலையாமை |
| கூறு | 12. | திருமந்திரம் - செல்வம் நிலையாமை |
| கூறு | 13. | திருமந்திரம் - இளமை நிலையாமை |
| கூறு | 14. | நீதிநெறி விளக்கம் - 1 - 50 பாடல்கள் |

## பிரிவு 1. திருக்குறள்

அற இலக்கியம்

குறிப்புகள்

### திருக்குறள் - நூலும் நூலாசிரியரும்

வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் திருக்குறள் கூறுவதால், அதைச் சிறப்பித்துப் பல பெயர்களால் அழைப்பர். அவை திருக்குறள், முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம் என அமையும். கருத்துக்களை இனம், மொழி, பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருந்துவது போல் கூறி உள்ளதால் இந்நூல் ”உலகப் பொதுமறை” என்றும் அழைக்கப்படுகிறது. இதனை இயற்றியவர் கி.மு. 2ம் நூற்றாண்டுக்கும் கி.பி 5ம் நூற்றாண்டுக்கும் இடையில் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருவள்ளுவர் ஆவார்.

### திருக்குறள் - பெயர் விளக்கம்

திருக்குறளில் 1330 குறள்கள் பத்துப் பத்தாக 133 அதிகாரங்களின் கீழ் தொகுக்கப் பெற்றுள்ளன. இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை. அக்காலத்தில் இவ்வகை வெண்பாக்களால் ஆகிய முதல் நூலும் ஒரே நூலும் இதுதான். குறள் வெண்பாக்களால் ஆனமையால் “குறள்’ என்றும் அதன் உயர்வு கருதி “திரு” என்ற அடைமொழியுடன் “திருக்குறள்” என்றும் பெயர் பெற்றது.

### திருக்குறள் - வகைப்பாடு

திருக்குறள் சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினெண் கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் இருக்கிறது. இந்நூல் அறம், பொருள், இன்பம் அல்லது காமம் என்னும் முப்பெரும்

பிரிவுகளாய் (முப்பால்) பிரித்தும் அழகுடன் இணைத்தும் கோர்த்தும் விளக்குகிறது.

## உரையாசிரியர்கள்

திருக்குறளின் பெருமையைத் திருவள்ளுவ மாலையில் பாடிய புலவர்களுக்குப் பின்பு, உரையாசிரியர் குறளின் பெருமையை உணர்ந்து உரை எழுதத் தொடங்கினர். பத்துப் பேர் திருக்குறளுக்குப் பழங்காலத்தில் உரை எழுதியதாகப் பழம்பாடல் ஒன்று உண்டு. அப்பாடல் பின்வருமாறு:

**தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
**பரிமேலழகர் பருதி - திருமலையாள்**
**மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர் நூற்று**
**எல்லையுரை கண்டார் இவர்.**

இப்பத்துப் பேர் உரையில் நமக்கு இன்று கிடைக்கின்ற உரைகள் மணக்குடவர், காளிங்கர், பரிதியார், பரிப்பெருமாள், பரிமேலழகர் ஆகிய ஐவர் உரைகள்தான். இவருள் காலத்தால் முந்தையவர் மணக்குடவர் ஆகலாம் என்பது பொதுக்கருத்து. காலத்தால் பிந்தையவர் பரிமேலழகர். அதனால்தான் பரிமேலழகர் சிறந்த உரை எழுத முடிந்தது. அதோடு பல சுவடி வேறுபாடுகளையும் அவர் காட்டுகிறார். எனவேதான், புகழ் வாய்ந்ததாக விளங்குவதும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதும் பரிமேலழகர் உரைதான். தற்காலத்திலும் பலர் உரை எழுதியுள்ளனர்.

## திருக்குறளின் பண்புகள்

திருக்குறள் சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினெண்கீழ்க் கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் முதலாவதாக

அமைந்திருக்கிறது. இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். மாந்தர்கள் தம் அகவாழ்வில் சுமூகமாக கூடி வாழவும், புற வாழ்வில் இன்பமுடனும், இசைவுடனும், நலமுடனும் வாழவும் தேவையான அடிப்படைப் பண்புகளை விளக்குகிறது.

திருக்குறள் நூலானது திருவள்ளுவனின் சுய சிந்தனை அடிப்படையில் தமிழ் மொழியில் இயற்றப்பட்டது ஆகும். திருக்குறளில் கூறப்பட்டிருப்பவைகள் உலகின் பல்வேறு சமயங்கள் வலியுறுத்துபவையுடன் ஒப்பிடப்பட்டு, அது பல்வேறு சமயங்களுடனும் பொருந்துவதாகப் பல்வேறு சமயத்தாராலும் கருதப்பட்டு வருகிறது.

அற இலக்கியம்

குறிப்புகள்

## திருக்குறளின் பெருமை

"இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை; மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்; மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்" என்று திருக்குறளின் பெருமையைக் குறிப்பிடுவர். சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமான வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது. வள்ளுவம் "தமிழனுக்குரியது" என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் புகழ்ந்துரைத்தார். வள்ளுவப் பொருட் சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார் "எல்லாப் பொருளும் இதன் பால் உள" என்று தெளிந்துரைத்துள்ளார். இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து நுண்பொருட் சிறப்பை உணர்த்துவன.

**அற இலக்கியம் குறிப்புகள்**

வள்ளுவம் தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச்சொல்லிக் கொடுக்கிறது. வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது. வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்று விடாமல் மனித வாழ்வியல் கூறுகளைக் காட்டும் பதிவுகளாக உள்ளது. சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுகவேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது.

வள்ளுவத்தில் உள்ள ஒவ்வொரு குறளும் மனித வாழ்க்கையின் நெறிகளை, வழிமுறைகளைத் தருவன. இந்நூல் முதன்முதலில் கி.பி.1812இல் ஞானப்பிரகாசன் என்பவனால் அச்சேற்றம் கண்டுள்ளது.

திருக்குறள் பொருளதிகாரத்தில் ஒழிபியல் பகுதியில் முதல் ஐந்து அதிகாரங்களான குடிமை மற்றும் மானம் ஆகிய இரண்டும் பிரிவு ஒன்றிலும், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை ஆகிய மூன்றும் பிரிவு இரண்டிலும் பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

## கூறு 1. வாழ்வியல் நூல் திருக்குறள்

அற இலக்கியம்

குறிப்புகள்

1.0. பாட அமைப்பு
1.1. முன்னுரை
1.2. குறிக்கோள்கள்
1.3. வாழ்வியல் நூல் திருக்குறள்
1.3.1. வள்ளுவரின் ஊன்றுகோல்
1.3.2. துன்ப நெறி
1.3.3. ஒழுக்க நெறி
1.3.4. கொல்லாமை நெறி
1.3.5. செய்ந்நன்றி நெறி
1.3.6. உயர் நெறி
1.3.7. செல்வ நெறி
1.4. தொகுத்துக் காண்போம்
1.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
1.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்
1.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 1.1. முன்னுரை

திருவள்ளுவர் யாத்த முப்பால் நூல் திருக்குறள். இது அறம், பொருள், இன்பம் என்ற மூன்று இயல்களால் ஆனது. மனிதன் மனிதனுக்கு நீதியை உணர்த்த எழுந்தது திருக்குறள். மனிதன் வாழவேண்டிய நெறிகள், வாழக் கூடாத நெறிகள் என்று எடுத்தோதும் விதத்தில் இந்நூல் அமைந்திருக்கிறது. இங்குத் திருக்குறள் வாழ்வியல் நூல் என்பதாக எடுத்துரைக்கப்படுகிறது.

அற இலக்கியம்

குறிப்புகள்

## 1.2. குறிக்கோள்கள்

⇒ வள்ளுவரின் ஊன்றுகோல் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
⇒ வள்ளுவரின் துன்ப நெறி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
⇒ வள்ளுவரின் ஒழுக்க நெறி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
⇒ வள்ளுவரின் கொல்லாமை நெறி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
⇒ வள்ளுவரின் செய்ந்நன்றி நெறி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
⇒ வள்ளுவரின் உயர் நெறி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
⇒ வள்ளுவரின் செல்வ நெறி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 1.3. வாழ்வியல் நூல் திருக்குறள்

மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் - வாழ்க்கை வழி நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள் என்னும் வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல் என்பதை உறுதிப்படுத்துகிறது. இதனைப் பின்வரும் சில கருத்துக்கள் மூலம் சுட்டலாம்.

### 1.3.1. வள்ளுவரின் ஊன்றுகோல்

உயிரினத்தின் உச்சியில் வாழும் இன்றைய மனிதனை, அவனது வாழ்க்கையைப் பகுத்து நோக்கி, அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கை வாழ வள்ளுவம் வழி காட்டுகிறது. எதிலும் விரைவும், ஓட்டமும் காட்டும் இந்த நூற்றாண்டு மனிதனுக்கு உள்ளத்தை உறுதிப்படுத்தவும் வாழ்வியல் பொருண்மை தெளிவு பெறவும் வள்ளுவர் வாக்கு ஊன்றுகோலாய் இருக்கிறது.

## 1.3.2. துன்ப நெறி

அற இலக்கியம்

குறிப்புகள்

- ⇒ தன்னை வணங்குபவர், வணங்காதவர் என்ற பாகுபாடு கடவுளுக்குக் கிடையாது. அவரது திருவடிகளைச் சரணடைந்தவர்களுக்கு எப்போதும் இன்பமே உண்டாகும். மனம், மொழி, மெய் ஆகிய மூன்றாலும் மனிதன் அடக்கத்துடன் வாழவேண்டும். அவ்வாறு இல்லாமல் கர்வத்துடன் வாழ்பவன் துன்பம் அடைவது உறுதி.
- ⇒ தனக்கு நேர்ந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதும், யாருக்கும் தீங்கு செய்யாமல் வாழ்வதுமே தவ வாழ்விற்குரிய தகுதிகள்.
- ⇒ ஒரு சபையில் உள்ள பலருக்கும் கோபம் உண்டாகும்படி, பயனற்ற வார்த்தைகளைப் பேசுகின்றவன், எல்லாராலும் இகழப்படுவான். அவமானமும் அடைவான்.
- ⇒ பிறருக்குச் சொந்தமான பொருளைத் திருட வேண்டுமென, மனதில் நினைப்பது தீமையுண்டாக்கும்.
- ⇒ உடலின் வெளிப்புறத்தைத் தண்ணீரால் சுத்தப்படுத்தலாம். ஆனால், உடலின் உட்புறமாகிய உள்ளத்தை, உண்மைதான் தூய்மைப்படுத்தும்.
- ⇒ யாரிடத்திலும் கோபம் கொள்ளக்கூடாது. ஏனெனில், தீங்கு செய்யத் தூண்டுகின்ற மனோபாவம் கோபத்தினால்தான் உண்டாகிறது.
- ⇒ ஒருவர், பிறருக்குச் செய்யும் துன்பங்கள் எல்லாம், செய்தவரையே வந்து சேரும். அதனால், தமக்குத் துன்பம் வரக் கூடாது என்று விரும்புகிறவர்கள், பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருக்க வேண்டும்.

⇒ துன்பமற்ற நிலை எது என்றால், இந்த உலகில் பிறக்காமல் இருப்பது தான். பிறவா நிலை வேண்டுமானால், ஆசை அழிய வேண்டும்.

⇒ மறந்தும், ஒருவருக்குக் கேடு செய்ய நினைக்கக் கூடாது. மீறி நினைத்தால், அப்போதே தர்ம தேவதை, கேடு நினைக்கிறவனுக்குக் கேடுண்டாக்க நினைத்து விடுவான்.

## 1.3.3. ஒழுக்க நெறி

⇒ கற்ற கல்வியை ஒருவன் மறந்து விட்டாலும், மீண்டும் கற்றுக் கொள்ள முடியும். ஆனால், ஒழுக்கத்தை மறந்து விட்டால் அதை ஒருநாளும் திரும்பப் பெற முடியாது.

⇒ ஒழுக்கமே மனிதனுக்குச் சிறப்பினை அளிப்பதால், அதனை உயிர் போல எண்ண வேண்டும்.

⇒ ஒருவனுக்கு மேன்மையுண்டாக்குவது நல்ல நடத்தைதான். எனவே, ஒழுக்கத்தை உயிரை விடச் சிறந்ததாகப் போற்ற வேண்டும்.

⇒ ஒழுக்கம் கொண்டவன், நல்ல சிந்தனையோடு இனிய சொற்களையே பேசுவான். மறந்தும் அவனால் கொடுஞ்சொற்களைப் பேச முடியாது.

⇒ ஒழுக்கமற்றவன் மனிதனாகவே கொள்ளப்படமாட்டார்.

⇒ ஒழுக்கமுடையவன் கீழ்மக்களானாலும் மேன்மக்களாகக் கருதப்படுவர்.

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. வள்ளுவரின் ஊன்றுகோலாய் அமைவது எது?

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

2. வள்ளுவரின் துன்ப நெறி யாது?

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

3. வள்ளுவரின் ஒழுக்க நெறி யாது?

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

## 1.3.4. கொல்லாமை நெறி

⇒ உயிர்களைக் கொல்லாமலும், மாமிசம் சாப்பிடாமலும் இருப்பவரைக் கண்டால், எல்லா உயிர்களும் கை கூப்பி வணங்கும்.

⇒ புண்ணியச் செயல் எதுவென்றால், உயிர்க்கொலை செய்யாதிருப்பது. கொலை செய்வது மற்ற எல்லாப் பாவங்களையும் உண்டாக்கும்.

அற இலக்கியம்

குறிப்புகள்

⇒ பாவங்களிலேயே மிகப்பெரிய பாவம் உயிர்க்கொலை செய்தல். ஆகவே, கொல்லாமை மிக உயர்ந்த பண்பாகும்.

## 1.3.5. செய்ந்நன்றி நெறி

⇒ எந்த நன்றியை மறந்தவருக்கும் மன்னிப்பு உண்டு. ஆனால், செய்த நன்றியை மறந்தவர்களுக்கு மன்னிப்பே கிடையாது.

⇒ எதை வேண்டுமானாலும் மறந்து விடலாம். ஆனால், வில்லங்கப்பட்ட நேரத்தில் ஒருவர் செய்த உதவியை ஒருபோதும் மறப்பது கூடாது.

⇒ தேவையான சமயத்தில் கேட்காமலே செய்யும் உதவிக்கு, வானமும், இந்த பூமியும் கூட ஈடு இணை கிடையாது.

⇒ ஒருவன் மற்றவரால் பெற்ற எந்த பயனை வேண்டுமானாலும் மறக்கலாம். அதிலிருந்து மீள வழி உண்டு. ஆனால் பிறர் செய்த நன்றியை மறந்தவர்களுக்குப் பரிகாரமே கிடையாது.

⇒ கைமாறு கருதாமல் உலகம் செழிக்க மழை பெய்வது போல, நல்லவர்கள் எதையும் எதிர்பார்க்காமல் மற்றவர்களுக்கு உதவி செய்ய முன் வருவர்.

⇒ பெற்றோருக்குப் பிள்ளை செய்யும் கடமை, இவன் தந்தை இவனை பிள்ளையாகப் பெற முற்பிறவியில் என்ன தவம் செய்தானோ? என்று பிறர் பேசும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.

## 1.3.6. உயர்நெறி

⇒ சோர்வில்லாமல் ஆர்வத்துடன் உழைப்பவன் விதியைக் கூட மாற்றி அமைக்கும் வலிமையைப் பெறுவான்.

அற இலக்கியம்

குறிப்புகள்

⇒ அடக்கம் என்னும் பண்பு அனைவருக்கும் நன்மை அளிப்பதாகும். அதிலும் பணம் படைத்தவர்கள் அடக்கத்துடன் வாழ்ந்தால் உலகமே அவர்களைப் போற்றி வணங்கும்.

⇒ தீயிலிட்ட பொன் ஒளிவீசிப் பிரகாசிப்பது போல, பொறுமையைக் கடைபிடிப்பவன் வாழ்வில் பெருமை பெறுவான்.

⇒ தெய்வத்தை வழிபட்டு கூட, ஒரு செயல் நடக்காமல் போகலாம். ஆனால், முயற்சிக்குத் தகுந்த பலன் ஒருநாள் கிடைத்தே தீரும்.

⇒ சொல்லில் இனிமையும், செயலில் பணிவும் இருந்து விட்டால், ஒருவனுக்கு வேறு எந்த நகையும் தேவைப்படாது. அழகு அவனிடம் எப்போதும் குடியிருக்கும்.

⇒ வீட்டிற்கு வந்த விருந்தினர்களை முகமலர்ச்சியுடன் வரவேற்கும் பண்பு வேண்டும். அத்தகைய பண்பு இருப்பவனின் வயலில் விதை விதைக்காமலே, தானாக நெற்பயிர் செழித்து வளர்ந்தோங்கும்.

⇒ அன்பு கருணை பணிவு உள்ளவன் மனித வடிவில் தெய்வம். ஒருவனுக்கு உயிர் இருக்கிறது என்பதற்கு அடையாளமே அன்புதான். அன்பு இல்லாதவனின் உடம்பு, எலும்பும் தோலும் போர்த்திய சதைத் தொகுப்பே ஆகும்.

⇒ பிறருக்கு நல்ல பயனைக் கொடு. இனியசொல் பேசு. விரும்பத் தகுந்த சிறப்பைக் கொடு. இப்படி செய்தால், நன்மை செய்பவன், பெறுபவன் இருவருக்கும் நன்மையாக அமையும்.

அற இலக்கியம்

குறிப்புகள்

### 1.3.7. செல்வ நெறி

⇒ தர்மத்தை உணர்ந்தவர்களிடமும், பிறர் பொருளை அபகரிக்கும் ஆசை இல்லாதவர்களிடமும் திருமகள் கடாட்சம் தானாகவே வந்து சேரும்.

⇒ செல்வம் இல்லாதவன் இந்த உலகத்தில் வாழ முடியாது. அதுபோல் உயிர்களிடம் இரக்கம் இல்லாதவன், மேல் உலகத்தில் வாழ்வு பெற முடியாது.

⇒ எக்காலத்திலும் அழிவில்லாத செல்வம் கல்வி மட்டும் தான். மற்ற செல்வங்கள் ஒருவரிடம் தங்கியிருப்பதில்லை.

⇒ ஊருணியில் நிறைந்திருக்கும் நீர் மக்களின் தேவைக்குப் பயன்படுவது போல, நல்லவர்களிடம் உள்ள பணம் எல்லாருக்குமே பயன்தரும்.

⇒ பூரண நற்குணம் உள்ளவன் என்ற பெருமை, ஒருவனை விட்டு நீங்காமலிருக்க வேண்டுமானால், பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டும். பொறாமை என்ற பாவம் செல்வத்தை அழித்து விடும். பல தீமைகளிலும் தள்ளி விடும்.

⇒ செல்வம் நிலையற்றது. அதைப் பேணிக் காப்பதையே தன்னுடைய வாழ்நாள் முழுவதும் குறிக்கோளாகக் கொண்டு வாழ்தல் கீழோர் செயற்பாடே ஆகும்.

⇒ செல்வத்தில் சிறந்த செல்வம் மக்கட் செல்வமே. அம்மக்கட்செல்வம் இல்லாதவன் பொருட் செல்வம் எவ்வளவு வைத்திருந்தாலும் கீழ்மக்களாகவே கருதப்படுவர்.

⇒ எவ்வளவுதான் செல்வச் செழிப்போடு வாழ்ந்தாலும் பொருட் செல்வம் இழந்தார்க்கு இவ்வுலகம் இருண்ட காடாகத் திகழும்.

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

4. பாவம் தோன்றுவதை வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

5. செய்ந்நன்றி குறித்து வள்ளுவர் குறிப்பிடுவன யாவை?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

6.. உயர் நெறிகளாக வள்ளுவர் குறிப்பிடுவன யாவை?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

7.. வள்ளுவர் உணர்த்தும் செல்வ நெறி யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

8. செல்வத்துட் சிறந்த செல்வம் எது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

குறிப்புகள்

## 1.4. தொகுத்துக் காண்கோம்

⇒ வள்ளுவரின் ஊன்றுகோல் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ வள்ளுவரின் துன்ப நெறி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ வள்ளுவரின் ஒழுக்க நெறி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ வள்ளுவரின் கொல்லாமை நெறி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ வள்ளுவரின் செய்ந்நன்றி நெறி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ வள்ளுவரின் உயர் நெறி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ வள்ளுவரின் செல்வ நெறி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 1.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | 1.3.1. | 5. | 1.3.5. |
| 2. | 1.3.2. | 6. | 1.3.6. |
| 3. | 1.3.3. | 7. | 1.3.7. |
| 4. | 1.3.4. | 8. | 1.3.7. |

## 1.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. உயர்நெறிச் சிந்தனைகளாக வள்ளுவர் குறிப்பிடுவன பற்றிக் கட்டுரை வரைக.
2. வள்ளுவத்தின் வாழ்வியல் சிந்தனைகள் பற்றிக் கட்டுரை வரைக.

## 1.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. அர. வெங்கடாசலம், திருக்குறள் புதிர்களும் தீர்வுகளும் ஓர் உளவியல் பார்வை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2012.
2. முனைவர் மோ.கோ. கோவைமணி, திருக்குறள் ஆய்வுமாலை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2012.

## கூறு 2. குடிமை

2.0. பாட அமைப்பு

2.1. முன்னுரை

2.2. குறிக்கோள்கள்

2.3. குடிமை

2.4. தொகுத்துக் காண்போம்

2.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

2.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

2.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 2.1. முன்னுரை

ஒவ்வொரு மொழியிலும் இயற்றப்பெற்றிருக்கும் இலக்கிய இலக்கணங்களைப் பொருத்தே அந்தந்த மொழி ஏற்றம் பெறுகிறது. அந்த வகையில் பார்க்கும்போது திருக்குறளுக்கு இணையான இலக்கியம் எம்மொழியிலும் தோன்றவில்லை. இந்நூலில் இடம்பெற்றிருக்கும் 133 அதிகாரங்களில் 96ஆவது அதிகாரமே குடிமை.

இக்குடிமை அதிகாரம் பொருளதிகாரத்துள் இடம்பெற்றுள்ள அரசியல், அங்கவியல், ஒழிபியல் ஆகிய மூன்று இயல்களுள் ஒன்றான ஒழிபியலில் முதலாவதாக அமைந்திருக்கிறது. உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மையை இவ்வதிகாரம் எடுத்துரைக்கிறது. நான்கு வகை வருணத்தார்க்கும் உயர்ந்த இக்குடிப்பிறப்பு இன்றியமையாததாக அமைகிறது. இக்குடிமை அதிகாரத்துள் இடம்பெற்றுள்ள பத்துப் பாக்களே உங்கள் பாடப் பகுதியில் இரண்டாவது கூறின் பாடப் பகுதியாக அமைந்திருக்கிறது.

அற இலக்கியம்

குறிப்புகள்

## 2.2. குறிக்கோள்கள்

⇒ பண்புடைய குடியில் பிறந்தவர் எவ்வாறு விளங்குவர் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பண்புடையோர் இயல்பைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பண்புடையோர் செய்யத் தக்கன பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பண்புடையோர் செய்யத் தகாதன பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பண்பில்லாதவர் எவ்வாறு இருப்பர் என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 2.3. குடிமை

**இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்**
**செப்பமும் நாணும் ஒருங்கு.**

என்பது, பண்புடைய குடியில் பிறந்தவர்களுக்குச் செம்மையும் நாணமும் இயல்பாக அமையும். ஏனையவர்க்கு அவை இயல்பாக அமையாது என்பதாகும்.

(1)

**ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்.**

என்பது, பண்புடைய குடியில் பிறந்தவர்களுக்கு ஒழுக்கமும் உண்மையும் நாணமும் என்ற மூன்றும் இயல்பாக அமையும். இம்மூன்றினின்றும் அவர் தவறமாட்டார் என்பதாகும்.

(2)

குறிப்புகள்

**நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்**
**வகையென்ப வாய்மைக் குடிக்கு.**

என்பது, இயல்பான புன்சிரிப்பும், கொடுக்கும் தன்மையும் இனிய சொற்களைப் பேசுதலும் பிறரை இகழாமையும் ஆகிய நான்கு பண்புகளும் பண்புடைய குடியில் தோன்றியவர்களுக்கு இயல்பாக அமையும் என்பதாகும்.

(3)

**அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்.**

என்பது, கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் பண்புடைய குடியில் பிறந்தவர்கள் தமக்கு மதிப்புக் குறைவு வரும் செயல்களைச் செய்யமாட்டார்கள் என்பதாகும்.

(4)

**வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பின் தலைப்பிரிதல் இன்று.**

என்பது, வருகின்ற வருவாய்க் குறைவால் வழங்குவது குறையாக இருந்தாலும், பண்புடைய பழங்குடியில் பிறந்தோர் தம் இயல்பில் இருந்தும் மாறுதல் இலர் என்பதாகும்.

(5)

**சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற**
**குலம்பற்றி வாழ்துமென் பார்.**

என்பது, குற்றம் அற்ற பண்புடைய குலத்தில் தோன்றியவர் தாம் வறுமை அடைந்த நிலையிலும், பண்பு அல்லாதனவற்றைச் செய்யார் என்பதாகும்.

(6)

அற இலக்கியம் குறிப்புகள்

**குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்**
**மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.**

என்பது, பண்புடைய குடியில் பிறந்தவர்களுடைய குற்றம் வானத்தில் இருக்கும் மதியின் கண் தோன்றும் மறுப்போல் தோன்றும் என்பதாகும். (7)

**நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்**
**குலத்தின்கண் ஐயப் படும்.**

என்பது, நல்லவரிடம் அன்பின்மையும் கடுஞ்சொல்லும் இரக்கமின்மையும் இருந்தால் பண்புடைய குடியில் தோன்றினானா? என்ற ஐயம் எழும் என்பதாகும்.

(8)

**நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**
**குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.**

என்பது, நிலத்தில் கிடந்த முளை நிலத்தின் தன்மையைக் காட்டும். அதேபோன்று பண்புடைய குடியில் தோன்றியவர்கள் பண்பினை அவர்கள் வாய்ச்சொற்கள் காட்டும் என்பதாகும்.

(9)

**நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்**
**வேண்டுக யார்க்கும் பணிவு.**

என்பது, ஒருவர் தமக்கு நன்மையை விரும்புவாராயின் நாணத்தையும் விரும்ப வேண்டும். அதேபோன்று பண்புடைய குடியை வேண்டுவாராயின் பணிவுடைமை வேண்டும் என்பதாகும்.

(10)

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. இயல்பாக அமையும் பண்புகளாக வள்ளுவர் கூறுவன யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

2. பண்புடையார் குற்றம் எவ்வாறு இருக்கும்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

3. பண்புடையாரின் பண்பினை அடையாளப்படுத்துவது எது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

4. பணிவுடைமை யாருக்கு வேண்டும்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------



குறிப்புகள்

## 2.4. தொகுத்துக் காண்போம்

குறிப்புகள்

⇒ பண்புடைய குடியில் பிறந்தவர் எவ்வாறு விளங்குவர் என்பது பற்றித் தெரிந்து கொண்டோம்.

⇒ பண்புடையோர் இயல்பைப் பற்றித் தெரிந்து கொண்டோம்.

⇒ பண்புடையோர் செய்யத் தக்கன பற்றித் தெரிந்து கொண்டோம்.

⇒ பண்புடையோர் செய்யத் தகாதன பற்றித் தெரிந்து கொண்டோம்.

⇒ பண்பில்லாதவர் எவ்வாறு இருப்பர் என்பதைப் பற்றித் தெரிந்து கொண்டோம்.

## 2.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்:

1. 2.3. (1-5 பாடல்கள்)
2. 2.3. (7ம் பாடல்)
3. 2.3. (9ம் பாடல்)
4. 2.3. (10ம் பாடல்)

## 2.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. உயர்குடிப் பிறந்தாரின் இயல்பினை வள்ளுவப் பெருந்தகை எவ்வாறு எடுத்துரைக்கிறார்?

2. பண்புடையாரை அடையாளப்படுத்தும் நிலைகளை வள்ளுவப் பெருந்தகை எடுத்துரைப்பதைக் காட்டுக.

## 2.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. திருக்குறள் - பரிமேலழகர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.
2. அர. வெங்கடாசலம், திருக்குறள் புதிர்களும் தீர்வுகளும் ஓர் உளவியல் பார்வை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2012.
3. முனைவர் மோ.கோ. கோவைமணி, திருக்குறள் ஆய்வுமாலை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2012.




குறிப்புகள்

குறிப்புகள்

## கூறு 3. மானம்


3.0. பாட அமைப்பு

3.1. முன்னுரை

3.2. குறிக்கோள்கள்

3.3. மானம்

3.4. தொகுத்துக் காண்போம்

3.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

3.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

3.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


## 3.1. முன்னுரை

ஒவ்வொரு மொழியிலும் இயற்றப்பெற்றிருக்கும் இலக்கிய இலக்கணங்களைப் பொருத்தே அந்தந்த மொழி ஏற்றம் பெறுகிறது. அந்த வகையில் பார்க்கும்போது திருக்குறளுக்கு இணையான இலக்கியம் எம்மொழியிலும் தோன்றவில்லை. இந்நூலில் இடம்பெற்றிருக்கும் 133 அதிகாரங்களில் 97ஆவது அதிகாரமே மானம். இவ்வதிகாரம் பொருளதிகாரத்துள் இடம்பெற்றுள்ள அரசியல், அங்கவியல், ஒழிபியல் ஆகிய மூன்று இயல்களுள் ஒன்றான ஒழிபியலில் இரண்டாவதாக அமைந்திருக்கிறது. உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது குணங்களில் ஒன்றாகிய மானம் பற்றி இவ்வதிகாரம் எடுத்துரைக்கிறது. அ∴தாவது எஞ்ஞான்றும் தந்நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர்வாழாமையுமாகும். இம்மானம் என்னும் அதிகாரத்துள் இடம்பெற்றுள்ள பத்துப் பாக்களே உங்கள் பாடப் பகுதியில் மூன்றாவது கூறின் பாடப் பகுதியாக அமைந்திருக்கிறது.

## 3.2. குறிக்கோள்கள்

குறிப்புகள்

- ⇒ செய்யத்தகாத செயல்கள் எவையெனை என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ வறுமையிலும் உயர்வுடைமை வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ பண்புடையாரின் இழிச்செயல் எவ்வாறு இருக்கும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ மானத்தைக் காக்கும் மருந்து எது என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ மானம் உடையாரின் செயல் எத்தகையது என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 3.3. மானம்

**இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்**
**குன்ற வருப விடல்.**

என்பது, ஒரு செயலைச் செய்யும் போது அச்செயலைச் செய்வதால் அது சிறப்பினை உடையதாகத் தோன்றினாலும் தன்னுடைய குடிப்பிறப்பிற்கு இழிவுதரும் செயலாக இருந்தால் அதைச் செய்யாது இருத்தல் வேண்டும் என்பதாகும்.

(1)

**சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு**
**பேராண்மை வேண்டு பவர்.**

என்பது, தமக்குப் பொருள் மிகுதியாக வரும் என்று இருந்தாலும், தம் குடிக்குப் பொருந்தாத இழிந்த செயல்களைச் செய்யார். தம்புகழுடன் மானத்தையும் நிலை நிறுத்த விரும்புவர் என்பதாகும்.

(2)

**பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய**
**சுருக்கத்து வேண்டும் உயர்வு.**

என்பது, பண்புடைய குடியில் தோன்றியவர்க்கு நிறைந்த மிகுதியான செல்வம் இருக்கும் போது பணிவுடைமை வேண்டும். அதே வேளையில் சிறிது வறுமை இருந்தால் உயர்வுடைமை வேண்டும் என்பதாகும்.

(3)

**தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்**
**நிலையின் இழிந்தக் கடை.**

என்பது, பண்புடைய மனிதர் தம் நிலையில் இருந்து தாழ்ந்த செயலைச் செய்யும் போது தலைநின்றும் நீங்கின மயிருக்கு ஒப்பாவர் என்பதாகும்.

(4)

**குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ**
**குன்றி அனைய செயின்.**

என்பது, உயர்ந்த பண்புடைய குடியில் தோன்றியவர்கள் குன்றி மணியளவு தாழ்வான செயலைச் செய்தாலும் தாழ்ந்த நிலை அடைவர் என்பதாகும்.

(5)

**புகழின்றால் புத்தேணாட் டுய்யாதால் என்மற்**
**றிகழ்வார்பின் சென்று நிலை.**

என்பது, இவ்வுலகத்துப் புகழ் இல்லை எனில் மேல் உலகத்திலும் இடம் இல்லை. அங்ஙனம் இருக்க ஏன் தம்மை அவமதிப்பார் பின் சென்று மானம் இழக்க வேண்டும் என்பதாகும்.

(6)

**ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப்படுதல் நன்று.**

என்பது, தன்னை மதியாதவர் பின் சென்று பொருள் பெற்று வாழ்வதைக் காட்டிலும் அதைச் செய்யாது அழிந்தான் எனச் சொல்லப்படுதல் நன்று என்பதாகும்.

(7)

**மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடழிய வந்த இடத்து.**

என்பது, பண்புடைய குடியில் பிறந்தவர்களுக்குக் குடிப்பண்பாகிய பெருமை அழிய நேர்ந்த இடத்தில் மானத்துடன் இறக்காது. இன்னும் உடலைப் பாதுகாப்பதற்காக வாழ்கின்ற வாழ்க்கை மானத்தைக் காக்கும் மருந்தாக அமையுமோ? அமையாது என்பதாகும்.

(8)

**மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்.**

என்பது, ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரி மானைப் போன்று மானம் உடையவர்கள் மானம் அழிய நேரிட்டால் உடனே உயிர் விடுவர் என்பதாகும்.

(9)

**இளிவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழு தேத்தும் உலகு.**

என்பது, இழிவு வந்தால் உயிர் விடும் மானம் உடையவரின் புகழினை இந்த உலகு வணங்கி ஏத்திப் பாராட்டும் என்பதாகும்.

(10)

அற இலக்கியம்

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. இழிந்த செயலைச் செய்யாதார் யார்?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

2. நிறை செல்வம் இருப்பார்க்கு வேண்டுவது யாது?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

3. தாழ்ந்த நிலையுடையாரின் செயல்கள் யாவை?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

4. மானமுடையாரின் பண்புகள் யாவை?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

குறிப்புகள்

## 3.4. தொகுத்துக் காண்போம்

⇒ செய்யத்தகாத செயல்கள் எவையெனை என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ வறுமையிலும் உயர்வுடைமை வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பண்புடையாரின் இழிச்செயல் எவ்வாறு இருக்கும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ மானத்தைக் காக்கும் மருந்து எது என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ மானம் உடையாரின் செயல் எத்தகையது என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 3.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 3.3. (2ம் பாடல்)
2. 3.3. (3ம் பாடல்)
3. 3.3. (4-5ம் பாடல்கள்)
4. 3.3. (7-10ம் பாடல்கள்)

## 3.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. மானமுடையாரின் செயற்பாடுகள் எவ்வாறமையும் என்பதை வள்ளுவப் பெருந்தகையின் வாக்கால் எடுத்துரைக்க.
2. மானமில்லாதாரின் செயற்பாடுகள் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை?

## 3.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

குறிப்புகள்

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.

2. அர. வெங்கடாசலம், திருக்குறள் புதிர்களும் தீர்வுகளும் ஓர் உளவியல் பார்வை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2012.

3. முனைவர் மோ.கோ. கோவைமணி, திருக்குறள் ஆய்வுமாலை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2012.

## பிரிவு 2. திருக்குறள்

## பெருமை - சான்றாண்மை - பண்புடைமை

## கூறு 4. பெருமை


4.0. பாட அமைப்பு

4.1. முன்னுரை

4.2. குறிக்கோள்கள்

4.3. பெருமை

4.4. தொகுத்துக் காண்போம்

4.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

4.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

4.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


## 4.1. முன்னுரை

ஒவ்வொரு மொழியிலும் இயற்றப்பெற்றிருக்கும் இலக்கிய இலக்கணங்களைப் பொருத்தே அந்தந்த மொழி ஏற்றம் பெறுகிறது. அந்த வகையில் பார்க்கும்போது திருக்குறளுக்கு இணையான இலக்கியம் எம்மொழியிலும் தோன்றவில்லை. இந்நூலில் இடம்பெற்றிருக்கும் 133 அதிகாரங்களில் 99ஆவது அதிகாரமே பெருமை. இவ்வதிகாரம் பொருளதிகாரத்துள் இடம்பெற்றுள்ள அரசியல், அங்கவியல், ஒழிபியல் ஆகிய மூன்று இயல்களுள் ஒன்றான ஒழிபியலில் மூன்றாவதாக அமைந்திருக்கிறது. உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது குணங்களில் ஒன்றாகிய பெருமை பற்றி இவ்வதிகாரம் எடுத்துரைக்கிறது. அ.ஃ.தாவது செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர் குற்றங் கூறாமை போன்ற நற்குணங்களே பெரியோரின் பெருமைகளாகும். இப்பெருமைகளைப் பெருமை

அற இலக்கியம் குறிப்புகள்

என்னும் அதிகாரத்துள் இடம்பெற்றுள்ள பத்துப் பாக்கள் எடுத்துரைக்கிறது. இப்பத்துப் பாடல்களே உங்கள் பாடப் பகுதியில் நான்காவது கூறின் பாடப் பகுதியாக அமைந்திருக்கிறது.

## 4.2. குறிக்கோள்கள்

⇒ ஒரு மனிதனின் பெருமை எதனால் அமைகிறது என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ சமுதாயத்தில் யாரெல்லாம் மேலோர், கீழோர் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ செல்வத்தின் நிலைப்பாடு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பெருமையுடையோரின் பண்பு நிலைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 4.3. பெருமை

**ஒளியொருவற் குள்ள வெறுக்கை இளியொருவற்**
**கஃதிறந்து வாழ்தும் எனல்.**

என்பது, புகழ் என்பது ஒருவருடைய மனத்தின் பெருமை, இளி என்பது புகழ் இன்றியும் அல்லது மனச் செல்வம் இன்றியும் வாழலாம் என்பதாகும்.

(1)

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

என்பது, பிறப்பால் எல்லா மனிதரும் ஒத்த நிலையினரே. செய்கின்ற தொழிலின் பெருமை சிறுமையால் சிறப்பும் தாழ்வும் அமையாது. பண்பால் தான் சிறப்பும் தாழ்வும் அமையும் என்பதாகும்.

(2)

**மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்**

**கீழல்லார் கீழல் லவர்.**

என்பது, சமுதாயத்தில் மேல் மட்டத்தில் இருப்பவர்கள் மேலோர் என்று கருத முடியாது. கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் கீழோர் என்றும் கருத முடியாது. பண்பாலும் செயலாலுமே மேன்மையும் கீழ்மையும் அளக்கப்படும் என்பதாகும்.

(3)

**ஒருமை மகளிரே போலப் பெருமையும்**

**தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.**

என்பது, ஒப்பற்ற பண்புடைய பெண்டிரைப் போல பெருமையும் தன்னைத் தானே நடைமுறைப்படுத்தி வாழ்பவர்களிடம் மட்டுமே காணப்பெறும் என்பதாகும்.

(4)

**பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**

**அருமை யுடைய செயல்.**

என்பது, உயர்ந்த பண்புகளை உடையவர் அரிய செயல்களை முறைமையாக இடைவிடாது செய்வர் என்பதாகும்.

(5)

**சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்**

**பேணிக்கொள் வேமென்னும் நோக்கு.**

என்பது, பண்புடைய பெரியவர்களைப் போற்றி பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்னும் எண்ணம் தாழ்ந்த நிலையுடையவர்க்கு இல்லை என்பதாகும்.

(6)

**இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்**

**சீரல் லவர்கண் படின்.**

என்பது, செல்வமானது தனக்கு நிகரில்லாதார் இடத்து இருக்குமாயின் அச்செல்வத்தை இறந்தவர்கள் இடத்து கொடுத்ததை ஒக்கும். அச்செல்வம் பயன்படாது போகும் என்பதாகும்.

(7)

**பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து.**

என்பது, பெருமை உடையவர்கள் என்றும் எவ்விடத்தும் பணிவோடு இருப்பர். சிறுமை உடையவர்கள் எப்போதும் தம்மை வியந்து பேசிக்கொண்டே இருப்பர் என்பதாகும்.

(8)

**பெருமை பெருமிதம் இன்மை சிறுமை**
**பெருமிதம் ஊர்ந்து விடல்.**

என்பது, உயர்ந்த பண்புடையவர்கள் தம் பெருமையைப் பெருமிதத்தின் வழியாகக் காட்டுவதில்லை. ஆனால் சிறுமைக் குணம் உடையவர்கள் பெருமை இன்றியும் பெருமிதத்தோடு தம்மைக் காட்டுவர் என்பதாகும்.

(9)

**அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்**
**குற்றமே கூறி விடும்.**

என்பது, நல்ல பண்புடையவர்கள் பிறருடைய பெருமையைக் கூறி குறையைக் கூறாதிருப்பர். சிறுமை உடையோர் பிறரின் குற்றங்களைக் கூறி பெருமையைக் கூறாதிருப்பர் என்பதாகும்.

(10)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. புகழுக்கும் இளிக்கும் என்ன வேறுபாடு?

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

2. மேன்மை - கீழ்மை இவற்றின் அளவுகோல் யாது?

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

3. செல்வம் எங்கு இருக்க வேண்டும்?

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

4. பெருமையுடையோர் - சிறுமையுடையோர் பண்புகள் யாவை?

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------

அற இலக்கியம்

குறிப்புகள்

## 4.4. தொகுத்துக் காண்போம்

⇒ ஒரு மனிதனின் பெருமை எதனால் அமைகிறது என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ சமுதாயத்தில் யாரெல்லாம் மேலோர், கீழோர் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ செல்வத்தின் நிலைப்பாடு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பெருமையுடையோரின் பண்பு நிலைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 4.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 4.3. (1ம் பாடல்)
2. 4.3. (3ம் பாடல்)
3. 4.3. (7ம் பாடல்)
4. 4.3. (8-10ம் பாடல்கள்)

## 4.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சி

1. பெருமை அதிகாரத்தில் வள்ளுவர் எடுத்துரைக்கும் கருத்துக்களை எடுத்துக்காட்டுடன் கட்டுரை வரைக.
2. மேலோர் பற்றியும் கீழோர் பற்றியும் வள்ளுவரின் கருத்து யாது?
3. பெருமையுடையாரின் பண்புகளை வள்ளுவர் வாக்கால் எடுத்துரைக்க.

## 4.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.
2. அர. வெங்கடாசலம், திருக்குறள் புதிர்களும் தீர்வுகளும் ஓர் உளவியல் பார்வை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2012.
3. முனைவர் மோ.கோ. கோவைமணி, திருக்குறள் ஆய்வுமாலை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2012.

குறிப்புகள்

குறிப்புகள்

## கூறு 5. சான்றாண்மை

5.0. பாட அமைப்பு

5.1. முன்னுரை

5.2. குறிக்கோள்கள்

5.3. சான்றாண்மை

5.4. தொகுத்துக் காண்போம்

5.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

5.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

5.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 5.1. முன்னுரை

ஒவ்வொரு மொழியிலும் இயற்றப்பெற்றிருக்கும் இலக்கிய இலக்கணங்களைப் பொருத்தே அந்தந்த மொழி ஏற்றம் பெறுகிறது. அந்த வகையில் பார்க்கும்போது திருக்குறளுக்கு இணையான இலக்கியம் எம்மொழியிலும் தோன்றவில்லை. இந்நூலில் இடம்பெற்றிருக்கும் 133 அதிகாரங்களில் 99ஆவது அதிகாரமே சான்றாண்மை. இவ்வதிகாரம் பொருளதிகாரத்துள் இடம்பெற்றுள்ள அரசியல், அங்கவியல், ஒழிபியல் ஆகிய மூன்று இயல்களுள் ஒன்றான ஒழிபியலில் நான்காவதாக அமைந்திருக்கிறது. பெருமையுள் அடங்காத பல குணங்களையும் தொகுத்து சான்னுண்மை என்னும் பகுதியில் வள்ளுவப் பெருந்தகை எடுத்துரைக்கிறார். இச்சான்றாண்மை என்னும் அதிகாரத்துள் இடம்பெற்றுள்ள பத்துப் பாக்களே உங்கள் பாடப் பகுதியில் ஐந்தாவது கூறின் பாடப் பகுதியாக அமைந்திருக்கிறது.

## 5.2. குறிக்கோள்கள்

⇒ சான்றோர்தம் செயல்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ சால்பைச் சுமக்கும் தூண்கள் யாவை என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ மனிதர்க்குரிய தவம் எத்தன்மைத்து என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பகைவர் மனத்தை மாற்றும் கருவி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ எவையெல்லாம் பண்டைமையாகது என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 5.3. சான்றாண்மை

**கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து**
**சான்றாண்மை மேற்கோள் பவர்க்கு.**

என்பது, தம் கடமையை அறிந்து செயலாற்றும் பல நற்குணங்களை உடைய சான்றோர் உலகத்தில் உள்ள நல்லவைகளை எல்லாம் செய்தல் வேண்டும் என்பதைத் தம் கடமையாகக் கருதுவர் என்பதாகும்.

(1)

**குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத் துள்ளதூஉ மன்று.**

என்பது, நல்ல பண்புகளைப் பெறுதல் தான் சாற்றோர்க்குரிய தன்மை. ஏனைய பொருட்செல்வம் போன்றவை நலமுடையவனாக கருதுவதற்கு இல்லை என்பதாகும்.

(2)

அற இலக்கியம் குறிப்புகள்

**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ**
**டைந்துசால் பூன்றிய தூண்.**

என்பது, சால்புக்கு அடிப்படையாக அமைபவை 1. எல்லோரிடமும் அன்பாக இருத்தல். 2. பழிபாவத்திற்கு நாணுதல். 3. உலக மக்களுக்கு நம்மை செய்யும் ஒப்புரவுடன் இருத்தல். 4. எல்லா உயிர்களிடமும் இரக்க உணர்வோடு இருத்தல். 5. எவ்விடத்தும் மெய்மையோடு இருத்தல். இவ்வைந்தும் சால்பைச் சுமக்கும் தூண்களாகும் என்பதாகும்.

(3)

**கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு.**

என்பது, சிறந்த தவமாவது பிற உயிர்களைக் கொல்லாதிருத்தல். சிறந்த பண்பாவது பிறர் குற்றத்தைச் சொல்லாதிருத்தல் என்பதாகும்.

(4)

**ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

என்பது, ஒரு செயச் செய்யும் போது செயலாற்றுகின்றவர்கள் துணையாய் இருப்போரைப் பணிந்து அரவணைத்துக் கொள்ளுதல் வேண்டும். அப்பண்பு பகைவர் மனத்தையும் மாற்றும் கருவியாக அமையும் என்பதாகும்.

(5)

**சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்.**

என்பது, சிறந்த பண்பிற்கு அளவுகோல் எது என்று கேட்டால் தமது தோல்வியைத் தம் தகுதிக்குக் குறைந்தவர்களிடமும் ஏற்றுக் கொள்ளுதல் என்பதாகும்.

(6)

அற இலக்கியம்

குறிப்புகள்

**இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.**

என்பது, தமக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்யாதிருந்தால் அது எவ்வாறு பண்புடைமையாக அமையும்? என்பதாகும்.

(7)

**இன்மை ஒருவற் கிழிவன்று சால்பென்னும்**
**திண்மையுண் டாகப் பெறின்.**

என்பது, வறுமை என்பது ஒருவர்க்கு இழிவாகாது. பெரும் பண்பாகிய சான்றாண்மை என்ற குணம் மனத்தில் உறுதியாக இருந்தால் போதும் என்பதாகும்.

(8)

**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்**
**காழி யெனப்படு வார்.**

என்பது, இந்த உலகமே மாற்றம் அடைந்தாலும் சான்றாண்மை என்ற பண்புடையவர்கள் தம் நிலையில் திரியார் என்பதாகும்.

(9)

**சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**
**தாங்காது மன்னோ பொறை.**

என்பது, நல்ல பண்புடையவர்கள் தம் பண்பில் குறைவாராயின் இந்த நில உலகம் அதன் பாரத்தைத் தாங்க இயலாது தவிக்கும் என்பதாகும்.

(10)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. நற்குணமுடைய சான்றோர் இயல்பு யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

2. கொல்லாமைக்குரிய சான்றாண்மை யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

3. பகைவர் மனத்தை மாற்றும் கருவி யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

4. சான்றாண்மை மிக்கோரின் பண்பு நலன்கள் பற்றி வள்ளுவர் குறிப்பிடுவன யாவை?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

## 5.4. தொகுத்துக் காண்போம்

⇒ சான்றோர்தம் செயல்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ சால்பைச் சுமக்கும் தூண்கள் யாவை என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ மனிதர்க்குரிய தவம் எத்தன்மைத்து என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பகைவர் மனத்தை மாற்றும் கருவி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ எவையெல்லாம் பண்புடைமையாகாது என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 5.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 5.3. (1-3ம் பாடல்கள்)
2. 5.3. (4ம் பாடல்)
3. 5.3. (5ம் பாடல்)
4. 5.3. (7-10ம் பாடல்கள்)

## 5.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. சான்றாண்மை நெறியாக வள்ளுவர் கூறுவன யாவை?
2. எவையெல்லாம் பண்புடைய செயல்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

## 5.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.
2. முனைவர் மோ.கோ. கோவைமணி, திருக்குறள் ஆய்வுமாலை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2012.

குறிப்புகள்

குறிப்புகள்

## கூறு 6. பண்புடைமை

6.0. பாட அமைப்பு

6.1. முன்னுரை

6.2. குறிக்கோள்கள்

6.3. பண்புடைமை

6.4. தொகுத்துக் காண்போம்

6.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

6.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

6.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 6.1. முன்னுரை

ஒவ்வொரு மொழியிலும் இயற்றப்பெற்றிருக்கும் இலக்கிய இலக்கணங்களைப் பொருத்தே அந்தந்த மொழி ஏற்றம் பெறுகிறது. அந்த வகையில் பார்க்கும்போது திருக்குறளுக்கு இணையான இலக்கியம் எம்மொழியிலும் தோன்றவில்லை. இந்நூலில் இடம்பெற்றிருக்கும் 133 அதிகாரங்களில் 100ஆவது அதிகாரமே பண்புடைமை. இவ்வதிகாரம் பொருளதிகாரத்துள் இடம்பெற்றுள்ள அரசியல், அங்கவியல், ஒழிபியல் ஆகிய மூன்று இயல்களுள் ஒன்றான ஒழிபியலில் ஐந்தாவதாக அமைந்திருக்கிறது. பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல் என்பதற்கேற்ப இவ்வதிகாரம் அமைந்திருக்கிறது. இப்பண்புடைமை என்னும் அதிகாரத்துள் இடம்பெற்றுள்ள பத்துப் பாக்களே உங்கள் பாடப் பகுதியில் ஆறாவது கூறின் பாடப் பகுதியாக அமைந்திருக்கிறது.

## 6.2. குறிக்கோள்கள்

அற இலக்கியம்

குறிப்புகள்

- ⇒ பண்புடைமை தானாகத் தோன்றும் இயல்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ பண்புடையார்தம் பண்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ பண்பற்றவர்தம் பண்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ பண்பற்றவர்க்காகும் இழுக்கு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ பண்பில்லாதவன் செல்வம் எத்தன்மைத்து என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 6.3. பண்புடைமை

**எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

என்பது, உலகில் மனிதர் எல்லோரிடமும் பணிவோடும் அன்போடும் நடந்தால் பண்புடைமை தானாக வந்து சேரும் என்பதாகும்.

(1)

**அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

என்பது, உலக உயிர்களிடம் அன்புடையவனாக இருந்தாலும் பண்புடைய குடியில் தோன்றியவனாக இருந்தாலும் பண்புடைமை என்னும் இயல்பு தானாக வரும் என்பதாகும்.

(2)

**உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க**
**பண்பொத்தம் ஒப்பதாம் ஒப்பு.**

என்பது, எல்லா மனிதர்க்கும் கண், கை, கால் போன்ற புற உறுப்புக்கள் ஒத்து அமைதல் நல்லவர் என்பதைக் கூறாது. ஆனால்

செறிவான பண்பால் ஒத்து இருந்தால் தான் மனிதராகக் கருதப்பெறுவர் என்பதாகும்.

(3)

**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு.**

என்பது, உலக உயிர்களுக்கு நல்லதையும் தேவையானவற்றையும் செய்த பிறருக்குப் பயன்படுபவராக அமைகின்ற பண்புடையவர்களை உலகம் பாராட்டும் என்பதாகும்.

(4)

**நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு.**

என்பது, விளையாட்டாகக் கூடப் பிறரை இகழ்ந்து கூறுதல் பிழையாகும். பகைவரிடமும் பகைமை பாராட்டாது பண்போடு ஒழுகுதல் பண்புடையவர் இடத்து அமையும் என்பதாகும்.

(5)

**பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.**

என்பது, இந்த உலகம் பண்புடையவர்கள் இருப்பதால்தான் இருக்கிறது. அவர்கள் இல்லை எனில் இந்த உலகம் மண்ணில் புகுந்து அழிந்து விடும் என்பதாகும்.

(6)

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லா தவர்.**

என்பது, மிகுந்த கூர்மையான அறிவுடையவர்களாக இருந்தாலும், நல்ல பண்புகள் இல்லாதவர்களாள் மரத்திற்கு ஒப்பாவர் என்பதாகும்.

(7)

**நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்**

**பண்பாற்றார் ஆதல் கடை.**

என்பது, தம்மோடு நண்பனாக அமையாது பகைமை காட்டி பண்பற்று ஒழுகுவார்க்கும் தாம் பண்பற்று நடத்தல் பண்புடையவர்க்கு இழுக்காகும் என்பதாகும்.

(8)

**நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**

**பகலும்பாற் பட்டன் றிருள்.**

என்பது, மக்களோடு மகிழ்ந்து மகிழ்ச்சியாக வாழ இயலாத பண்பற்றவர்க்கு இந்தப் பெரிய உலகம் பகலும் இருளாக அமையும் என்பதாகும்.

(9)

**பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**

**கலந்தீமை யால்திரிந் தற்று.**

என்பது, பண்பில்லாதவன் சூழ்நிலை காரணமாகப் பெற்ற பெரிய செல்வம் பிறருக்குப் பயன்படாது வீணாவது, நல்ல பால் இட்டு வைத்த பாத்திரத்தின் குற்றத்தால் கெட்டுப்போனதை ஒக்கும் என்பதாகும்.

(10)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. பண்புடைமை தோன்றும் வழி யாது?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

2. எவர் மனிதராகக் கருதப்பெறுவர்?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

3. மரத்திற்கு ஒப்பாவர் யார்?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

4. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எத்தன்மைத்து?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

## 6.4. தொகுத்துக் காண்போம்

⇒ பண்புடைமை தானாகத் தோன்றும் இயல்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பண்புடையார்தம் பண்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பண்பற்றவர்தம் பண்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பண்பற்றவர்க்காகும் இழுக்கு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பண்பில்லாதவன் செல்வம் எத்தன்மைத்து என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 6.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 6.3. (1-2ம் பாடல்கள்)
2. 6.3. (3ம் பாடல்)
3. 6.3. (7ம் பாடல்)
4. 6.3. (10ம் பாடல்)

## 6.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. பண்புடையார்தம் செயற்பாடுகளை வள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
2. பண்பற்றவர்தம் செயற்பாடுகளை வள்ளுவர் எவ்வாறெல்லாம் விளக்குகிறார்?

குறிப்புகள்

## 6.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

குறிப்புகள்

1. திருக்குறள் - பரிமேலழகர் உரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2004.
2. அர. வெங்கடாசலம், திருக்குறள் புதிர்களும் தீர்வுகளும் ஓர் உளவியல் பார்வை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2012.
3. முனைவர் மோ.கோ. கோவைமணி, திருக்குறள் ஆய்வுமாலை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2012.

குறிப்புகள்

## பிரிவு 3. நாலடியார் - பழமொழி நானூறு

## நாலடியார்

**ஆலும் வேலும் பல்லுக் குறுதி**
**நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி**

என்பது, தமிழ் நாட்டில் வழங்கி வருகின்ற வழக்கு மொழிகளில் ஒன்று. ஆல் என்பது ஆலம் விழுதைக் குறிக்கும். வேல் என்பது கருவேலங் குச்சியைக் குறிக்கும். வேல் என்பது வேம்பையும் குறிக்கும். ஆலம் விழுதையும் கருவேலங் குச்சியையும் வைத்துப் பல் தேய்த்தால், பல்லுக்கு உறுதி என்பது பொருள். அதேபோன்று நால் என்பது நான்கு அடிகளையுடைய நாலடியார் என்ற நூலையும், இரண்டு என்பது இரண்டு அடிகளையுடைய திருக்குறள் என்ற நூலையும் குறிக்கும். அதாவது, சொற்களைத் தெளிவாக ஆழமாகப் பொருள் அடிப்படையில் திருக்குறளிலும், நாலடியாரிலும் அமைத்து உள்ளனர் என்பது பொருள். அதோடு நாம் ஏதாவது பேசினால் திருக்குறளையும், நாலடியாரையும் உதாரணமாகக் காட்டினால், அது நாம் சொன்ன சொற்களுக்கு உறுதியாக அமையும் என்றும் பொருள்.

நாலடியார் என்ற நூல், சமண முனிவர்களால் பாடப்பெற்றது. வடநாட்டில் மிகுதியான பஞ்சம் இருந்தபோது, அங்குள்ள சமண முனிவர்கள் தென்னாட்டில் பாண்டிய மன்னன் வாழ்ந்த மதுரையில் வந்து தங்கி, தம் பசித்துன்பத்தைப் போக்கினர். மதுரையில் வாழ்ந்த காலத்தில் மகிழ்ச்சியாக இருந்தனர். மறுபடியும் வடபகுதியில் பஞ்சம் நீங்கிச் செழித்தபோது, சமண முனிவர்கள் வடநாடு செல்ல விரும்பினர். பாண்டியனிடம் தம் கருத்தைக் கூறினர். பாண்டியன் அவர்களைப் பிரிய மனமில்லாத காரணத்தால், மதுரையிலேயே

தங்கச் சொன்னான். அவர்கள் பாண்டியனிடம் சொல்லாமல் ஒவ்வொருவரும் பாண்டியனின் பெருமையைப் பற்றிப் பாடல் நிலைகளிலும் கூறி, தம் கருத்தையும் கூறி, ஒவ்வொரு பாடல் எழுதி வைத்துவிட்டு, இரவோடு இரவாக மதுரையை விட்டுச் சென்றுவிட்டனர்.

காலையில் பார்த்தால், சமண முனிவர்கள் யாரையும் காணவில்லை. அவர்கள் எழுதிய ஏட்டில் உள்ள பாடல்கள் இருந்தன. பாண்டியன் அவர்கள் மீதுள்ள வெறுப்புக் காரணமாகப் பாடல்கள் எழுதிய ஓலைகள் அனைத்தையும் வையை ஆற்றில் எறியச் சொன்னான். சில ஏடுகள் நீர்ப்போக்கை எதிர்த்து வந்தன. அது அவனுக்கு வியப்பாக இருந்தது. அவ்வாறு வந்த ஏடுகளில் உள்ள நானூறு பாடல்களைத் தொகுத்து, நாலடியார் என்ற நூலை உருவாக்கினான் என்பது பழங்காலக் கதை.

நான்கு அடி வெண்பாக்களால் ஆய நூல் ஆதலின், நாலடி என்றும், ஆர் என்பது சிறப்பு விகுதியாக அமைந்தும் நூலுக்கு நாலடியார் என்ற பெயர் வந்தது என்று கொள்ளலாம்.

நாலடியார் என்ற நூல் ஒருவரால் பாடப்பெற்றது அன்று. பலரால் பாடப்பெற்றது. அதனால் கருத்துக்கள் கூறியது கூறல் என்ற நிலையில் சில பாடல்களில் அமைந்துள்ளன.

சமண முனிவர்கள் 8000 பேர் தமிழகத்திற்கு வந்ததாகவும், 8000 பாடல்கள் எழுதி வையை ஆற்றில் விட்டதில் நானூறு பாடல்களே நீரை எதிர்த்து வந்ததாகவும் ஒரு தனிப்பாடல்,

> **எண்பெருங் குன்றத்து எணாஆயிரம் இருடி**
> **பண்பொருந்தப் பாடியபா நானூறும்**

என்று கூறுகிறது. மேலும் மற்றொரு தனிப்பாடல்,

**வெள்ளாண் மரபுக்கு வேதம் எனச்சான்றோர்**
**எல்லாரும் கூடி எடுத்துரைத்த, சொல்ஆரும்,**
**நாலடி நானூறும் நன்குஇனிதா என்மனத்தே**
**சீலமுடன் நிற்க, தெளிந்து.**

என்று நாலடியாரின் பெருமையை எடுத்துக் கூறுகிறது.

திருக்குறளைப் போன்றே நாலடியாரையும் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலாக வகுத்துத் தந்தவர் பதுமனார். இவ்வதிகாரங்களை முப்பாலுக்கு அடைவுபடுத்தி உரை கண்டவர் தருமர். தருமர், திருக்குறளுக்கு உரை எழுதியவர்களுள் ஒருவர். நாலடியார் நூலில் கடவுள் வாழ்த்துப் போக, நாற்பது அதிகரங்களுக்கும் பத்துப் பத்துப் பாடல்களாக நானூறு பாடல்கள் உள்ளன.

இந்நூலைத் தொகுத்து முறைப்படுத்தி, உரை எழுதியவர் பதுமனார் என்றும், மதிவரர் என்பவர் இந்நூலுக்கு அரும்பத உரை இயற்றினார் என்றும், தருமர் என்பவர் உரை எழுதினார் என்றும் குறிப்பிடுவர்.

நாலடியாரின் பாக்களைத் தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணரும், திருக்குறள் உரையாசியர் பரிமேலழகரும், சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும், சீவகசிந்தாமணி உரையாசிரியர் நச்சினார்க்கினியரும் சான்றுப் பாடல்களாக எடுத்துக்காட்டி உள்ளனர் என்பது இந்நூலுக்குச் சிறப்பினைத் தருவதாக அமைகிறது.

## பழமொழி நானூறு

குறிப்புகள்

தொல்காப்பியம் கூறும் இலக்கிய வகைகளுள் ஒன்று பழமொழி. பழமொழியை முதுசொல் என்றும், முதுமொழி என்றும், தொன்றுபடு பழமொழி என்றும், சொல்வழக்கு என்றும் பல பெயர்களால் குறிப்பிடுகின்றனர்.

தொல்காப்பியர், இலக்கிய வகைகளாக ஏழினைத் தருகிறார்.

**பாட்டு, உரை, நூலே, வாய்மொழி, பிசியே**
**அங்கதம், முதுசொல்லொடு, அவ்வேழ் நிலத்தும்,**
**வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்**
**நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும்**
**யாப்பின் வழியது என்மனார் புலவர்.**

(தொல்.1336)

இதில் முதுசொல் என்பது பழமொழியைக் குறிக்கும். இதற்கு விளக்கம் தரும்போது தொல்காப்பியர் இதனை, முதுமொழி என்று கூறுகிறார்.

**நுண்மையும் சுருக்கமும் ஒளியு டைமையும்**
**ஒண்மையும் என்றுஇவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடிப்பதற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப.**

(தொல்.1433)

அகநானூற்றுப் பாடலில், பழமொழியை தொன்றுபடு பழமொழி என்று குறிப்பிடுகிறார் மாமூலனார். அதாவது, நல்லது செய்தால் நல்லதே நடக்கும். அது பொய்த்து விட்டதோ! என்று பேசுவது போல், பாடல் அமைந்துள்ளது.

**அம்ம வாழி, தோழி! இம்மை**
**நன்றுசெய் மருங்கில் தீதுஇல் என்னும்**
**தொன்றுபடு பழமொழி இன்றுபொய்த் தன்றுகொல்?**

(அகம்.101:1-3)

இன்றும் பேச்சு வழக்கில் தாயைப்போல் பிள்ளை, நூலைப்போல் சேலை என்ற பழமொழி உள்ளது. சூரியனைப் பார்த்து நாய் குரைத்தால், சூரியனுக்கு என்ன வரும் என்ற பழமொழியும் உண்டு. அதைச் சந்திரனுக்குக் கூறுகிறது இப்பழமொழி நானூறு என்ற நூல்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் மூன்றாவதாக பழமொழி நானூறு குறிக்கப்பெறுகிறது. திருக்குறள், நாலடியார், பழமொழி என்று முறைப்படுத்தப்பட்டு உள்ளது.

பழமொழியை உருவாக்கிய புலவர் முன்றுறை அரையனார். முன்றுறை அரையனார் என்பதை இயற்பெயர் என்று எண்ணுதற்கு இடமில்லை. முன்றுறை என்னும் இடத்தில் அரசு புரிந்த அரசர் என்பதே இதன் பொருளாகும். முன்றுறை மன்னவன் என்பது தற்சிறப்புப் பாயிரத்துள் காண்கிறது. ஒருகால் முன்றுறையில் வாழ்ந்த, அரையர் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற ஒரு தலைவராக இருத்தலும் கூடும். அன்றியும், அரையர் என்பது சேனாவரையர் என்னும் தொல்காப்பிய உரையாசிரியர் பெயரிலும் காணப்பெறுதல் இங்குச் சிந்திக்கத் தக்கது. மேலும், அரையர் என்பது ஒரு மரபுப் பெயராகவோ குடிப்பெயராகவோ இருத்தலும் கூடும். அரையர் குடியில் புலமையில் சிறந்து விளங்கிய இவரது இயற்பெயரை விடுத்து, அக்குடிப்பெயரால் வழங்கி வந்தனரோ என்று ஐயுறவு கொள்ளவும் இடமுண்டு. முன்றுறை எங்குள்ளது என்பது தெளிவாகத் தெரியவில்லை. தமிழகத்தில் கொற்கை முன்றுறை,

அற இலக்கியம் குறிப்புகள்

காவிரி முன்றுறை, திருமருத முன்றுறை, கழார் முன்றுறை என்னும் இடங்கள் இருந்தனவாகப் பண்டை இலக்கியம் வாயிலாக அறிகிறோம். இவற்றைப் போலவே பழமொழி ஆசிரியர் வாழ்ந்த ஊரும் நீர்த்துறைச் சிறப்பு வாய்ந்த ஓர் இடமாக இருத்தல் கூடும். அடைமொழி இன்றி முன்றுறை என இவ்வூர் வழங்கப்பெறுதலினால், இது அக்காலத்தில் மிக்க பெருஞ்சிறப்புடன் விளங்கியிருத்தல் வேண்டும். இவர் சமண சமயத்தினர் என்பது தற்சிறப்புப் பாயிரத்தால் விளங்குகிறது.

இந்நூல், முக்கியமாக நாலடியாரிலும், திருக்குறள் முதலிய கீழ்க்கணக்கு நூல்களிலும் வந்துள்ள பல கருத்துக்களைச் சிற்சில இடங்களில் அடியொற்றிச் செல்லுகிறது.

தூங்கு எயில் எறிந்த சோழன், கரிகாலன், பாரி, பேகன் முதலியோரைப் பற்றிய முற்கால நிகழ்ச்சிகளை எடுத்தாளுதலோடு, பொற்கைப்பாண்டியன், மனுநீதிச்சோழன் முதலியோரைப் பற்றிய பிற்கால வரலாறுகளையும் பழமொழி ஆசிரியர் தம் நூலுள் காட்டியுள்ளார்.

பழமொழி நானூற்றுப் பாடல்கள் பலவற்றிலும் காணும் ஒரு பொது நோக்கு அமைந்துள்ளது. பழமொழி, பாடலின் இறுதியில் வருகிறது. முன் இரண்டு அடிகளில் அதற்கு உரிய விளக்கத்தைக் காணலாம். மூன்றாம் அடியில் பெரும்பாலும் ஆடூஉ முன்னிலை, மகடூஉ முன்னிலைத் தொடர்களுள் ஒன்று இடம் பெறும். ஆசிரியர் எடுத்துக் கூறும் முறையில் பழமொழியின் பொருளும், பாடலில் அவர் சுட்டும் அறநெறியும் நமக்கு நன்கு புலனாகும்.

நூலின் முதற்பாடல் பழமொழி ஏடுகளில் காணப்பெறவில்லை. ஆயினும், அதற்கு உரிய பழைய உரைப்பகுதி காணப்பெறுகின்றது. ச. ஆறுமுக நயினார் வெளியிட்ட மூலப் பதிப்பில், முதற்பாடலுக்குப் பழைய உரையே அச்சிடப்பெற்று இருக்கிறது. இவ்வுரைக்குரிய மூலச்செய்யுளை நன்னூலின் பழைய உரையாசிரியராகிய மயிலைநாதர் கொண்டு கூட்டுப் பொருள்கோளுக்கு மேற்கோள்

காட்டியிருப்பது தெரிந்து மகாமகோபாத்தியாய உ.வே. சாமிநாதையர் செந்தமிழ் இதழில் வெளியிட்டு வெளிப்படுத்தினார்.

மேற்குறித்த ச. ஆறுமுக நயினார் தாம் பழமொழி நூலைப் பிரதிகளில் உள்ளபடி அச்சு இயற்றியவர் (1904). முதல் இருநூறு பாடல்களைப் பழைய உரையுடனும் தமது விளக்கக் குறிப்புக்களுடனும் வெளியிட்ட திரு. நாராயண ஐயங்காரும் (1918, 1922) பிரதிகளில் காணும் வரிசை முறையையே பின்பற்றி இருக்கிறார். பழமொழிப் பாடல்களின் வரிசை முறையை மாற்றி முதன்முதல் அச்சு இயற்றியவர் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் (1874). இவர் நாலடியாரைப் போலப் பப்பத்துப் பாடல்கள் கொண்ட 39 அதிகாரங்களாகக் கொண்டு, அதற்குத் தக்கபடி பாடல்களின் வரிசை முறையை மாற்றி அமைத்து, பால், இயல் பாகுபாடுகளும் செய்திருக்கிறார். பத்து வெண்பாக்கள் இவர் பதிப்பில் விடுபட்டுப் போயின.

பழைய உரையுடன் பழமொழி நூலை வெளியிட்ட தி. செல்வக்கேசவராய முதலியாரும் (1916), வேறொரு வகையாக இந்நூலைப் பாகுபாடு செய்து, சுப்பராயச் செட்டியாரைப் போன்றே பாடல்களின் வரிசை முறையையும் மாற்றி அமைத்துள்ளார். நூலை ஐந்து பெரும் பிரிவுகளாகவும், 35 சிறு பிரிவுகளாகவும் கொண்டுள்ளார். இச்சிறு பிரிவுகள் ஒரு வரையறை இன்றி, 4 பாடல்கள் முதல் 21 பாடல்கள் வரையில் வெவ்வேறு அளவில் பாடல்களைப் பெற்றுள்ளன. முதலியார் அவர்கள் தமது பதிப்புரையில் ஓர் இனமான பொருள்களை ஒருவழி வைத்து வகைப்படுத்தாவிட்டால், இந்நூலைப் படிப்பது மாணாக்கர்க்கு இனிது இராது என்று, கடவுள் வாழ்த்து நீங்கலாக முந்நூற்றுத் தொண்ணூற்றொன்பது செய்யுள்களையும் ஐந்து பெரும் பிரிவுகளாகவும், அவற்றில் ஒவ்வொன்றையும் ஏற்ற பெற்றி சிறிய உட்புரிவுககளாகவும் பிரித்து வைத்துள்ளார்.

குறிப்புகள்

## கூறு 7. அறன் வலியுறுத்தல்

7.0. பாட அமைப்பு

7.1. முன்னுரை

7.2. குறிக்கோள்கள்

7.3. அறன் வலியுறுத்தல்

7.4. தொகுத்துக் காண்போம்

7.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

7.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிக

7.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 7.1. முன்னுரை

சமண முனிவர்களால் பாடப்பெற்றது நாலடியார். வெண்பா யாப்பில் அமைந்த இந்நூல் நான்கடி கொண்டது. நாலடி நானூறு என்றும் இதனை வழங்குவர். திருக்குறளைப்போல் நாலடியாரும் முப்பால் உணர்த்தும் நூலாக நாற்பது அதிகாரங்களில் அமைந்திருக்கிறது. அதாவது, அறத்துப்பால் பதின்மூன்று அதிகாரங்களும், பொருட்பால் இருபத்து நான்கு அதிகாரங்களும், காமத்துப்பால் மூன்று அதிகாரங்களும் ஆக நாற்பது அதிகாரங்கள் மூன்று இயல்களாக அமைந்திருக்கிறது. அறத்துப்பால் துறவற இயல், இல்லறவியல் என்ற இரண்டு இயல்களையும், பொருட்பால் அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகை இயல், பன்னெறியியல் என்ற ஏழு இயல்களையும், காமத்துப்பால் இன்ப துன்ப இயல், இன்பவியல் என்ற இரண்டு இயல்களையும் எனப் பதினொரு இயல்களால் நாலடியார் அமைக்கப்பெற்றிருக்கிறது. அறன் என்படுவது இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றனையும்

பயத்தலாகும். “சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும், அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல” என்ற புறநானூற்று வரிக்கு ஏற்ப அறத்தின் தன்மை அமைந்திருக்கும். இதில் அறத்துப்பால் துறவற இயலில் நான்காவது அதிகாரமான அறன் வலியுறுத்தல் பாடப் பகுதியாக அமைந்திருக்கிறது.

அற இலக்கியம்

குறிப்புகள்

## 7.2. குறிக்கோள்கள்

⇒ தவப்பயன் பெறாதவர்களின் நிலையைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ எவ்வழிப் பொருள் சேர்ப்பினும் அது தன்னைக் காக்காது, இறுதியில் உடலை விட்டு உயிர் பிரியும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பிறவித் துன்பத்தில் இருந்து நீங்குபவர் யார் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ தர்மத்தைத் தேடிக் கொள்வதின் பயன் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ தவத்தால் பெறும் நன்மை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ தானத்தின் சிறப்புப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ உயர்கதி பெறுவதற்கான வழி எது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ ஆயுள் நிலையற்றது என்று தெரிந்து கொள்வீர்கள்.

## 7.3. அறன் வலியுறுத்தல்

**அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்**
**புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி**
**மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்**
**தவத்தாற் றவஞ்செய்யா தார்.**

என்பது, ஒரு பிறப்பில் தவஞ்செய்து அதன் பயனாக அடுத்தப் பிறப்பிலும் அத்தவத்தைத் தேடிக் கொள்ளாதவர்கள். அதற்கு மறுபிறப்பில் தரித்திரராய்த் தோன்றிப் பலரிடத்தும் பொருள் யாசிக்கத் தொடங்கிச் செல்வமிக்கார் வீட்டை நோக்கி, இவ்வீட்டில் இருப்போரே இன்புற்று வாழத் தக்கவர் என்று அவ்வீட்டின் உப்பரிசையில் உள்ள சிறப்புக்களை அண்ணாந்து பார்த்து அவ்வில்லினரிடத்தும் ஏதேனும் பெறவிரும்பி அதற்குட் புகமுயன்று வாயில் காப்போரால் தடுக்கப்பட்டு நுழைய முடியாமல் வெளிப்புறத்தில் நின்று வருந்துவர் என்பதாகும். (1)

**ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து**
**போவாநா மென்னாப் புலைநெஞ்சே - ஓவாது**
**நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்**
**சென்றன செய்வ துரை.**

என்பது, அறிவற்று உலக வாழ்வு நிலையுள்ளது என்று எண்ணுகின்றவனும், முதுமை அடைந்தவனும், பொருளைத் தரும மார்க்கத்திற் செலவிடாத உலோபியுமாகிய மனிதனிடத்தில், அவன் செய்கைக்கு அனுகூலமாக அறவிருப்பின்றி வாழ்கின்ற அற்ப மனமே! நீ அங்ஙனம் நிலையற்றதை நிலையென்று எண்ணி நாம் செல்வத்தைச் செலவழித்து விட்டால் விருத்தியடைய மாட்டோம். ஆதலின் அது செலவாதற்கு ஏதுவாகிய தருமத்தை மறந்துவிட்டுப் பொருளைத் தேட வேண்டும் என்று உறுதி கொண்டு அதனை விரும்பி, இடைவிடாது பொருள் சேர்த்தற்குப் பல முயற்சிகளைச் செய்து வாழ்ந்தாலும் உன் ஆயுள் நாட்கள் கழிந்துவிட்டனவே; இனி நீ மடிவது திண்ணம் ஆயிற்றே இதற்குச் செய்வதென்ன கூறு என்பதாகும். (2)

வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனத்தி னழியுமாம் பேதை - நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்.

என்பது, பழவினைப் பயனாகிய துன்பம் வந்தவிடத்து அறிவில்லாதவன் அதன் தன்மையை உணராமல் அதன் பொருட்டு வருந்தித் தருமத்தைக் கைவிட்டிருப்பான்; அதனால் அவனுக்கு மேல்வரும் பிறப்பிலும் துன்பமே அதிகரிக்கும்; ஆகலின் ஒருவனுக்குத் தீவினைப் பயன் வந்தாலும் அவன் அதனை அனுபவித்துக்கொண்டு அதன் பொருட்டு வருந்தாமல் அறமே புரிதல் வேண்டும். அங்ஙனம் புரிவோரே பிறவித் துன்பத்தினின்று நீங்குவர் என்பதாகும்.

(3)

அறம்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க - கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு.

என்பது, மனிதர் பெறுதற்கரிய உடம்பினைப் பெற்ற பேற்றினால் அஃதழியுமுன் பெரிய பயனாகிய தர்மத்தைத் தேடிக் கொள்ளக் கடவர்; ஏனெனில் அத்தருமமானது கரும்பிலுள்ள சாற்றினைப் போல பின்னர்ப் பல இன்பங்களைத் தந்து உதவி செய்யும்; உடம்பானது, சாற்றையுதவி ஒழியும் கரும்பின் சக்கையைப் போன்று தருமப் பயன் நிற்க அழிந்து போகும் என்பதாகும்.

(4)

கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

அற இலக்கியம் குறிப்புகள்

என்பது, கரும்பை ஆலையிலிட்டு ஆடி அதன் சாற்றை எடுத்துக் காய்ச்சி வெல்லக் கட்டி ஆக்கிக்கொண்டு இன்புறுவோன், அக்கரும்பின் சக்கை மனிதரால் நெருப்பிலிட்டு எரிக்கப்படும் காலத்தில் அது குறித்து வருந்தார். அவர்களைப் போலவே உடம்பினை வாட்டித் தவம், விரதம் முதலியன செய்து அதன் பயனாகிய தருமத்தைத் தேடிக் கொண்டவர்கள், கூற்றுவன் வந்து உயிரைப் பிரிக்க அவ்வுடம்பினுக்கு அழிவு வருங்காலத்தில் அதன்பொருட்டு வருந்தமாட்டார்கள் என்பதாகும். (5)

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. தவப்பயன் பெறாதவர்களின் நிலை எத்தன்மைத்து?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

2. பிறவித் துன்பத்தில் இருந்து நீங்குபவர் யார்?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

3. தர்மத்தின் பயன் யாது?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

4. தவத்தால் விளையும் பயன் யாது?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

**இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது**
**பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி**
**ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான்**
**மருவுமின் மாண்டா ரறம்.**

என்பது, மானிடரே! நீங்கள் 'நமக்கு மரணம் சமீபத்திலேயே இருக்கிறது' என்று நினைத்து அ∴துங்கள்பால் வருதற்கு முன்னரே உங்களைத் தீக்கதியுட் சேர்க்கும் பாவச் செயல்களை ஒழித்து உயர்கதியுட் புகுத்தும் அறத்தைச் செய்வீராக என்பதாகும்.

(6)

**மக்களா லாய பெரும்பயனு மாயுங்கால்**
**எத்துணையு மாற்றப் பலவானாற் - றொக்க**
**உடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்**
**கிடந்துண்ணப் பண்ணப் படும்.**

என்பது, மனிதர் உடம்பினால், அறம்புரியப்படுதல் காரணமாகப் புண்ணியப் பயன்கள் பல உண்டாயிருப்பினும் அவை குறித்து அதனைப் போற்ற நினையாமல், மேலுலகத்தின்பத்தை அனுபவித்தற்குக் காரணமாக தருமங்களைச் செய்யவேண்டும் என்பதாகும்.

(7)

**உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி**
**இறப்ப நிழற்பயந் தாஅங் - கறப்பயனும்**
**தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்**
**வான்சிறிதாப் போர்த்து விடும்.**

என்பது, ஆலின் ஒரு சிறிய வித்தானது நற்பூமியில் சேர்ந்து மரமாய் முளைத்தெழுந்து விசாலித்து வளர்ந்து பலருக்கும் நிழலைத் தருவது போல மனிதரால் தானஞ் செய்யப்படும் பொருள் சிறிதாயிருப்பினும்

அதனை ஏற்றுக்கொள்ளத் தக்க பெரியார் கையில் சேர்ந்தால் அது பெரும்புண்ணியமாய் விருத்தியடைந்து உலகமெங்கும் பரவித் தருமஞ் செய்தார்க்கு உயர் பதவியைக் கொடுத்துவிடும் என்பதாகும். (8)

**வைகலும் வைகல் வரக்கண்டும் ம.ஂ.துணரார்**
**வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்**
**வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்**
**வைகலை வைத்துணரா தார்.**

என்பது, தினந்தோறும் உண்டாகும் நாட்கழிவானது மனிதருடைய ஆயுளைக் கழித்து வருகின்றது. அதனை உணராதவர்கள், அங்ஙனம் நாட்கழிவு வந்து ஆயுள்சென்று கொண்டிருத்தலைப் பார்த்தும், அதன் போக்கையுணர்ந்து விரைவில் அறம் செய்யாதவர்களாய் எப்பொழுதும் அவ்வாயுள் நிலைத்திருக்குமென்று உலக போகங்களை அனுபவித்து மகிழ்வர். இச்செய்கை பேதைமை உடையதாகும். ஆயுள் நிலையற்றது என்று எண்ணி அறம் புரிவோரே அறிஞராவர் என்பதாகும். (9)

**மான வருங்கல நீக்கி யிரவென்னும்**
**ஈன விளிவினால் வாழ்வேன்மன் - ஈனத்தால்**
**ஊட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு**
**நீட்டித்து நிற்கு மெனின்.**

என்பது, சிலர், நிலையற்ற உடம்பு நிலைக்குமென்றெண்ணி, அதனை வளர்த்தற் பொருட்டு ஈனத் தொழில்களைச் செய்து உணவு தேடி அதற்கூட்டுகின்றார்கள். அங்ஙனமூட்டினும் அது நிலைபெறாது. அவரெண்ணப்படி அவ்வாறு அவ்விழிந்த தொழில்களால் வரும் உணவை அதற்கூட்டி அதனை வளர்த்தவிடத்தும் அது நிலைபெற்றிருக்குமானால், நான் ஈனத்தொழில் புரிதலால் அதனைப்

போற்றி உயிர்வாழ்வேன். அஃதங்ஙனம் நிலைபெறவு மாட்டாது. நானும் அதனை இழிதொழிலால் வளர்த்து உயிர்வாழவும் மாட்டேன் என்பதாகும். (10)

அற இலக்கியம்

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

5. உயர்கதி பெறுவதற்குச் செய்யத்தக்கன யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

6. மனிதனுக்கு உயர் பதவி கொடுப்பது எது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

7. ஆயுள் நிலையற்ற என்று எண்ணுபவர் யார்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

8. ஈனத்தொழில் புரிவோர் உயிர் எத்தன்மைத்து அமையும்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

## 7.4. தொகுத்துக் காண்போம்

குறிப்புகள்

- ⇒ தவப்பயன் பெறாதவர்களின் நிலையைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ எவ்வழிப் பொருள் சேர்ப்பினும் அது தன்னைக் காக்காது, இறுதியில் உடலை விட்டு உயிர் பிரியும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ பிறவித் துன்பத்தில் இருந்து நீங்குபவர் யார் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ தர்மத்தைத் தேடிக் கொள்வதின் பயன் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ தவத்தால் பெறும் நன்மை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ தானத்தின் சிறப்புப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ உயர்கதி பெறுவதற்கான வழி எது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ ஆயுள் நிலையற்ற என்று தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ பிறன்மனை விரும்பாதிருக்கக் கூடிய நெறிகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 7.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | |
|---|---|
| 1. 7.3. (1ம் பாடல்) | 5. 7.3. (6ம் பாடல்) |
| 2. 7.3. (3ம் பாடல்) | 6. 7.3. (8ம் பாடல்) |
| 3. 7.3. (4ம் பாடல்) | 7. 7.3. (9ம் பாடல்) |
| 4. 7.3. (5ம் பாடல்) | 8. 7.3 (10 பாடல்) |

## 7.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. அறன் வலியுறுத்தலில் வள்ளுவர் குறிப்பிடும் அறச்செயல்கள் பற்றிக் கட்டுரை வரைக.
2. அறத்தால் விளையும் நன்மை தீமைகளைப் பட்டியலிடுக.
3. தானம், தவம் இவற்றின் மேன்மை குறித்து கட்டுரை வரைக.

## 7.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. நாலடியார் மூலமும் செம்பூர் வித்துவான் வீ. ஆறுமுகஞ் சேர்வை அவர்கள் இயற்றிய விரிவுரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2013.
2. ச.வே. சுப்பிரமணியன் (பதி.), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - நாலடியார், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2007.
3. புலவர் குழந்தை, நீதிக்களஞ்சியம், சாரதா பதிப்பகம், சென்னை, 2007.


அற இலக்கியம்

குறிப்புகள்

குறிப்புகள்

## கூறு 8. அறிவுடைமை - பிறர்மனை நயவாமை

8.0. பாட அமைப்பு

8.1. முன்னுரை

8.2. குறிக்கோள்கள்

8.3. அறிவுடைமை - பிறன்மனை நயவாமை

8.3.1. அறிவுடைமை

8.3.2. பிறர்மனை நயவாமை

8.4. தொகுத்துக் காண்போம்

8.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

8.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

8.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 8.1. முன்னுரை

சமண முனிவர்களால் பாடப்பெற்றது நாலடியார். வெண்பா யாப்பில் அமைந்த இந்நூல் நான்கடி கொண்டது. நாலடி நானூறு என்றும் இதனை வழங்குவர். திருக்குறளைப்போல் நாலடியாரும் முப்பால் உணர்த்தும் நூலாக நாற்பது அதிகாரங்களில் அமைந்திருக்கிறது. அதாவது, அறத்துப்பால் பதின்மூன்று அதிகாரங்களும், பொருட்பால் இருபத்து நான்கு அதிகாரங்களும், காமத்துப்பால் மூன்று அதிகாரங்களும் ஆக நாற்பது அதிகாரங்கள் மூன்று இயல்காளாக அமைந்திருக்கிறது. அறத்துப்பால் துறவற இயல், இல்லறவியல் என்ற இரண்டு இயல்களையும், பொருட்பால் அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகை இயல், பன்னெறியியல் என்ற ஏழு இயல்களையும், காமத்துப்பால் இன்ப துன்ப இயல், இன்பவியல் என்ற இரண்டு இயல்களையும்

எனப் பதினொரு இயல்களால் நாலடியார் அமைக்கப்பெற்றிருக்கிறது. அறிவுடைமை என்பது கல்வி, கேள்விகளினாய அறிவோடு உண்மை அறிவுடையனாதல் ஆகும். திருக்குறள் பொருட்பால் அரசியலில் நான்காவது அதிகாரமாக அறிவுடைமை அமைந்திருக்கிறது. நாலடியாரிலும் பொருட்பால் இன்பவியல் முதல் அதிகாரமாக அறிவுடைமை அமைந்திருக்கிறது.

திருக்குறள் அறத்துப்பால் இல்லறவியல் பதினோராவது அதிகாரமாக பிறனில்விழையாமை அதிகாரம் அமைந்திருக்கிறது. காம மயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமைக்கான நிலைகளை இவ்வதிகாரப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. இதே பொருண்மையில் நாலடியார் அறத்துப்பால் இல்லறவியல் இரண்டாவது அதிகாரமாக பிறர்மனை நயவாமை அதிகாரம் அமைந்திருக்கிறது. நாலடியாரில் இடம்பெற்ற அறிவுடைமை அதிகாரப் பாடல்களும், பிறர்மனை நயவாமை அதிகாரப் பாடல்களும் இங்குப் பாடப் பகுதியாக அமைந்திருக்கிறது.

## 8.2. குறிக்கோள்கள்

⇒ போர் புரிவதற்கான அறம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ அறிவுடையார் செயற்பாடுகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ மனிதனுக்கு ஏற்படும் மறுமைக்கதி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ மனிதனின் சேர்க்கைக்கேற்ப அவனின் குணங்கள் மாறுபடும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ நல்லறிவுடையாரின் நட்பு எத்தன்மைத்து என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

அற இலக்கியம்

குறிப்புகள்

⇒ மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ மறுபிறப்பு எட்டாத நிலை எவ்வாறு அமையும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பிறன்மனை சேராதார் அடையும் நன்மைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பிறன்மனை சேருவார் அடையும் தீமைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பிறன்மனை சேரும் எண்ணங் கொண்டாரின் உடல்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 8.3.1. அறிவுடைமை

**பகைவர் பணிவிட நோக்கித் தகவுடையார்**
**தாமேயு நாணித் தலைச்செல்லார் காணாய்**
**இளம்பிறை யாயக்காற் றிங்களைச் சேரா**
**தணங்கருந் துப்பி னரா.**

என்பது, பிறர் வருந்துவதற்கு இரக்கப்படாத கரும் பாம்பும் தனக்குப் பகையாகிய சந்திரன் இளம்பிறையாய் இருக்கும் போது, அதனை வெல்லுதல் தகுதியுடைய காரியமன்றென்று அதனிடம் போகமாட்டாது; அதைப்போல அறிவுடையார், பகைவர் தாழ்ந்திருக்கும் சமயத்தில் அவரைவெல்லுதற்கு அவரிடம் செல்லமாட்டார்கள் என்பதாகும்.

(1)

**நளிகடற் றண்சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்**
**கணிகல மாவ தடக்கம் - பணிவில்சீர்**
**மாத்திரை யின்றி நடக்குமேல் வாழுமூர்**
**கோத்திரங் கூறப் படும்.**

என்பது, வறுமையடைந்தவர்க்கு அணியத்தக்க ஆபரணம் அடக்கமாம்; அவ்வாறு ஒருவன் அடக்கமின்றி வரம்புகடந்து நடப்பனானால் அவனுடைய குடிப்பிறப்பானது மிகத் தாழ்ந்ததென்று அவன் வாழும் ஊராரால் பழிக்கப்படும் என்பதாகும்.

(2)

**எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா**
**தென்னாட் டவரும் சுவர்க்கம் புகுதலால்**
**தன்னாற்றா னாகு மறுமை வடதிசையுங்**
**கொன்னாளர் சாலப் பலர்.**

என்பது, எந்த நிலத்தில் எந்த வித்தைப் போட்டாலும் அந்த வித்துக்குரிய மரம் தோன்றுமே யன்றி, நிலத்தின் பேதத்தால் எட்டிவிதை தென்னமரமாய் விடாது; இதைப்போல் மனிதர் தாங்கள் வசிக்கின்ற இடபேதத்தால் எக்கதியையும் அடைந்துவிட மாட்டார்கள்; சிலர் தென்னாட்டினர்க்குச் சுவர்க்கமில்லை, வடநாட்டார்க்கு உண்டென்று கூறியிருக்கின்றனர். அவ்வாறு கூறினும் தென்னாட்டில் உள்ளாரும் தம்முயற்சியால் சுவர்க்கலோக பதவியை அடைகின்றனர். வடநாட்டிலுள்ளாரும் அம்முயற்சியற்று, அதனையடையாது இருக்கின்றனர். ஆதலின், மனிதனுக்கு மறுமைக்கதி ஏற்படுவது அவனுடைய முயற்சியினாலேயே உண்டாகும் என்பதாகும்.

(3)

**வேம்பி னிலையுட் கனியினும் வாழைதன்**
**தீஞ்சுவை யாதுந் திரியாதாம் - ஆங்கே**
**இனந்தீ தெனினு மியல்புடையார் கேண்மை**
**மனந்தீதாம் பக்க மரிது.**

என்பது, வாழைப்பழம் வேப்பிலைக்குள்ளிலிருந்து பழுத்தாலும் தன் இனிய சுவை சிறிதும் மாறுபடாதது போல, நல்லறிவுடையார் தீய

நட்பினர் கூட்டத்திற் சேர்ந்திருப்பினும் அவர் மனம் நல்ல இயற்கையிலிருந்து மாறிக் கொடியதாகிவிடாது என்பதாகும்.

(4)

**கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்தும்**
**உப்பீண் டுவரி பிறத்தலாற் றத்தம்**
**இனத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப**
**மனத்தனையர் மக்களென் பார்.**

என்பது, உவர்க்கடலினருகே நல்ல நீருமுண்டாகும்; இனிய அருவிநீர் பாயக்கூடிய மாலையருகில் உவர்நீரும் உண்டாகும். இவை இடங்களின் சேர்க்கையால் இவ்வாறுண்டாகவில்லை. தன் குணவியற்கையின்படியே உண்டாகின்றன. அதாவது, நிலத்தின் தன்மைக் தக்கபடி நீரின் குணம் பொதுவாக மாறுபடுவது இயற்கையெனினும் பரிசுத்தத் தன்மை மிகுந்த நீர், தான் உற்பத்தியாகும் கெட்டவிடத்தையும் பரிசுத்தமாக்கி நல்லியற்கையுடனிருக்கும்; உவர் முதலிய அசுத்தம் அதிகரித்த நீர், தான் உற்பத்தியாகும் நல்ல இடத்தையும் அசுத்தமாக்கித் தானும் அசுத்தமாகவே இருக்கும். இவற்றைப் போலவே மனிதரும், இனச்சேர்க்கையால் குணம் மாறுபடக் கூடியவர்களாய் இருப்பினும் நல்லறிவு அதிகரித்தவர் கெட்டவர்களோடு சேர்ந்தாலும் தங்கள் நற்குணம் கெடாமல் அவரையும் நல்லவராக்கிக் கொண்டிருப்பர். கெட்டகுணம் அதிகரித்தவர்கள் நல்லவர்களோடு சேர்ந்தாலும் தம்மியற்கை மாறுபடாதிருப்பதோடு அவரையும் கெட்டவராக்கிக் கொண்டிருப்பர் என்பதாகும்.

(5)

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. போர் அறம் யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

2. வறுமைக்கான ஆபரணம் எது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

3. மனிதனுக்கு மறுமைக்கதி எதனால் ஏற்படும்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

4. மனிதனின் சேர்க்கையால் குணம் மாறுபாடு எவ்வாறு அமையும்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

குறிப்புகள்

அற இலக்கியம்

குறிப்புகள்

**பராஅரைப் புன்னை படுகடற்றண் சேர்ப்ப**
**அராஅலு மொட்டலுஞ் செய்பவோ நல்ல**
**மரூஉச்செய்தி யார்மாட்டுந் தங்கு மனத்தார்**
**விராஅஅய்ச் செய்யாமை நன்று.**

என்பது, நன்மார்க்கத்தில் பொருந்தும் மனத்தை உடையவர், நட்பாகப் பொருந்திய எவர்களிடத்திலும் முதலில் சிநேகஞ் செய்து பிரிதலும், பின் கூடுதலும் செய்ய மாட்டார்கள்; ஆதலின், அவ்வாறு செய்வதைக் காட்டிலும், ஒருவரோடு எப்பொழுதுமே கலந்து சிநேகஞ் செய்யாதிருப்பது நல்லறிவுடைமை என்பதாகும்.

(6)

**உணர வுணரு முணர்வுடை யாரைப்**
**புணரப் புணருமா மின்பம் - புணரின்**
**தெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்**
**பிரியப் பிரியுமா நோய்.**

என்பது, நன்மை தீமைகளைப் பகுத்துணரும் அறிவுடையாரைச் சேர்ந்தால் இன்பம் உண்டாகும்; அவ்வறிவில்லாதாரைச் சேர்ந்தால் துன்பம் உண்டாகும். ஆதலால், அவர் தன்மையை ஆராய்ந்து முன்னரே அவரோடு சிநேகங் கொள்ளாமல் நீங்கிவிடின் அத்துன்பம் வராது என்பதாகும். (7)

**நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை**
**நிலைகலக்கிக் கீழிடு வானும் - நிலையினும்**
**மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்**
**தலையாகச் செய்வானுந் தான்.**

என்பது, தன்னை நன்னிலையில் நிறுத்துவோனும், தாழ்ந்த நிலையில் நிறுத்துவோனும், தன்னுடய நல்ல நிலையிலிருந்து மேலும் மேலும் தன்னை உயர்த்திக் கொள்வோனும், தன்னை எல்லோருள்ளும்

தலைமையாயிருக்கும்படி செய்பவனும் ஒரு மனிதன் தானேயாவன் என்பதாகும். (8)

**கரும வரிசையாற் கல்லாதார் பின்னும்**
**பெருமை யுடையாருஞ் சேறல் - அருமரபின்**
**ஓத மாற்று மொலிகடற் றண்சேர்ப்ப**
**பேதமை யன்ற தறிவு.**

என்பது, கல்வி அறிவில்லாத மூடர்களுக்குப் பின்னே, காரியங் கருதிக் கல்வி யறிவிற் சிறந்த பெரியார் செல்லுதல் மிக இழிந்த செய்கை; அ∴தறிவுடைமை ஆகாது என்பதாகும்.

(9)

**கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்**
**தருமமுந் தக்கார்க்கே செய்யா - வொருநிலையே**
**முட்டின்றி மூன்று முடியுமே ல∴தென்ப**
**பட்டினம் பெற்ற கலம்.**

என்பது, ஒருவனுக்கு இன்பத்திற்கேதுவான காரியங்களைச் செய்தலும், இவ்வுலக இன்பங்களை அனுபவித்தலும், உத்தமர்க்குப் பொருளீதலாகிய தர்மங்களைச் செய்தலும் ஒரு பிறப்பிலேயே அமையுமானால், அவற்றை அவன் பெற்ற அந்நிலை, பல நாடுகளுக்குச் சென்று வேண்டும் பொருள்களை ஏற்றிக்கொண்டு தான் சேரவேண்டிய துறைமுகப் பட்டினத்தை அடைந்த கப்பலுக்கு நிகராகும் என்பதாகும்.

(10)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

5. நல்லறிவுடையார் நட்பு எத்தன்மைத்து?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

6. எவன் மனிதன் என்று நாலடியார் குறிப்பிடுகிறார்?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

7. எது அறிவுடைமை ஆகாது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

8. மறுபிறப்பு எட்டாத நிலை எது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

குறிப்புகள்

## 8.3.2. பிறர்மனை நயவாமை

அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவால்
நிச்ச நினையுங்காற் கோக்கொலையால் - நிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றார
நம்பற்க நாணுடை யார்.

என்பது, பிறர் மனையாள் மீது காதல் கொண்டு அதனை நிறைவேற்றிக் கொள்ள விரும்புவார்க்கு அதனால் பெரிய அச்சமுண்டாகும். ஏற்படும் இன்பமோ அற்பம். கொற்றவனால் கொலைத் தண்டனை கிடைக்கும். இன்னும் அச்செய்கை நரகத்திற்கு ஏதுவாகிய பாவச் செய்கையுமாம். ஆதலின், இவ்விழிவுகட்கு நாணுபவர் பிறர்மனையாளை விரும்பாதிருக்கக் கடவர் என்பதாகும்.

(1)

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா -பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

என்பது, பிறன் மனையாளை விரும்புவோரைத் தருமம், கீர்த்தி, பிறர்நேயம், கௌரவம் ஆகிய நான்கும் சேரமாட்டா; பலர் பகையும், பழியும், பாவமும், அச்சமும் சேரும் என்பதாகும்.

(2)

புக்க விடத்தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சந் தோன்றாமற் காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்.

என்பது, ஒருவன், பிறன்மனையாளை விரும்புந்தொழில், அவனுக்கு எவ்வகையிலும் எப்பொழுதும் அச்சத்தையே கொடுத்துக் கொண்டிருக்கும்; ஆதலின் எல்லோருமே அதற்கு அஞ்சுவார்கள். அதில் அச்சமின்றி வேறெவ்வித இன்பமும் இல்லை என்பதாகும்.

(3)

**காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு**
**மாணின்மை செய்யுங்கா லச்சமா - நீணிரயத்**
**துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட**
**இன்ப மெனக்கெனைத்தாற் கூறு.**

என்பது, பிறர்மனை நயத்தலாகிய தீச்செயல் புரியும் ஒருவனை நோக்கிக் கூறி அச்செயலில் பலவகைத் துன்பங்களே அல்லாமல் இன்பம் சிறிதும் இல்லை என்பதாகும்.

(4)

**செம்மை யொன்றின்றிச் சிறியா ரினத்தராய்க்**
**கொம்மை வரிமுலையா டோண்மரீஇ - உம்மை**
**வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை**
**அலியாகி யாடியுண் பார்.**

என்பது, முற்பிறப்பில் நற்குணம் சிறிதும் இல்லாமல், துச்செய்கையுடைய சிறியாரோடு கூடித் தம்முடைய வல்லமையினாலே துராக்கிருதமாகப் பிறன்மனையாளைக் கற்பழித்து இறந்துபோனவரே இப்பிறப்பில் அலிகளாய்ப் பிறந்து கூத்தாடிப் பிச்சை ஏற்றுண்டு சீவிப்பவர் என்பதாகும்.

(5)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

9. பிறன்மனையை விரும்பாதார் யார்?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

10. பிறன்மனையை விரும்புவார்க்கு சேராதன யாவை?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

11. பிறனில் புகுவான் நெஞ்சம் எத்தன்மைத்து?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

12. அலிகளாகப் பிறப்பவர் யார்?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

அற இலக்கியம் குறிப்புகள்

**பல்லாரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்**
**கல்யாணஞ் செய்து கடிபுக்க - மெல்லியற்**
**காதன் மனையாளு மில்லாளா வென்னொருவன்**
**ஏதின் மனையாளை நோக்கு.**

என்பது, அச்சமின்றி இன்பம் அனுபவிக்கக் கூடிய ஊரார் அறிய திருமணம் செய்துக்கொண்ட மனைவியர் தம்மிடத்தே இருக்க, அச்சம் மிகுந்த பிறர்மனை நயத்தலைக் கொள்வது பயனற்ற செய்கை ஆகும். அதனால் தீமை உண்டாகும் என்பதாகும்.

(6)

**அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ**
**வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று - நம்பு**
**நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்**
**தலைநக்கி யன்ன துடைத்து.**

என்பது, அயலார் தூற்றவும், சுற்றத்தார் அஞ்சி வருந்தவும், தன்னை நம்பியிருக்கும் நண்பனுடைய மனையாளைக் கூடிக் களித்து, நேயர், தன்னை நல்லவனென்று நம்பத்தக்க தன்மையில்லாத நெஞ்சத்தோடு கூடி இருக்கின்றவனுடைய சிற்றின்ப அனுபவமானது, பாம்பின் தலையை நக்கியதைப்போலப் தீமை பயக்கத்தக்கதாம் என்பதாகும்.

(7)

**பரவா வெளிப்படாப் பல்லோர்கட் டங்கா**
**உரவோர்கட் காமநோ யோஒ கொடிதே**
**விரவாரு ணாணுப் படலஞ்சி யாது**
**முரையாதுள் ளாறி விடும்.**

என்பது, தீய காரியங்களை விரும்பாத அறிஞரிடத்தும் சில பெண்களால் காமம் உண்டாகிவிட்டால், அதிகரிக்காமலும், வெளிப்படாமலும், அவர் விரும்பிய சிலரையன்றி மற்ற பலரிடத்தும்

சென்று தங்காமலும், அவர் விரும்பியும் சேராமல் இருக்கின்ற அப்பெண்களிடம் வெட்கப்படுவதற்குப் பயந்து தங்கள் ஆசையை வெளிப்படுத்தும் வார்த்தை எதுவும் சொல்லாமல் வருந்தியிருக்குமாறு செய்து, அவர்களின் மனத்திற்குள்ளேயே தணிந்துவிடும். ஆதலின் அது மிகக் கொடியது என்பதாகும்.

(8)

அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும் - வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காம
மவற்றினு மஞ்சப் படும்.

என்பது, அம்பு, நெருப்பு முதலியவை மனிதர் உடம்பில் பட்டமாத்திரத்தில் அவர்க்கு வேதனை செய்வனவெனினும், உடம்பை மட்டும் சுடுவதால், அவ்வேதனை, சூடுபட்டபோது மாத்திரம் மனத்திற்றோன்றி இருந்து பின்னர்த் தணிந்துவிடும். அதனால் மனத்திற்கு அதிக நேரம் வேதனையிராது. பெண்ணாசையோ, ஒருவர் மனத்திலுண்டாகி விட்டால், அந்த உள்ளத்தைக் கவலைக்குள்ளாக்கி எப்பொழுதும் சுட்டுக்கொண்டே இருக்கும். மனம் அங்ஙனம் காமவெப்பத்தால் சுடப்படுவதால் உடம்பு எப்பொழுதும் வெதும்பி அந்த மனத்திற்கு வேதனை அதிகரித்தற்கேதுவாய் இருந்துக்கொண்டிருக்கும். ஆதலின், அக்காமமானது, அவற்றைக் காட்டினும் துயர்செய்வதும் அஞ்சத்தக்கதுமாகும் என்பதாகும்.

(9)

ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு - நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்.

என்பது, ஓர் ஊரில் அக்கினி பற்றிச் சுற்றிலும் வளைந்து கொண்டபோது அதனடுவில் அகப்பட்ட மனிதன், தான் தப்பித்துக் கொள்வதற்கு அங்கே உயர்ந்த மலையிருப்பினும் அதிலேறாமல் கீழேயிருக்கும் தடாகம், கிணறு முதலியவற்றின் நீரிலும் மூழ்கி அந்நெருப்பின் வெப்பத்துக்குத் தப்பிப் பிழைத்துக் கொள்ளலாம். அவனைக் காமமென்னும் நெருப்புப் பற்றி வளைந்து கொள்ளுமானால், அவன் அந்நீரில் மூழ்கினும் அது தணியாது, அவனைச் சுட்டு வருத்தும். அந்நீரினும் மிக்க பாதுகாப்பைத் தனக்குச் செய்யும் உயர்ந்த மலைமீதேறி அவன் ஒளித்துக் கொண்டாலும் அக்காம வெப்பம் அவனை வெதுப்பித் துன்புறுத்தும். ஆதலின், மனிதர் அக்காமத்திற்கு இடங்கொடுத்தலாகாது என்பதாகும்.

(10)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

13. "பாம்பின் தலையை நக்கியது போல" எதற்காக எடுத்துக் காட்டப்பட்டது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

14. கொடிய காமம் எது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

15. அணையா பெண்ணாசையின் நிலை யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

16. காமத்திற்கு ஆட்பட்டோனின் நிலை எப்படி இருக்கும்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

## 8.4. தொகுத்துக் காண்போம்

குறிப்புகள்

- ⇒ போர் புரிவதற்கான அறம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ அறிவுடையார் செயற்பாடுகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ மனிதனுக்கு ஏற்படும் மறுமைக்கதி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ மனிதனின் சேர்க்கைக்கேற்ப அவனின் குணங்கள் மாறுபடும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ நல்லறிவுடையாரின் நட்பு எத்தன்மைத்து என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ மறுபிறப்பு எட்டாத நிலை எவ்வாறு அமையும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ பிறன்மனை சேராதார் அடையும் நன்மைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ பிறன்மனை சேருவார் அடையும் தீமைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ பிறன்மனை சேரும் எண்ணங் கொண்டாரின் உடல்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 8.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 8.3.1. (1ம் பாடல்)
2. 8.3.1. (2ம் பாடல்)
3. 8.3.1. (3ம் பாடல்)
4. 8.3.1. (5ம் பாடல்)

9. 8.3.2. (1ம் பாடல்)
10. 8.3.2. (2ம் பாடல்)
11. 8.3.2. (3ம் பாடல்)
12. 8.3.2. (5ம் பாடல்)

குறிப்புகள்

| | |
|---|---|
| 5. 8.3.1. (6-7ம் பாடல்கள்) | 13. 8.3.2. (7ம் பாடல்) |
| 6. 8.3.1. (8ம் பாடல்) | 14. 8.3.2. (8ம் பாடல்) |
| 7. 8.3.1. (9ம் பாடல்) | 15. 8.3.2. (9ம் பாடல்) |
| 8. 8.3.1. (10ம் பாடல்) | 16. 8.3.2. (10ம் பாடல்) |

## 8.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. அறிவுடையார் ஆற்றும் செயல்களை வள்ளுவர் வாக்கால் எடுத்துரைக்க.
2. அறிவுடையார் குணநலன்கள் எவ்வாறு அமையும்?
3. பிறன்மனை நோக்காதார் அடையும் மேன்மைகளை விளக்குக.
4. பிறன்மனை கொண்டாரின் தீச்செயல்களை விளக்குக.
5. பிறன்மனை பேணுவாரின் குணங்களை வள்ளுவர் எவ்வாறு சுட்டுகிறார்?

## 8.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

1. நாலடியார் மூலமும் செம்பூர் வித்துவான் வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்கள் இயற்றிய விரிவுரையும, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2013.
2. ச.வே. சுப்பிரமணியன் (பதி.), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - நாலடியார், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2007.
3. புலவர் குழந்தை, நீதிக்களஞ்சியம், சாரதா பதிப்பகம், சென்னை, 2007.

குறிப்புகள்

## கூறு 9. பழமொழி நானூறு (51 முதல் 75 வரை)

9.0. பாட அமைப்பு

9.1. முன்னுரை

9.2. குறிக்கோள்கள்

9.3. பழமொழி நானூறு 51 - 75 பாடல்கள்

9.4. தொகுத்துக் காண்போம்

9.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

9.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

9.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 9.1. முன்னுரை

முன்றுறை அரையனாரின் பழமொழி நானூறு என்னும் நூல் நானூறு பாடல்களில் நானூறு பழமொழிகளைக் கொண்டது. இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு பதினெட்டுனுள் திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களை அடுத்து மூன்றாவதாக வைத்து எண்ணப்படுகிறது. சில பாடல்கள் திருக்குறள், நாலடியார் கருத்துக்களை அடியொற்றிச் செல்கிறது எனலாம். பழமொழி நானூறு ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம்பெற்றிருப்பது இதன் தனிச்சிறப்பாகும். முதல் இரண்டு அடிகள் அப்பாடலில் இடம்பெற்றிருக்கும் பழமொழிக்கான விளக்கத்தைக் காணலாம். மூன்றாவது அடி ஆடூஉ முன்னிலை அல்லது மகடூஉ முன்னிலைத் தொடர் இடம்பெற்றிருக்கும். இவ்வாறமைந்த இந்நூலில் உள்ள 51ம் பாடல் முதல் 75ம் பாடல் வரை கூறு 9ல் இங்குப் பாடப் பகுதியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

## 9.2. குறிக்கோள்கள்

அற இலக்கியம்

குறிப்புகள்

⇒ சூதாட்டத்தின் விளைவு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ அறிவுத்திறன் படைத்தோரின் செயல்கள் எவ்வாறு அமையும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ கல்வியிற் சிறந்தோர் எத்தன்மை வாய்ந்தவர் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பொய்ப்பிரமாணம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ முதுமைக்கல்வி எத்தன்மைத்து என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ கல்வி கற்கும் முறை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ குறுநில மன்னர் இயல்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ ஒழுக்கத்தினால் ஏற்படும் உயர்வு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ எதிர்காலச் சிந்தனை குறித்து தெரிந்து கொள்வீர்கள்.

⇒ சிறியோர் செல்வமும் பெரியோர் வறுமையும் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பகைஞர்களின் தகுதி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 9.3. பழமொழி நானூறு (51-75)

**இயற்பகை வெல்குறுவான், ஏமாப்ப முன்னே**
**அயல்பகை தூண்டி விடுத்தோர் - நயத்தால்**
**கறுவழங்கிக் கைக்கெளிதாச் செய்க! அதுவே**
**சிறுகுரங்கின் கையால் துழா.**

என்பது, இயல்பாகத் தன்னுடைய பகையினை வெல்ல நினைப்பவன், தனக்குப் பாதுகாப்பாக முன்னர் அயலாக அவருக்குள்ள பகைவர்களைத் தந்திரமாகத் தூண்டிவிட்டு, ஒரு நயமான

தன்மையிலே அதற்கேற்ற சினத்தையும் அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை முதலிலே பகைவனுடன் மோதச் செய்து, அவனைத் தன் கைக்கு எளிதாக வீழுமாறு செய்து கொள்க. அப்படிச் செய்வதே, பெரிய குரங்கு, முதலிலேயே சிறிய குரங்கின் கையை விட்டுத் துழாவிச் சூடறிந்து கொள்ளுதலைப் போன்ற அறிவுள்ள செயல் என்பதாகும்.

(51)

**பாரதத் துள்ளும், பணையம்தம் தாயமா,**
**ஈர்ஐம் பதின்மரும் போர்எதிர்ந்து, ஐவரொடு**
**ஏதிலர் ஆகி இடைவிண்டார், ஆதலால்**
**காதலரொடு ஆடார் கவறு.**

என்பது, பாரதக் கதையினுள்ளும், தம் தாயப் பொருளினையே பந்தயப் பொருளாகக் கொண்டு, நூற்றுவரும் பாண்டவரோடு சூதுப்போர் செய்தனர். அது காரணமாக, அவர்க்குப் பகைவராகிப் போர்க்களத்தின் இடையே உயிரும் இழந்தனர். அதனால், படித்தவர் எவரும் விருப்பமுடன் சூதாடவே மாட்டார்கள் என்பதாகும்.

(52)

**அல்லல் ஒருவர் அடைந்தக்கால், மற்றவர்க்கு**
**நல்ல கிளைகள் எனப்படுவார் - நல்ல**
**வினைமரபின், மற்றதனை நீக்கு மதுவே**
**மனைமரம் ஆய மருந்து.**

என்பது, ஒருவருக்குத் துன்பம் வந்தடைந்த காலத்திலே அவருக்கு நல்ல உறவினர் என்று சொல்லப்படுபவர்கள் நல்ல செயல்களைச் செய்கின்ற மரபினை மேற்கொண்டு, அந்தத் துன்பத்தை நீக்குவார்கள். அப்படி நீக்கும் தன்மை வீட்டிலேயே இருக்கும் மருந்து மரத்தைப் போன்றது என்பதாகும். (53)

**தெள்ளி உணரும் திறனுடையார் தம்பகைக்கு**
**உள்வாழ் பகையைப் பெறுதல் உறுதியே;**
**கள்ளினால் கள்ளறுத்தல் காண்டும்; அதுவன்றோ**
**முள்ளினால் முள்களையும் ஆறு.**

என்பது, ஆராய்ந்து அறியும் அறிவுத்திறன் உடையவர், தம்முடைய பகைவருக்கு எதிராக அவருடனிருந்து அவரை அழிக்கும் உட்பகையாயினாரை எளிதிலே பெறுவார்கள் என்பது உறுதியேயாகும். கள்வெறியினால் பிதற்றுவான் ஒருவனை, மீண்டும் அந்தக் கள்ளைக் குடிப்பிப்பதனாலே மயங்கிப் பேச்சிழக்கச் செய்வதனையும் காணலாம். அப்படிச் செய்வதுதான், காலிலே வைத்த முள்ளினை மற்றொரு முள்ளின் உதவியினாலே எடுத்துவிடுவது போன்றது என்பதாகும்.

(54)

**ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்**
**நால்திசையும் செல்லாத நாடில்லை அந்நாடு**
**வேற்றுநாடு ஆகா தமவேஆம் ஆயினால்,**
**ஆற்றுணா வேண்டுவது இல்.**

என்பது, கற்க வேண்டிய நூல்களை மிகுதியும் கற்று அறிந்தவர்களே அறிவுடையவர் ஆவார்கள். அத்தகைய அறிவினை உடையவர்களது புகழானது நாற்றிசைகளினும் சென்று பரவாத நாடே இல்லையாகும். அந்நாடுகள் அவர்களுக்கு வேற்று நாடுகளும் ஆவதில்லை. அவர்களின் சொந்த நாடுகளாகவே அவை விளங்கும். அங்ஙனமானால், அத்தகையோர் செல்லும் வழிக்குக் கட்டுச் சோறு கொண்டுபோக வேண்டியதும் இல்லை அல்லவா! என்பதாகும்.

(55)

**எமக்குத் துணையாவார் யாவர்? என்றெண்ணி,**
**தமக்குத் துணையாவார்த் தாம்தெரிதல் வேண்டா;**
**பிறர்க்குப் பிறர்செய்வது ஒன்றுண்டோ? இல்லை;**
**தமக்கு மருத்துவர் தாம்.**

என்பது, எந்தன் காரியத்தைச் செய்வதற்கும் எமக்குத் துணையாக விளங்குபவர்கள் சிலர் இருக்க வேண்டும் என்று எண்ணித் தமக்குத் துணையாக விளங்குபவர்களைக் கருதித் தாம் ஆராய்ந்து தேடிக்கொண்டே இருக்கவேண்டாம். பிறருக்குப் பிறர் செய்வது என்பது ஒன்று இருக்கிறதோ? அப்படி ஏதும் இருப்பதில்லை. தமக்கு வரும் நோயைத் தடுக்கும் மருத்துவர் தாமே என்பதை, ஒவ்வொருவரும் அறிதல் வேண்டும் என்பதாகும்.

(56)

**கைவிட்ட ஒண்பொருள் கைவரவு இல்லென்பார்**
**மெய்ப்பட்ட ஆறே உணர்ந்தாரால் - மெய்யா;**
**மடம்பட்ட மானோக்கின் மாமயில் அன்னாய்!**
**கடன்பெற்றான் பெற்றான் குடம்.**

என்பது, மடமான தன்மையினையுடைய மானின் நோக்கினை உடையவளே! சிறந்த மயிலினைப் போன்ற சாயலையும் உடைவளே! தம் கையை விட்டுக் கடந்துபோன ஒரு சிறந்த பொருளானது மீண்டும் தம் கைக்கு வந்து சேர்வது என்பதே இவ்வுலகிற் கிடையாது. இப்படிச் சொல்பவர்கள், பொருளின் இயல்பை உண்மையாகவே உணர்ந்தவர்கள் ஆவார்கள். உண்மையாகக், கீழ்மக்களாகிய பிறர்க்குக் கடன் கொடுத்தவன் பெறுவதெல்லாம் வாங்கியவன் அதனை மறுத்துப் பாம்பு குடத்தினுள்ளேயும் கைவிடத் துணிதலாகிய பொய்ப் பிரமாணம் ஒன்றேயாகும் என்பதாகும்.

(57)

**நிரந்து வழிவந்த நீசருள் எல்லாம்**
**பரந்தொருவர் நாடுங்கால், பண்புடையார் தோன்றார்;**
**மரம்பயில சோலை மலைநாட! என்றும்**
**குரங்கினுள் நான்முகத்த இல்.**

என்பது, மிகவும் மரங்கள் செறிந்திருக்கின்ற சோலைகளையுடைய மலைநாடனே! குரங்கு இனங்களினுள்ளே எந்தக் காலத்திலும் அழகான முகத்தை உடையது இருந்ததே இல்லை. அதுபோலவே, வழிவழியாகத் தீய குணங்கள் பெருக வந்து கொண்டிருக்கும் கீழ்த்தரமான குடிகளுக்குள்ளே, விரிவாக ஒருவர் ஆராய்ந்த காலத்தும், பண்புடையவராக எவருமே காணப்படுவதில்லை என்பதாகும்.

(58)

அற இலக்கியம்

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. சூதாடுவதால் ஏற்படும் விளைவு யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

2. அறிவுத்திறன் உடையவர் செயல் யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

3. யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற வரியை நினைவூட்டும் மூன்றுறை அரையனாரின் கருத்து யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

4. குரங்கினில் நான்முகத்து இல் என்பது எதைக் குறிக்கும்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

**முட்டின்று ஒருவர் உடைய பொழுதின்கண்,**
**அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே;**
**கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்துக்,**
**கெட்டார்க்கு நட்டாரோ இல்!**

என்பது, மொட்டுக்கள் தம் பிணிப்பவிழ்ந்து மலர்ந்து கொண்டிருக்கின்ற மாலையானது, விளங்கிக் கொண்டிருக்கும் மார்பினை உடையவனே! முட்டுப்பாடு ஏதும் இல்லாமல் ஒருவர் வளமுடையவராயிருக்கின்ற சமயத்திலே, அவர் வீட்டிலே சமைத்ததைத் தின்பவர்கள் ஆயிரம் பேர்களாக இருப்பார்கள். அவர்கள், துன்பம் வந்து அழிவெய்தப் போகும் நிலையடைந்த காலத்திலோ, கேடுற்ற அவர்களுக்கு உதவும் நண்பர்கள் எவருமே இலராவர் என்பதாகும்.

(59)

**ஆற்றும் இளமைக்கண் கல்லாதான் மூப்பின்கண்**
**போன்றும் எனவும் புணருமோ - ஆற்றச்**
**சுரம்போக்கி உலகுகொண்டார் இல்லை;மற் றில்லை**
**மரம்போககிக் கூலிகொண் டார்.**

என்பது, வழியை மிகவும் கடந்துபோக விட்டுவிட்டுப் பின், பின் தொடர்ந்து சென்று வரிப்பணம் வாங்கியவர் எவரும் இல்லை. ஓடத்தைச் செலுத்திக் கரையிலே கொண்டு விட்டபின் முறையான கூலி பெற்றவர் எவருமில்லை. அவைபோலக் கற்கத் தகுதியான இளமைப் பருவத்திலே கற்காத ஒருவன், முதுமைக் கண் கல்வியைப் போற்றுபவனாவான் என்பதும் பொருந்தாததே என்பதாகும்.

(60)

**உணற்கினிய இந்நீர் பிறிதுழி இல்லென்னும்**
**கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார் - கணக்கினை**
**முற்றப் பகலும் முனியா தினிதோதிக்**
**கற்றலின், கேட்டலே நன்று.**

என்பது, உண்ணுதற்கு இனிமையாயிருக்கும் இனிதான தண்ணீர் இந்தக் கிணற்றைத் தவிர வேறு எங்குமே கிடையாது என்று கருதும் கிணற்றினுள்ளே இருக்கும் தவளை; அதனைப் போல, அறிவுடையோர் என்றும் ஆகமாட்டார்கள். நூல்களை முழுவதுமாகப் பகல் எல்லாம் வெறுப்பில்லாமல் இனிதாகப் படித்து அறிதலைக் காட்டினும், அவற்றைத் தக்க ஆசிரியன்மாரிடம் முறையோடு பாடங்கேட்டு அறிந்து கொள்ளுதலே நன்மையானது என்பதாகும்.

(61)

**கழுமலத்தில் யாத்த களிறும் கருவூர்**
**விழுமியோன் மேற்சென் றதனால் - விழுமிய**
**வேண்டினும், வேண்டா விடினும் உறற்பால**
**தீண்டா விடுதல் அரிது.**

என்பது, கழுமலம் என்னும் இடத்திலே கட்டப்பட்டிருந்த களிற்று யானையும், கருவூரிலே இருந்த சிறப்புடையோனாகிய கரிகால் வளவனிடத்தே சென்றது. அவனைக் கொண்டு வந்து சோழ நாட்டிற்கு அரசனாகவும் ஆக்கிற்று. அதனால், சிறந்த பொருள்கள், தம்மை ஒருவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அடைதற்குரியதான முன் வினைப்பயன் உள்ளவனைத் தாமே வலியச் சென்று அடையாமற் போவது அருமை என்பதாகும்.

(62)

**எவ்வம் துணையாய்ப் பொருள்முடிக்கும் தாளாண்மை**
**தெய்வம் முடிப்புழி, என்செய்யும் - மொய்கொண்டு**
**பூப்புக்கு வண்டார்க்கும் ஊர! - குறும்பியங்கும்**
**கோப்புக் குழிச்செய்வது இல்.**

என்பது, பூக்களிடையே புகுந்து வண்டுகள் மொய்த்துக் கொண்டு ஆரவாரிக்கும் ஊரனே! எங்கும் வெற்றி கொண்டவனாக வந்து

கொண்டிருக்கும் ஒரு பேரரசன் தன் நாட்டினுள் புகுந்த விடத்து, அதனை ஆளும் குறுநில மன்னன் பணிந்து போவதல்லது எதிர்த்துச் செய்யக்கூடியது யாதுமில்லை. அதுபோலவே, பொருளை நிறைவு செய்யும் முயற்சியும் துன்பமே துணையாகத் தெய்வமானது முடிவுசெய்த காலத்தே எந்த விதமான பயனையும் செய்வதில்லை என்பதாகும்.

(63)

**கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்**
**பொல்லாத தில்லை, ஒருவற்கு - நல்லாய்!**
**இழுக்கத்தின் மிக்க இழிவில்லை; இல்லை,**
**ஒழுக்கத்தின் மிக்க உயர்வு.**

என்பது, நல்ல பெண்மைப் பண்புகளை உடையவனே! தாம் ஒழுக்கக் குறைபாட்டினாலே இழிவுடையவராவதைக் காட்டினும் ஒருவர்க்கு இழிவு தருவது யாதும் இல்லை. அதேபோல ஒழுக்கத்தின் சிறப்பினாலே வரும் உயர்வைவிடச் சிறந்த உயர்வும் ஒருவர்க்கு யாதுமில்லை. இவை போலக் கல்லாதவர்களிடையிலே சென்று உறுதிப்பொருள் பற்றிக் கட்டு உரைப்பதினும், மிகுதியான ஒரு பொல்லாங்கும் இல்லை என்று அறிவாயாக என்பதாகும்.

(64)

**வென்றடு கிற்பாரை வெப்பித் தவர்காய்வது**
**ஒன்றொடு நின்று சிறியார் பலசெய்தல்**
**குன்றொடு தேன்கலாம் வெற்ப! அதுபெரிதும்**
**நன்றொடு வந்ததொன் றன்று.**

என்பது, குன்றுகளும் தேன் பொதிகளும் தம்முள் விரவிக் கலந்தனவாகத் தோன்றும் வெற்புக்கு உரியவனே! பகைத்தால் தம்மை வென்று அழிக்கக் கூடிய வலிமை உடையவர்களை

மனங்கொதிக்குமாறு செய்தல் கூடாது. அவர் சினங் கொள்வதற்கான ஒரு காரியத்தோடு நிலைபெற்றுச் சிறியோர் பலப்பல செயல்களையும் செய்தனரானால் அது மிகவும் நன்மையோடு சேர்ந்த ஒரு தன்மை உடையதே அன்று என்பதாகும்.

(65)

**முன்னின்னார் ஆயினும், மூடும் இடர்வந்தால்,**
**பின்னின்னார் ஆகிப் பிரியார், ஒருகுடியார்;**
**பொன்னாச் செயினும், புகாஅர் புனலூர!**
**துன்னினார் அல்லார் பிறர்.**

என்பது, நீர் வளத்தினையுடைய ஊரனே! ஒரே குடியிலே தோன்றியவர்கள் முன்பு ஒரு காரணத்தினாலே இன்னாதவராகிப் பிரிந்து இருந்தனர் என்றாலும், குடும்பத்தையே முழுக்கக் கவிந்து கொள்ளும் தன்மையுடைய பெருந்துன்பமானது வந்தால், அதன் பின்னரும் இன்னாதவராகிப் பிரிந்து இருக்கவே மாட்டார்கள். ஆனால், மற்றையவரோ பொன்னாகப் போற்றி உறவு கொண்டாடிய காலத்தினுங்கூடத் துன்பத்திலே வந்து உதவமாட்டார்கள். அவர்கள் அவ்வளவு நெருக்கமுடையவர் அல்லர். ஆதலினால், தானாடா விட்டாலும் தன் சதையாடும் என்பது போல ஒரே குடியிலே பிறந்தவர் தவறாமல் ஆபத்துக் காலத்திலே ஒன்று சேர்வார்கள் என்பதாகும்.

(66)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

5. கெட்டார்க்கு நட்டாரே இல் என்னும் பழமொழி உணர்த்தும் செயல் யாது?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

6. கற்றலை விட கேட்டல் சிறந்தது என்பது எதனால்?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

7. ஒழுக்கத்தின் மிக்க உயர்வு எதனால் ஏற்படுகிறது?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

8. தானாடா விட்டாலும் தன் சதையாடும் என்பது எதனால்?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

**சுற்றத்தார், நட்டார் எனச்சென்று ஒருவரை**
**அற்றத்தால் தேறார், அறிவுடையார்; - கொற்றப்புள்**
**ஊர்ந்துலகம் தாவிய அண்ணலே ஆயினும்,**
**சீர்ந்தது செய்யாதார் இல்.**

என்பது, வெற்றியுடைய பறவையான கருடன் மீது ஊர்ந்து வருபவனும், உலகம் முழுவதையும் தாவி அளந்தவனுமான, அண்ணலான திருமாலே யானாலும், தனக்கு ஊதியமுடையதான ஒன்றைச் செய்யாதவர்கள் இல்லை. ஆகையால், சுற்றத்தார் நட்பினர் என்னவெல்லாம் கருதிச் சென்று வரும் காலத்தினும்கூட, அவர் மறைத்துச் செய்யுங் காரியங்களைப் பற்றித் தெரிவதற்கு, அறிவுடையோர் முற்படமாட்டார்கள் என்பதாகும்.

(67)

**எனைப்பலவே ஆயினும், சேய்த்தாப் பெறலின்,**
**தினைத்துணையே யாயினும் அணிக்கொண்டால் நன்றே;**
**இனக்கலை தேன்கிழிக்கும் ஏகல்சூழ் வெற்ப!**
**பனைப்பதித்து, உண்ணார் பழம்.**

என்பது, இனமாகிய கலைகள் தேனடைகளைக் கிழித்துத் தேன் குடிக்கின்ற ஓங்கிய மலைகள் சூழ்ந்திருக்கும் மலைநாடனே! எத்துணைப் பலவேயானாலும் நெடுங்காலத்துக்குப் பின்னர் பெறுவதைக் காட்டிலும், தினையளவே யானாலும் குறுகிய காலத்திற் பெற்றுக் கொள்ளுதலே நன்மையாகும். பனங்கொட்டையைப் பதித்து அது பனையாக வளர்ந்து அளிக்கும் அதன் பழத்தை எவரும் உண்டவர் இல்லை என்பதாகும்.

(68)

**தந்தம் பொருளும், தமர்கண் வளமையும்,**
**முந்துற நாடிப் புறந்தரல் ஓம்புக!**

**அந்தண் அருவி மலைநாட! சேணோக்கி,**
**நந்து,நீர் கொண்டதே போன்று!**

என்பது, அழகாகக் குளிர்ந்த அருவிகள் பல வீழ்ந்து கொண்டிருக்கின்ற மலைநாடனே! எதிர்காலத்தின் நெடுமையை நோக்கி, நத்தையானது நீரைத் தன்னிடத்தே சேமித்து வைத்துக் கொள்வதைப் போலத் தத்தமது பொருள்களையும், தம் சுற்றத்தாரின் வலிமையையும், முற்படவே ஆராய்ந்து, பிற்காலத்தில் உதவியாயிருக்கும் பொருட்டாகச் சேமித்துப் பாதுகாத்து வைத்துக் கொள்க என்பதாகும்.

(69)

**சிறியவர் எய்திய செல்வத்தின், மாண்ட**
**பெரியவர் நல்குரவு நன்றே, தெரியின்;**
**மதுமயங்கு பூங்கோதை மாணிழாய்! மோரின்**
**முதுநெய் தீதாகலோ இல்.**

என்பது, தேன் மிகுந்த பூ மாலையினையும், மாட்சிமையுடைய அணிகலன்களையும் அணிந்தவனே! ஆராய்வோமானால் மோரினைக் காட்டினும் பழைய நெய் தீமை செய்வதில்லை. அதுபோலவே, சிறியவர்கள் அடைந்த செல்வத்தினைக் காட்டினும், மாட்சியுடைய பெரியவர்கள் அடைந்த வறுமையே நன்றாகவிருக்கும் என்பதாகும்.

(70)

**வன்பாட் டவர்பகை கொள்ளினும், மேலாயார்,**
**புன்பாட் டவர்பகை கோடல் பயம்இன்றே;**
**கண்பாட்ட பூங்கழிக் கானலந் தண்சேர்ப்ப!**
**வெண்பாட்டம் வெள்ளம் தரும்.**

என்பது, கண்களின் தன்மையினைக் கொண்டே நெய்தற்பூக்கள் மலர்ந்திருக்கும். அழகிய கழிகளையுடைய கானற்சோலைகள் விளங்கும், குளிர்ந்த கடல்நாட்டுத் தலைவனே! பருவ மழையேயன்றி வெண்பாட்டமானாலும், அதனால் வெள்ளம் பெருகிவரத்

தவறுவதில்லை. ஆதலால், வலிமை உடையவரின் பகையினைக் கொண்டாலும் கொள்ளலாமே அல்லாமல், மேலானவர், வலிமையற்ற கோழைகளின் பகையைக் கொள்ளுதலால் ஒரு பயனும் இல்லை என்பதாகும்.

(71)

**நடலை இலராகி நன்றுணரார் ஆய**
**முடலை முழுமக்கள் மொய்கொள் அவையுள்,**
**உடலா ஒருவற்கு உறுதி உரைத்தல்**
**கடலுளால் மாவடித் தற்று.**

என்பது, மனத்தினுள்ளே நன்மை தீமைகளைப் பற்றிய கவலையில்லாதவர்களாகி, நல்லது எது என்பதையும் உணராதவர்கள் ஆகி, மனவலிமையுள்ள மூடர்கள் கூடி மொய்த்துக் கொண்டிருக்கிற ஒரு சபையினுள்ளே சென்று, உடலளவானே மனிதருள் ஒருவனாக விளங்கும் ஒரு மூடனுக்கு உறுதி தரும் பொருள் பற்றிச் சொல்லுதல் வீணானதாகும். அது கடலினுள் மாம்பழத்தைக் கொட்டுவது போன்ற பயனற்ற செயல் என்பதாகும்.

(72)

**யானுமற் றிவ்விருந்த எம்முனும், ஆயக்கால்,**
**வீரஞ் செயக்கிடந்த தில்லென்று கூடப்,**
**படைமாறு கொள்ளப் பகைதூண்டல் அஃதே**
**இடைநாயிற் கென்பிடு மாறு.**

என்பது, யானும், இவ்விடத்திலே துணையாகப் பகைவருடன் இருந்த என் தமையனும்; ஒன்று சேர்ந்துவிட்ட காலத்திலே பகைவருடைய வீரம் எல்லாம் செல்வதற்கு இடம் எதுவும் இல்லை. இப்படிச் சொல்லி அவரும் தம்முடனே கூடிப் படைத்துணையாகி நின்று பகைவருடன் மாறுகொள்ளுமாறு. பகைவரிடமிருந்து அவரைப் பிரிந்துவிடத் தூண்டுதல் சிறந்ததாகும். அதுதான், இடையரின்

நாய்க்கு ஆடு திருடும் கள்ளர்கள் எலும்பினை இடுதலோடு ஒக்கும் என்பதாகும்.

(73)

**கண்ணில் கயவர் கருத்துணர்ந்து, கைம்மிக**
**நண்ணி யவர்க்கு நலனுடைய செய்பவேல்,**
**எண்ணி இடர்வரும் என்னாம், புலிமுகத்து**
**உண்ணி பறித்து விடல்.**

என்பது, கண்ணோட்டம் ஏதுமற்ற கயவர்களின் கருத்தை உணர்ந்து அளவு கடந்து அவரோடு நெருங்கிப் பழகி இதனால் துன்பம் வரும் என்று கருதாதவர்களாக அவருக்கு நன்மை தருமே என்ற நல்லெண்ணத்தால் ஒன்றைச் செய்தாலும், செய்தவர்க்குத் துன்பமே ஏற்படும். அது புலியின் மீது அருள்கொண்டு ஒருவன் அதன் முகத்திலே அமர்ந்து இரத்தத்தை உறிஞ்சும் உண்ணியைப் பறித்துவிட முயல்வதைப் போன்றதே என்பதாகும்.

(74)

**பெரியார்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்**
**சிறியார்க்குச் செய்து விடுதல் - பொறிவண்டு**
**பூமேல் இசைமுரலும் ஊர! அதுவன்றோ**
**நாய்மேல் தவிசிடு மாறு.**

என்பது, புள்ளிகளையுடைய வண்டினம், பூக்களின் மேலே மொய்த்துக் கொண்டு இசைபாடிக் கொண்டிருக்கின்ற ஊரனே! பெரியாருக்குச் செய்கின்ற சிறப்பினை, அப்படியே சிறியவர்களுக்கும் விருப்பமுடன் செய்து விடுதலானது மிகவும் முறையற்றதாகும். அது குதிரையின் மேலே இடுவதற்குரிய சேணத்தை, நாயின் மேலும் இடுவது போன்ற பயனற்றதும் அறிவற்றதுமான செயல் என்பதாகும்.

(75)

அற இலக்கியம்

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

9. திணையளவேனும் காலத்தால் பெறுவது சிறந்தது என்பது எதனால்?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

10. சிறியோரின் செல்வத்தைக் காட்டிலும் பெரியோரின் வறுமை சிறந்தது ஏன்?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

11. யாருக்கு உறுதி தரும் பொருண் வீணாகும்?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

12. நாய்மேல் தவிசிடு மாறு என்பது எதனை உணர்த்தும்?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

## 9.4. தொகுத்துக் காண்போம்

- ⇒ சூதாட்டத்தின் விளைவு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ அறிவுத்திறன் படைத்தோரின் செயல்கள் எவ்வாறு அமையும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ கல்வியிற் சிறந்தோர் எத்தன்மை வாய்ந்தவர் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ பொய்ப்பிரமாணம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ முதுமைக்கல்வி எத்தன்மைத்து என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ கல்வி கற்கும் முறை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ குறுநில மன்னர் இயல்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ ஒழுக்கத்தினால் ஏற்படும் உயர்வு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ எதிர்காலச் சிந்தனை குறித்து தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ சிறியோர் செல்வமும் பெரியோர் வறுமையும் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.
- ⇒ பகைஞர்களின் தகுதி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

குறிப்புகள்

## 9.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | 9.3. (52ம் பாடல்) | 7. | 9.3. (64ம் பாடல்) |
| 2. | 9.3. (54ம் பாடல்) | 8. | 9.3. (66ம் பாடல்) |
| 3. | 9.3. (55ம் பாடல்) | 9. | 9.3. (68ம் பாடல்) |
| 4. | 9.3. (58ம் பாடல்) | 10. | 9.3. (70ம் பாடல்) |
| 5. | 9.3. (59ம் பாடல்) | 11. | 9.3. (72ம் பாடல்) |
| 6. | 9.3. (61ம் பாடல்) | 12. | 9.3. (75ம் பாடல்) |

## 9.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

குறிப்புகள்

1. கல்வியின் சிறப்பினை உணர்த்தும் பழமொழிகள் நான்கினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. அறிவுடையோர் எத்தன்மைத்வர் என்பதை பழமொழி நானூறு வழி விளக்குக.
3. ஒழுக்கத்தினால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைப் பழமொழி நானூறு உணர்த்துவன யாவை?

## 9.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. புலியூர்க் கேசிகன்(உரை), பழமொழி நானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
2. ச.வே. சுப்பிரமணியன் (பதி.), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - பழமொழி நானூறு, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2007.
3. புலவர் குழந்தை, நீதிக்களஞ்சியம், சாரதா பதிப்பகம், சென்னை, 2007.

## கூறு 10. பழமொழி நானூறு (76 - 101)

குறிப்புகள்

10.0. பாட அமைப்பு

10.1. முன்னுரை

10.2. குறிக்கோள்கள்

10.3. பழமொழி நானூறு 76 - 101 பாடல்கள் வரை

10.4. தொகுத்துக் காண்போம்

10.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

10.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

10.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 10.1. முன்னுரை

முன்றுறை அரையனாரின் பழமொழி நானூறு என்னும் நூல் நானூறு பாடல்களில் நானூறு பழமொழிகளைக் கொண்டது. இந்நூல் பதினெண் கீழ்க்கணக்கு பதினெட்டுனுள் திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களை அடுத்து மூன்றாவதாக வைத்து எண்ணப்படுகிறது. சில பாடல்கள் திருக்குறள், நாலடியார் கருத்துக்களை அடியொற்றிச் செல்கிறது எனலாம். பழமொழி நானூறு ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி இடம்பெற்றிருப்பது இதன் தனிச்சிறப்பாகும். முதல் இரண்டு அடிகள் அப்பாடலில் இடம்பெற்றிருக்கும் பழமொழிக்கான விளக்கத்தைக் காணலாம். மூன்றாவது அடி ஆடூஉ முன்னிலை அல்லது மகடூஉ முன்னிலைத் தொடர் இடம்பெற்றிருக்கும். இவ்வாறமைந்த இந்நூலில் உள்ள 76ம் பாடல் முதல் 101ம் பாடல் வரை கூறு 10ல் இங்குப் பாடப் பகுதியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்புகள்

## 10.2. குறிக்கோள்கள்

⇒ போர்த்தன்மை கொண்டோரின் தன்மை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ காரியம் சாதிக்கும் வழிமுறைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ அறிவுடையோர் நிலைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ மாக்களின் நிலைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ நன்னெறி பிறழாதவரின் நிலைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ நண்பர்களில் சிறந்த நண்பர் யார் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ நல்லுரை ஏற்கும் மாண்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ போலி நண்பர்கள் எத்தகையோர் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ நீதிக்கான நெறிமுறைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ தவத்தின் நிலைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ மேன்மக்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ கூடா நட்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ சான்றோர்தம் கடமைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 10.3. பழமொழி நானூறு (76-101)

**செருக்கெழு மன்னர் திறனுடையார் சேர்ந்தால்,**
**ஒருத்த ரை அஞ்சி உலைதலும் உண்டோ?**
**உருத்த சுணங்கின் ஒளியிழாய்! கூரிது,**
**எருத்து வலியதன் கொம்பு.**

என்பது, அழகுடனே தோன்றுகின்ற தேமற் புள்ளிகளையும், ஒளி வீசும் ஆபரணங்களையும் உடையவனே! எருதானது வலியதாயிருந்ததானால் அதனுடைய கொம்பும் கூர்மையானதாகவே இருக்கும். அதனால், போர்த்தன்மை பொருந்திய ஆற்றலுடைய மன்னரைத் துணையாகச் சேர்ந்தவர்கள், மற்றவர்களுக்குப் பயந்து, தாம் மனம் தளர்தலும் உண்டோ? தளர வேண்டியதில்லை என்பதாகும்.

(76)

**அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது,**
**நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வதே**
**கன்றுவிட்டு ஆக்கறக்கும் போழ்தில் கறவானாய்,**
**அம்புவிட்டு ஆக்கறக்கு மாறு.**

என்பது, அன்பினால் ஒருவனுடைய உள்ளம் நெகிழ்ச்சி அடையுமாறு செய்து, அவன் வழியே நடந்து, அவனால் காரியத்தை முடித்துக் கொள்ளுதலே சிறந்தது. அங்ஙனமில்லாமல் நின்ற இடத்திலேயே அவனை வற்புறுத்திக் காரியத்தை முடித்துக் கொள்ள முயல்வது தவறானதாகும். அது, கன்றைக் குடிக்க விட்டுப் பசுவிலே பால்சுரந்து வரும்பொழுது கறந்து கொள்ளாமல் அம்பு எய்து பசுவைக் கொன்று பால் கறக்க முயல்வது போன்ற பேதைமையான செயல் என்பதாகும்.

(77)

**இணரோங்கி வந்தாரை, என்னுற்றக் கண்ணும்**
**உணர்பவர் அ.ஃதே உண்ர்ப - உணர்வார்க்கு**
**அணிமலை நாட! அளறாடிக் கண்ணும்;**
**மணிமணி யாகி விடும்.**

என்பது, அடுக்கடுக்காக விளங்கும் மலைத்தொடர்களை உடைய நாட்டிற்கு உரியவனே! மணிகளின் இயல்புகளை உணர்பவர்களுக்கு,

அவை சேறாடி இருந்த காலத்திலும் மணிகளாகவே காணப்படும். அதுபோலவே, தொடர்ச்சி அறாது உயர்ந்து விளங்கும் நல்ல குடியிற் பிறந்தவர்களை, அவர்களுக்கு என்ன விதமான தாழ்ச்சிகள் வந்த காலத்தினும், அறிவுடையவர், உயர்வாகவே எண்ணி மதிப்பார்கள் என்பதாகும்.

(78)

**கோவாத சொல்லும் குணனிலா மாக்களை**
**நாவா யடக்கல் அரிதாகும்; - நாவாய்**
**களிகள்போல் தூங்கும் கடல்சேர்ப்ப! - வாங்கி**
**வளிதோட் கிடுவாரோ இல்.**

என்பது, கள்ளுண்டு தள்ளாடி வருகின்ற குடியர்களைப் போல, மரக்கலங்கள் ஆடி அசைந்து வந்துகொண்டிருக்கும் கடல் நாட்டவனே! காற்றைப் பிடித்துத் தோளிலே போட்டுக் கொள்ளக கூடியவர்கள் யாருமே இல்லை. அதுபோலவே பொருந்தாதவை களைப் பேசித் திரிகின்ற குணங்கெட்ட மாக்களை, நாவினிடத்து அடக்கிப் பேசாதிருக்கச் செய்வதும் மிகவும் அருமை என்பதாகும்.

(79)

**காழார மார்பரீ கசடறக் கைகாவாக்**
**கீழாயோர் செய்த பிழைப்பினை மேலாயோர்**
**உள்ளத்துக் கொண்டுநேர்ந்து ஊக்கல், குறுநரிக்கு**
**நல்லநா ராயம் கொளல்.**

என்பது, முத்து மாலைகள் விளங்குகின்ற மார்பினை உடையவனே. குற்றமற நல்லொழுக்கத்தைப் பேணி நடந்துவராத கீழ்மக்கள் செய்த பிழைகளை, மேன்மக்கள், தம்முடைய உள்ளத்திலே பெரிதாகக் கொண்டு, அவருக்கு எதிராக எதனையும் செய்ய முயலுதல் வேண்டாம். அப்படி முயல்வது, சிறிய நரியை அழிப்பது கருதி

நல்ல நாராயணம் என்னும் அம்பினைத் தொடுக்க நினைப்பது போன்றது என்பதாகும்.

(80)

**நாடி நமரென்று நன்குபுறந் தந்தாரைக்**
**கேடு பிறரொடு சூழ்தல் - கிளர்மணி**
**நீடுகல் வெற்ப! நினைப்பின்றித் தாமிருந்த**
**கோடு குறைத்து விடல்.**

என்பது, தாமாகவே நாடி வந்து, நம்மவர் என்று உரிமை பாராட்டி, நல்ல முறையிலே உதவிசெய்து காப்பாற்றினவருக்கு, அவர்க்கு வேண்டாத பிறரோடு சேர்ந்து ஒருவர் கேடு செய்ய நினைப்பது மிகவும் தவறாகும். ஒளியுடைய மணிகள் விளங்கும் நெடிய மலைத்தொடர்களுக்கு உரிய வெற்பனே! அதுதான், தான் ஏறியிருந்த கிளையினையே தனக்கு வரும் ஆபத்தைப் பற்றி நினையாமல், ஒருவன் வெட்டிவிடுவது போன்றது என்பதாகும்.

(81)

**பொற்பவும் பொல்லா தனவும் புணர்ந்திருந்தார்**
**சொல்பெய்து உணர்த்துதல் வேண்டுமோ? - விற்கீழ்**
**அரிதாய்ப் பரந்தகன்ற கண்ணாய்! - அறியும்**
**பெரிதாள் பவனே பெரிது.**

என்பது, நல்லனவற்றையும் பொல்லாதனவற்றையும், அருகே நெருங்கியிருப்பவர் தம் சொற்களைப் பெய்து அறிவுடையோருக்கு அறியச் செய்தலும் வேண்டுமோ? வில் போன்ற புருவத்தின் கீழே செவ்வரி படர்ந்திருக்கின்றன. பரந்து அகன்ற கண்களை உடையவளே! பெரிய செயல்களை முதன்மையுடையவனாக இருந்து ஆட்சி செய்து நடத்தும் ஒருவனே, பெருமையுடைய சிறந்த

செயல்களின் தன்மையையும் அறிபவனாயிருப்பான் என்று அறிவாயாக என்பதாகும்.

(82)

**உற்றதற் கெல்லாம் உரம்செய்ய வேண்டுமோ?**
**கற்றறிந்தார் தம்மை வெகுளாமைக் காப்பமையும்**
**நெல்செய்யப் புல்தேய்ந்தாற் போல, நெடும்பகை,**
**தற்செய்யத் தானே கெடும்.**

என்பது, நெற்பயிர் செய்ய, அதற்குமுன் அவ்விடத்தே நிரம்பி இருந்த புல் முழுவதும் அழிந்துபோகும். அதுபோலவே, ஒருவன் தன்னை வலிமையுடையவனாகச் செய்து கொண்டானென்றால் அவனுடைய நெடுங்காலத்துப் பகைமையும் தானே மறைந்துவிடும். ஆதலால், வருவதற்கு எல்லாம் தனித்தனியாகத் தன்னை ஒருவன் வலிமை உடையவனாகச் செய்துகொள்ள வேண்டுமோ எனில், வேண்டாம். கற்று அறிந்த சான்றோர்கள் தன்னை வெகுளாமல், நன்னெறியில் ஒழுகித் தன்னைக் காத்துக் கொள்வதே போதுமானது என்பதாகும்.

(83)

**இதுமன்னும் தீதென் றியைந்ததூஉம், ஆவார்க்கு**
**அதுமன்னும் நல்லதே ஆகும் - மதுமன்னும்**
**வீநாறு கானல் விரிதிரைத் தண்சேர்ப்ப!**
**தீநாள் திருவுடையார்க்கு இல்.**

என்பது, தேனையுடைய பூக்கள் நறுமணம் வீசிக் கொண்டிருக்கின்ற கடற்சோலைகளையுடைய, விரிந்த அலைகள் வீசும் குளிர்ந்த கடற்கரை நாட்டிற்கு உரியவனே! இது மிகவும் தீமை தருவதாகும் எனப் பிறர் கருதும் வகையிலே பொருந்தியதொன்றும், செல்வம் ஆகிவரும் நல்வினை உடையவர்களுக்கு மிகவும் நல்லதாகவே முடியும். அதனால், நல்ல அதிர்ஷ்டம் உடையவர்களுக்குத் தீமைதரும் நாட்கள் என்பது எதுவுமே இல்லை என்பதாகும்.

(84)

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.

2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. சிறந்த செயலைச் செய்து முடிக்கும் வழி யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

2. யாரைப் பேசாதிருத்தல் நல்லது என்கிறார் பழமொழியார்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

3. பகைமை மறையும் நெறி யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

4. தீநாள் திருவுடையார்க்கு இல் என்பதன் பொருள் யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

குறிப்புகள்

**ஒட்டிய காதல் உமையாள் ஒருபாலாக்,**
**கட்டங்கம் வெல்கொடி கொண்டானும், கொண்டானே;**
**விட்டாங்கு அகலா முழுமெய்யும் கொள்பவே,**
**நட்டாரை ஒட்டி யுழி.**

என்பது, உளம் பொருந்திய காதலுடைய உமையவளைத் தனிலே ஒரு கூறாக அமையுமாறு தண்டினையும் வெல்லுகின்ற ஏற்றுக் கொடியைத் தனக்கு உரியதாகக் கொண்டவனும் கொண்டிருக்கிறான். தம்மை நட்புச் செய்தவர்களைச் சேர்ந்த பொழுதிலே, அவரை விட்டு அவ்விடத்தே கொஞ்சமேனும் அகலாமல், முழு உடம்பும் பொருந்தக் கலந்து விடுபவர்களே சிறந்த நண்பர்கள் ஆவர் என்பதாகும்.

(85)

**உழையிருந்து, நுண்ணிய கூறிக், கருமம்,**
**புரைஇருந்த வாறறியான், புக்கான் விளிதல்**
**நிரையிருந்து மாண்ட அரங்கினுள், வட்டு,**
**கரையிருந் தார்க்கெளிய, போர்.**

என்பது, மக்கள் வரிசையாக இருந்து, அதனால் மாட்சிமைப்பட்டு விளங்கும் ஒரு வட்டாடும் அரங்கம். அந்த அரங்கினுள்ளே, தாம் வட்டாடாமல் ஒதுங்கிப் பக்கத்திலே இருந்து பார்த்துக் கொண்டிருப்பவர் சிலர்; அவர்களுக்கு வட்டாடும் போர் மிகவும் எளிதாகவே தோன்றும். அதன் நுட்பத்தினை அறிந்தவர்க்கே, அதன் உண்மையான நிலைமைகள் தோன்றும். அதுபோலவே, அருகே இருந்து நுண்மையான கருத்துக்களைச் சொன்னாலும் ஈடுபடும் செயலானது குறைபாடுடையதாக இருப்பதான அதன் தன்மையை அறியாதவன். அதனைச் செய்யப்புகுந்தால், செயல் முற்றுப்பெறாது அழிவடைதலும் உண்மை என்பதாகும். (86)

**கள்ளி யகிலும், கருங்காக்கைச் சொல்லும்போல்,**
**எள்ளற்க, யார்வாயும் நல்உரை! - தெள்ளிதின்**
**ஆர்க்கும் அருவி மலைநாட! நாய்கொண்டால்**
**பார்ப்பாரும் தின்பர் உடும்பு.**

என்பது, அருவிகள் தெளிவான ஒலியோடு வீழ்ந்து ஒலித்துக் கொண்டிருக்கும் மலைநாடனே! பார்ப்பார்களும், நாயானது கௌவிக் கொண்டுவந்து கொடுத்தால் உடும்பினையும் தின்பார்கள். அதுபோலவே, கள்ளியிடத்தே பிறக்கும் அகிலையும், கருமையான காக்கை கரைவதனையும் நன்மையெனவே கொள்வார்கள். அவைபோல, எவர் வாயிடத்துப் பிறந்த நல்லுரைகளையும் தள்ளாது ஏற்றுக் கொள்க. அவற்றை ஒருபோதும் இகழ வேண்டாம் என்பதாகும்.

(87)

**தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்பர்எனப் பட்டார்க்கு**
**உற்ற குறையை உரைப்பதாம் - தெற்ற**
**அறையார் அணிவளையாய்! தீர்தல் உறுவார்**
**மறையார், மருத்துவர்க்கு நோய்.**

என்பது, அறுத்துச் செய்யப்பட்ட அழகிய சங்கு வளையல்களை உடையவளே! நோய் தீரவேண்டுமென விரும்புகிறவர்கள் அதனைத் தீர்க்கும் மருத்துவர்க்கு அந்நோயினை மறைக்க மாட்டார்கள். அதுபோலவே, மிகவும் தமக்காகப் பரிந்து தம் வருத்தத்தைத் தீர்ப்பார்கள் என எண்ணப்பட்ட ஒருவருக்கு, தாம் உற்ற குறைபாட்டைச் சென்று உரைப்பார்கள். அது நீங்க வேண்டுபவர் என்பதாகும்.

(88)

**கண்ணுள் மணியேபோல் காதலால் நட்டாரும்,**
**எண்ணும் துணையிற் பிறராகி நிற்பரால்**

**எண்ணி உயிர்கொள்வான் வேண்டித் திரியினும்,**
**உண்ணுந் துணைகாக்கும் கூற்று.**

என்பது, கூற்றமானவன், விதித்த ஆயுள்நாளை எண்ணிக் கொண்டே காத்திருந்து, உயிர்களைப் பற்றிச் செல்வதனை விரும்பித் திரிந்துகொண்டே இருப்பவன். என்றாலும், அப்படி ஓர் உயிரையும், தான் உண்ணும் காலம் வரும் வரையும் அவனும் காத்தே நிற்பான். அதுபோலவே கண்ணினுள் இருக்கும் கருமணியைப் போல அன்புடன் நண்பு காட்டிப் பழகிய போலி நண்பர்களும், தமக்கு ஆகவேண்டிய பயன் நம்மால் முடிந்தன என்று எண்ணும் அந்தப் பொழுதிலேயே, நம்முடைய பகைவராகி நிற்பார்கள் என்பதாகும்.

(89)

**செந்நீரார் போன்று சிதைய மிதிப்பார்க்கும்,**
**பொய்ந்நீரார் போன்று பொருளை முடிப்பார்க்கும்,**
**அந்நீ ரவர்க்குத் தக்காங்கு ஒழுகுபவே**
**வெந்நீரில் தண்ணீர் தெளித்து.**

என்பது, தம் காரியம் கெடும்படியாகச் செய்ய நினைப்பவரிடத்திலே, அவரிடத்து நல்ல தன்மை உடையவர்போல நடந்து அவரை ஒதுக்க வேண்டும். பொருளைப் பேணிச் செயலை முடிப்பவரிடத்து அதனை அறியாதார் போலக் காட்டி அவரை விரைந்து செய்வதற்குத் தூண்டுதல் வேண்டும். இப்படி, அவரவர்க்குத் தக்கபடி நடந்து காரியத்தைச் சாதித்துக் கொள்வதே அறிவுடைமையாகும். அது, வெந்நீரிலே, வேண்டும் வெம்மைக்குத் தக்கபடி தண்ணீர் வளாவிக் கொள்வது போன்றது என்பதாகும்.

(90)

**பெருமலை நாட! - பிறரறிய லாகா**
**அருமறையை ஆன்றாரே காப்பர்; - அருமறையை**

**நெஞ்சில் சிறியார்க் குரைத்தல், பனையின்மேல்**
**பஞ்சிவைத் தெ.ஃ.கிவிட் டற்று.**

என்பது, பெரிய மலைகளை உடைய நாட்டிற்கு உரியவனே! பிறர் அறியக் கூடாத அரியதான ஓர் இரகசியத்தை, அமைந்த அறிவுடையர்களான ஆன்றோர்களே வெளியிடாமல் காப்பார்கள். அத்தகைய அரிய இரகசியத்தை, உள்ளத்தால் சிறுமையாளரான கீழோர்க்கு உரைத்தல் ஒருபோதுமே கூடாது. அவர்க்கு உரைத்தலானது, உயரமான பனையின் மேலே பஞ்சைக்கொண்டு வைத்துக்கொண்டு, ஒருவன் பஞ்சு கொட்டுவதைப் போன்றது என்பதாகும்.

(91)

**பொலந்தார் இராமன் துணையாகத் தான்போந்து**
**இலங்கைக் கிறைவற்கு இளையான் - இலங்கைக்கே**
**போந்திறை யாவதூஉம் பெற்றான் - பெரியாரைச்**
**சார்ந்து கெழீஇயிலார் இல்.**

என்பது, அழகிய மாலையினை அணிந்த இராமனைத் தனக்குப் படைத்துணையாகக் கொண்டு சென்று, இலங்கைக்கு உரிய இராவணேசுவரனுக்கு இளையவனான விபீஷணன், இலங்கைக்கே மீளவும் சென்று, அதற்கு அரசனாகும் பதவியையும் பெற்றனன். ஆதலால், வலிமையில் பெரியவரைச் சார்ந்திருந்து, அதன் சார்பினாலே, பயன் பெறாதவர் என்று எவரும் இல்லை என்பதாகும்.

(92)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

5. யார் சிறந்த நண்பர்கள்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

6. நல்லுரை ஏற்கும் இயல்பு யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

7. போலி நண்பர்களின் செயல் யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

8. இரகசியத்தை யாருக்குக் கூறக் கூடாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

**சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்ப,**
**காலை கழிந்ததன் பின்றையும், - மேலைக்**
**கறவைக்கண் ணூர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்**
**முறைமைக்கு மூப்பிளமை இல்.**

என்பது, முன்னாளிலே பசுவின் கன்றின்மேல் தேரைச் செலுத்திக் கொன்ற தன் மகனை, அவன் தந்தையான மனுநீதிச் சோழனே தேரைச் செலுத்திக் கொன்று நீதி செலுத்தினான். அச்செயல் மிகவும் இரகசியமாகப் பாதுகாத்து அறமுரைக்கும் சான்றோர்களே கடமையை மறந்த போதும், பல நாட்கள் கழிந்து போனதன் பின்னாலும் அவன் முறைமையைப் பேணினான். இதனால் நீதிக்கு இளமை மூப்பு என்பது எதுவும் இல்லை என்று அறிதல் வேண்டும் என்பதாகும்.

(93)

**நற்பால கற்றாரும் நாடாது சொல்லுவரால்;**
**இற்பாலார் அல்லார் இயல்பின்மை நோவதென்?**
**கற்பால் இலங்கருவி நாட!மற்றி யாரானும்**
**சொல்சோரா தாரோ இல்.**

என்பது, மலையினிடத்தே விளங்கும் அருவிகளையுடைய நாடனே! நல்ல அற நூல்களைக் கற்றவரும் ஆராயாது சில சமயம் சில சொற்களைச் சொல்லுவார்கள். அப்படி யிருப்பவும், நல்ல குடியிற் பிறந்தவர் அல்லாதவரின் இயல்பற்ற தன்மையைக் குறித்து நொந்து கொள்வது எதற்காகவோ? யாவரே யானாலும், சொல்லின்கண் சோர்வுபடாதவரே இல்லை என்று அறிவாயாக என்பதாகும்.

(94)

**தத்தமக்குக் கொண்ட குறியோ தவமல்ல;**
**செத்துக! சாந்து படுக்க!மனம் - ஒத்துச்**

**சமத்தனாய் நின்றொழுகும் சால்பு தவமே-**
**நுகத்துப் பகலாணி போன்று.**

என்பது, தவம் என்று சொல்லப்படுவது, பற்பல சமயத்தார்களும் தத்தமக்கு என்று வேறுவேறாகக் கொண்டுள்ள புற வேடங்கள் அன்று; தன்னை ஒருவன் சிதைத்துத் துன்புறுத்தினாலும், மற்றொருவன் சந்தனம் பூசி மகிழ்வித்தாலும், அந்த இருவர்பாலும் ஒத்த மனம் உடையவனாக, நுகத்தின் நடுவிலே நிற்கும் பகலாணியைப்போல், அவ்விரு திறத்தாருக்கும் நடுவணாக நின்று ஒழுகும் சால்பு இருக்கிறதே அதுவே சிறந்த தவம் என்பதாகும்.

(95)

**மாடம் அழிந்தக்கால், மற்றும் எடுப்பதோர்**
**கூடம் மரத்திற்குத் துப்பாகும்; அ∴தேபோல்**
**பீடிலாக் கண்ணும், பெரியோர் பெருந்தகையர்**
**ஈடில் லதற்கில்லை பாடு.**

என்பது, மேல்மாடங்களை உடைய பெரிய வீடானது அழிந்தவிடத்தும், அதிலுள்ள மரங்கள் மீண்டும் கட்டுவதற்கான ஒரு கூடத்திற்காவது பயன்படும். அதுபோலவே பெரியோர்கள், செல்வம் இல்லாத இடத்தும், தம்முடைய பெருந்தன்மையினின்றும் குறைபாடுறவே மாட்டார்கள். அதனால், இணையில்லாத சிறப்புடைய ஒன்றுக்கு என்றுமே அழிவில்லை என்று அறிதல் வேண்டும் என்பதாகும்.

(96)

**தழங்குரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்,**
**கிழங்குடைய எல்லாம் முளைக்குமோர் ஆற்றால்**
**விழைந்தவரை வேர்சுற்றக் கொண்டொழுகல் வேண்டா**
**பழம்பகை நட்பாதல் இல்.**

என்பது, முழங்கும் இடிக்குரலினையுடைய மேகத்துக் குளிர்ந்த பெயலாகிய மழையினைப் பெற்றால், கிழங்கு உடைய புல் பூண்டுகள்

எல்லாம் ஒரு வகையே அனைத்தும் முளைத்து விடும். பழையதான பகைவர் ஒருபோதும் நட்பினராதல் என்பதே இல்லையாகும். அதனால், அவரை விரும்பிச் சென்று, வேரூன்றும்படியாக நட்புச் செய்து ஒழுகுதல் என்பது எப்போதுமே வேண்டாம் என்பதாகும்.

(97)

**வெள்ளம் பகையெனினும், வேறிடத்தார் செய்வதென்?**
**கள்ளம் உடைத்தாகிச் சார்ந்த கழிநட்பு!**
**புள்ளொலிப் பொய்கைப் புனலூர!- அஃதன்றோ,**
**அள்ளில்லத் துண்ட தனிசு.**

என்பது, பறவைகளின் ஆரவாரத்தைக் கொண்ட பொய்கைகளை உடைய நீர்வளம் மிகுந்த ஊரனே! பகைவர்கள் வெள்ளம்போற் பெரும்படையினை உடையவர்கள் என்றாலும், அவர் வேற்றிடத்தினராய் இருந்தால் அவர்களால் என்ன தீங்கைச் செய்துவிட முடியும்? ஆனால், உள்ளத்திலே கள்ளம் உடையவராக நம்முடன் நெருங்கிப் பழகுபவரின் பெரிய போலி நட்பு இருக்கிறதே, அது மிகவும் கேட்டைத் தரும். அதுதான் ஒரே வீட்டிற்குள்ளேயே கடன் பட்டதுபோல இடையறாத பெரிய வேதனையைத் தரும் என்பதாகும்.

(98)

**அடங்கி, அகப்பட ஐந்தினையும் காத்துத்,**
**தொடங்கிய மூன்றினால் மாண்டீண்டு - உடம்பொழிய,**
**செல்லும்வாய்க் கேமம் சிறுகாலைச் செய்யாரே**
**கொள்ளிமேல் கொட்டுவைத் தார்.**

என்பது, தம் உள்ளத்திலே ஆசைகள் அற்றவனாக அடங்கியிருந்து, ஐம்புலன்களையும் தம் ஆணைக்குள் அகப்படுமாறு செய்து, அவை மேற் செல்லாதபடி காத்துத், தாம் ஏற்றுத் தொடங்கிய துறவு நெறியின்கண், மனம் வாக்குக் காயம் என்ற மூன்றினாலும் மாட்சிமையுடையவராக விளங்கி, இவ்வுலகத்தே உடம்பானது ஒழிந்து

போகுமாறு கைவிட்டுச் செல்லும் மறுமை நெறிக்குப் பாதுகாவலான உறுதியை, இளமையிலேயே செய்யாதவர்களே, தீயின் மீது விதை நெல்லைப் பெய்து பொரித்து உண்ணும் மூடர்கள் ஆவர் என்பதாகும்.

(99)

**நல்கூர்ந் தவர்க்கு, நனிபெரியர் ஆயினார்,**
**செல்விருந்து ஆகிச் செலல்வேண்ட; ஒல்வது**
**இறந்தவர் செய்யும் வருத்தம், குருவி**
**குறங்கறுப்பச் சோரும் குடர்.**

என்பது, குருவியானது தொடையை அறுத்த அளவிலே, குடர் சரிந்து விழுந்து விடும் என்பது நடைமுறையாகும். அதனால், மிகவும் பெரிய செல்வம் உடையவர்கள் வறுமையாளர்களிடத்திலே செல்லும் விருந்தினர்களாகப் போக வேண்டாம். தம் தகுதிக்கு மீறி அவர்கள் இவர்களுக்கு விருந்து செய்வதற்குப் படுகின்ற வருத்தம் மிகவும் அதிகமாயிருக்கும். இருந்தாலும், செல்பவர் நிறைவு அடையவும் முடியாது என்பதாகும்.

(100)

**பரியப் படுபவர் பண்பிலார் ஏனும்,**
**திரியப் பெறுபவோ சான்றோர்? - விரிதிரைப்**
**பாரெறியும் முந்நீர்த் துறைவ! - கடனன்றோ**
**ஊரறிய நட்டார்க்கு உணா.**

என்பது, பரந்த அலைகள் கரையாகிய பாரிலே வந்து மோதுகின்ற, கடற்கரைக்கு உரிய தலைவனே! தம்மால் விரும்பிப் பாதுகாக்கப்படுபவர் பண்பற்றவர்களாக இருந்தாலும், சான்றோர்கள் அதனால் தங்கள் தன்மையினின்று சற்றும் மாறுபாடு அடைவார்களோ? மாட்டார்கள். ஆகையால், ஊர் அறிய நம்முடன் நட்புச் செய்தவர்க்கு உணவளிப்பதும் நம் கடமை அல்லவோ என்பதாகும்.

(101)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

9. சிறந்த தவம் எது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

10. அழிவில்லாதவர்கள் யார்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

11. தீயின் மீது விதை நெல்லைப் பெய்து பொரித்து உண்ணும் மூடர்கள் யார்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

12. சான்றோர் நட்பு எத்தகையது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

## 10.4. தொகுத்துக் காண்போம்

குறிப்புகள்

⇒ போர்த்தன்மை கொண்டோரின் தன்மை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ காரியம் சாதிக்கும் வழிமுறைகள் பற்றித் தெரிந்து கொஒணடீர்கள்.

⇒ அறிவுடையோர் நிலைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ மாக்களின் நிலைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ நன்னெறி பிறழாதவரின் நிலைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ நண்பர்களில் சிறந்த நண்பர் யார் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ நல்லுரை ஏற்கும் மாண்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ போலி நண்பர்கள் எத்தகையோர் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ நீதிக்கான நெறிமுறைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ தவத்தின் நிலைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ மேன்மக்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ கூடா நட்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ சான்றோர்தம் கடமைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 10.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 10.3. (77ம் பாடல்)
2. 10.3. (79ம் பாடல்)
3. 10.3. (83ம் பாடல்)
4. 10.3. (84ம் பாடல்)
7. 10.3. (89ம் பாடல்)
8. 10.3. (91ம் பாடல்)
9. 10.3. (95ம் பாடல்)
10. 10.3. (96ம் பாடல்)

| | | | |
|---|---|---|---|
| 5. | 10.3. (85ம் பாடல்) | 11. | 10.3. (99ம் பாடல்) |
| 6. | 10.3. (87ம் பாடல்) | 12. | 10.3. (101ம் பாடல்) |

குறிப்புகள்

## 10.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. பழமொழி நானூறு உணர்த்தும் வரலாற்றுக் கதைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. பழமொழி நானூற்றில் அறியத்தகும் நல்லொழுக்கங்கள் யாவை?
3. பழமொழி நானூறு உணர்த்தும் அறநெறிகள் யாவை?
4. பழமொழி நானூறு உணர்த்தும் சா்னறோர் கடமைகள் யாவை?

## 10.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. புலியூர்க் கேசிகன்(உரை), பழமொழி நானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
2. ச.வே. சுப்பிரமணியன் (பதி.), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - பழமொழி நானூறு, மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2007.
3. புலவர் குழந்தை, நீதிக்களஞ்சியம், சாரதா பதிப்பகம், சென்னை, 2007.

குறிப்புகள்

## பிரிவு 4. திருமந்திரம் - நீதிநெறி விளக்கம்

## திருமூலரின் திருமந்திரம்

சிவபூமி எனப் போற்றப் பெறுஞ் சிறப்பு வாய்ந்த நம் நாட்டின் தொன்மை வாய்ந்த சமயமாகத் திகழ்வது; சைவ சமயமாகும். உலக மக்கள் உள்ளத்திலே தெய்வம் உண்டு என்னும் தெளிவினை நல்கி அன்பு நெறியில் ஒழுகப்பணித்து அறிவு நெறியை வளர்ப்பன தெய்வநெறிச் சிவம் பெருக்கும் சைவ சமய அருளாசிரியர்கள் அருளிய பன்னிரு திருமுறைகளாகும். திருமுறைப் பனுவலாகிய அருள் நூல்களுள் பத்தாம் திருமுறையாகத் திகழ்வது, தமிழ் மூவாயி ரமாகிய திருமந்திரமாகும்.

திருமந்திரமாலை என்னும் இத்திருமுறை, சைவசித்தாந்த சாத்திரமாகவும் இறைவன் திருவருளைப் போற்றிப் பரவும் தோத்திரமாகவும் விளங்குந் தனிச் சிறப்புடையது; வேத நெறியாகிய உலகியலொழுக்கத்தையும் மிகு சைவத் துறையாகிய சிவாகம உண்மைகளையும் இனிய தமிழால் விரித்து விளக்குவது. உலக மக்கள் எல்லோரும் பொதுவாக மேற்கொள்ளுதற்குரிய நல் வாழ்க்கை முறையினையும் சிவநெறிச் செல்வர்களாற் சிறப்பாக மேற்கொள்ளத்தக்க ஞானயோக நுண்பொருள்களையும் ஒருங்கே விளக்குவதாய்ச் சைவசித்தாந்த மெய்ந்நூற் பொருளை அறிவுறுத்தும் செந்தமிழ்ச் சிவாகமமாகத் திகழ்வது இத்திருமந்திரமேயாகும்.

திருக்கயிலாயத்திலே சிவபிரானது திருக்கோயிலில் முதற் பெருங் காவல் பூண்டவர் திருநந்திதேவர். அவரது திருவருள் பெற்ற மாணாக்கராகிய சிவயோகியார் ஒருவர். அவர் அணிமா முதலிய எண்வகைச் சித்திகளும் வாய்க்கப் பெற்றவர்; அகத்திய முனிவர்க்கு

நண்பர். அம்முனிவருடன் சில நாள் தங்குதற்கு எண்ணிய சிவ யோகியார், பொதியமலையை அடைதற்கு எண்ணித் திருக்கயிலாயத் தினின்றும் புறப்பட்டுத் தென்திசை நோக்கி வந்தார். வரும் வழியில் திருக்கேதாரம், பசுபதிநாதம் (நேபாளம்), அவிமுத்தம் (காசி), விந்தமலை, திருப்பருப்பதம், திருக்காளத்தி, திருவாலங்காடு ஆகிய திருத்தலங்களைப் பணிந்து காஞ்சி நகரையடைந்தார். அங்குத் திருவேகம்பத்தில் எழுந்தருளிய பெருமானை இறைஞ்சிப் போற்றினார். கல்வியிற் கரையிலாத காஞ்சி நகரில் வாழும் சிவயோகியர்களாகிய தவமுனிவர் பலருடனும் அளவளாவி மகிழ்ந்தார். பின்னர்த் திருவதிகையை யடைந்து திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளை வழிபட்டுப் போற்றினார். இறைவன் அற்புதத் திருக்கூத்தாடியருளும் திருச்சிற்றம்பலத்தினைத் தன்னகத்தே கொண்டு திகழும் பொற்பதியாகிய பெரும் பற்றப் புலியூரை வந்தடைந்தார். அங்குக் கூத்தப் பெருமானைப் போற்றித் தம் உள்ளத்தே பொங்கியெழுந்த சிவஞானமாகிய மெய்யுணர்வினால் சிவானந்தத் திருக்கூத்தினைக் கண்டுகளித்து ஆராத பெருவேட்கையினால் தில்லைப் பதியில் சிலகாலம் தங்கியிருந்தார்.

தில்லைத் திருநடங்கண்டு மகிழ்ந்த சிவயோகியார், அங்கிருந்து புறப்பட்டுக் காவிரியில் நீராடி அதன் தென்கரையினை அடைந்தார். உமையம்மையார் பசுவின் கன்றாக இருந்து இறைவனை வழிபாடு செய்து அம்முதல்வனுடன் எழுந்தருளியிருந்து மன்னுயிர்க்கு அருள் புரியுந் திருத்தலமாகிய திருவாவடுதுறையை அணுகித் திருக்கோயிலை வலம் வந்து வழித்துணை மருந்தாகிய மாசிலா மணியீசரை வழிபட்டு மகிழ்ந்தார். அந்நிலையிலே அத்தலத்தை விட்டு நீங்காததொரு கருத்து அவருள்ளத்தே தோன்றியது. அதனால் அத்தலத்திலே தங்கியிருந்தார். ஆவடுதுறையீசர்பால் ஆராத காதலையுடைய சிவயோகியார், அத்தலத்தை அரிதின் நீங்கிச் செல்லத் தொடங்கினார். அவர் செல்லும்

வழியிற் காவிரிக் கரையிலுள்ள சோலையிலே மேய்ந்துகொண்டிருந்த பசுக்கள் கதறி யழுவதனை எதிரே கண்டார். அந்தணர்கள் வாழும் சாத்தனூரிலே ஆநிரை மேய்க்குங் குடியிற் பிறந்த ஆயனாகிய மூலன் என்பான் அவ்விடத்தே தனியே வந்து பசு நிரையை மேய்க்குந் தொழிலில் ஈடுபட்டவன், தான் எடுத்த பிறவிக்குக் காரணமாகிய வினைகள் நுகர்ந்து தீர்ந்தமையால் அவனது வாழ்நாளைக் கூற்றுவன் கவர்ந்துகொள்ள உயிர்நீங்க அங்கு நிலத்தில் வீழ்ந்து இறந்து வெற்றுடலாய்க் கிடந்தான். அவனது உயிர் பிரியவே அவனால் அன்புடன் மேய்க்கப்பெற்ற பசுக்கள் அவனது உடம்பினைச் சுற்றி நெருங்கி நின்று மோப்பனவும் கதறுவனவுமாகி வருந்தின.

ஆக்களின் பெருந்துயரத்தைச் சிவயோகியார் கண்டார். அருளாளராகிய அவருள்ளத்திலே பசுக்கள் உற்ற துயரத்தை நீக்குதல் வேண்டும் என்னும் எண்ணம் இறைவன் திருவருளால் தோன்றியது, இந்த ஆயன் உயிர் பெற்றெழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்கா எனத் தெளிந்த சிவயோகியார், தம்முடைய உடம்பினைப் பாதுகாப்புடைய ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டுத் தாம் பயின்றுணர்ந்த பரகாயப் பிரவேசம் (கூடுவிட்டுக் கூடுபாய்தல்) என்னும் பவன வழியினாலே தமது உயிரை ஆயனாகிய மூலனது உடம்பிற் புகும்படி செலுத்தித் திருமூலர் என்னும் பெயருடையராய் எழுந்தார். அவர் ஆயனுடம்புடன் எழுதலும், சுற்றி நின்ற பசுக்கள் யாவும் தம் துயரம் நீங்கி அன்பின் மிகுதியால் அவரது உடம்பினை நாத்தழும்ப நக்கிமோந்து கனைத்து மிகுந்த களிப்புடன் துள்ளியோடித் தாம் விரும்பிய இடங்களிற் சென்று புல்லை மேய்ந்தன. அதுகண்டு மகிழ்ந்த திருமூலர் பசுக்கள் விரும்பிப் புல்மேயும் இடங்களில் உடன் சென்று நன்றாக மேய்த்தருளினார். வயிறார மேய்ந்த பசுக்கள் கூட்டமாகச் சென்று காவிரியாற்றின் துறையில் இறங்கி நல்நீர்

பருகிக் கரையேறின. திருமூலர் அப்பசுக்களைக் குளிர்ந்த நிழலிலே தங்கி இளைப்பாறச் செய்து பாதுகாத்தருளினார்.

அந்நிலையில் கதிரவன் மேற்குத் திசையை யணுக, மாலைப் பொழுது வந்தது. பசுக்கள் தத்தம் கன்றுகளை நினைந்து தாமே மெல்ல நடந்து சாத்தனூரை அடைந்தன. அவை செல்லும் வழியிலே தொடர்ந்து பின் சென்ற திருமூலர், பசுக்கள் தத்தமக்குரிய வீடுகளிற் சென்று சேர்ந்த பின்னர் அவ்வூர் வழியில் தனித்து நின்றார். அப்பொழுது ஆயனாகிய மூலனுடைய மனைவி என் கணவர் பொழுது சென்றும் வரவில்லையே, அவர்க்கு என்ன நேர்ந்ததோ என்று அஞ்சியவளாய்த் தன் கணவனைத் தேடிக் கொண்டு வழியெதிரே செல்பவள் திருமூலராகிய சிவயோகியார் நின்ற இடத்தை அடைந்தாள். தன் கணவனது உடம்பிற்றோன்றிய உணர்வு மாற்றத்தைக் கண்டாள். இவர்க்கு ஏதோ தீங்கு நேர்ந்திருத்தல் வேண்டும் என எண்ணினாள்; அவரைத் தளர்ச்சியின்றித் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் கருத்துடன் அவருடம்பைத் தொடுதற்கு நெருங்கினாள். அதுகண்ட திருமூலராகிய சிவயோகியார் அவர் தம்மைத் தீண்டாதபடி தடுத்து நிறுத்தினார்.

நெருங்கிய சுற்றத்தார் எவருமின்றித் தனியளாகிய அவள் திருமூலரது தொடர்பற்ற தனி நிலையைக் கண்டு அஞ்சிக் கலக்கமுற்றாள். நும்பால் அன்புடைய மனைவியாகிய எளியேனை வெறுத்து நீங்குதலாகிய இதனால் எனக்குப் பெருந்துன்பத்தைச் செய்துவிட்டீர் என்று புலம்பி வாட்டமுற்றாள். நிறைதவச் செல்வராகிய திருமூலர் அவளைப் பார்த்து, நீ எண்ணியபடி உனக்கு என்னுடன் எத்தகைய உறவும் இல்லை என்று சொல்லிவிட்டு அவ்வூரிலுள்ள பொது மடத்திற் புகுந்து சிவ யோகத்தில் அமர்ந்திருந்தார்.

தன் கணவனது தன்மை வேறுபட்டதனைக் கண்ணுற்ற மூலன் மனைவி, அது பற்றி யாரிடமும் சொல்லாமலும் தவநிலையினராகிய அவர்பால் அணையாமலும் அன்றிரவு முழுதும் உறங்காதவளாய்த் துயருற்றாள். பொழுது விடிந்தபின் அவ்வூரிலுள்ள நல்லோரை யடைந்து தன் கணவனது நிலைமையை எடுத்துரைத்தாள். அதனைக் கேட்ட பெரியோர்கள் திருமூலரை அணுகி அவரது நிலையை நாடி உற்று நோக்கினார்கள். இது பித்தினால் விளைந்த மயக்கம் அன்று; சித்த விகாரக் கலக்கங்களையெல்லாம் அறவே களைந்து தெளிவுபெற்ற நிலையில் சிவயோகத்தில் அழுந்திய கருத்தினராய் இவர் அமர்ந்திருக்கின்றார். இந்நிலைமை யாவராலும் அளந்தறிதற்கு அரியதாகும் எனத் தெளிந்தார்கள்.

இவர் இருவகைப் பற்றுக்களையும் அறுத்து ஞானோபதேசத்தால் பரமர் திருவடியைப் பெற்ற சீவன் முத்தர்களைப் போன்று எல்லாவற்றையும் ஒருங்கே அறியவல்ல முற்றுணர்வுடைய முனிவராக விளங்குகின்றார். எனவே முன்னை நிலைமைப்படி உங்கள் சுற்றத் தொடர்பாகிய குடும்ப வாழ்க்கையில் ஈடுபடமாட்டார் என மூலனுடைய மனைவிக்கு எடுத்துரைத்தார்கள். அதுகேட்டு அவள் அளவிலாத் துயரத்தால் மயக்கமுற்றாள். அருகேயுள்ளவர்கள் அவளுக்குத் தேறுதல்கூறி வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

சாத்தனூர்ப் பொதுமடத்தில் சிவயோகத்தில் அமர்ந்திருந்த திருமூலர். யோகம் கலைந்து எழுந்து முதல்நாளில் பசுக்கள் வந்த வழியினையே நோக்கிச் சென்று தமது உடம்பினை மறைத்து வைத்த இடத்தை அடைந்து தம் உடம்பைத் தேடிப்பார்த்தார். வைத்த இடத்தில் அவ்வுடம்பு காணப்படவில்லை. அது மறைந்து போன செயலை மெய்யுணர்வுடைய சிந்தையில் ஆராய்ந்து தெளிந்தார்.

சிவபெருமான் உயிர்கள் பால்வைத்த பெருங்கருணை யினாலே அருளிச் செய்த சிவாகமங்களின் அரும்பொருள்களை இந் நிலவுலகில் திருமூலரது வாக்கினால் தமிழிலே வகுத்துரைக்கக் கருதிய திருவருட்டிறத்தால் சிவயோகியாரது முன்னைய உடம்பினை இறைவர் மறைப்பித்தருளினார் என்ற உண்மையினைத் திருமூலர் தமது முற்றுணர்வினால் தெளியவுணர்ந்தார். சாத்தனூரிலிருந்து தம்மைப் பின்தொடர்ந்து வந்த ஆயர் குலத்தவர்க்கும் தமக்கும் எத்தகைய உறவும் இல்லை என்று அவர்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்தார், அவர்களெல்லோரும் தம்மை விட்டு நீங்கியபின் சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து அவ்விடத்தை விட்டு நீங்கித் திருவாவடுதுறைத் திருக்கோயிலை அடைந்தார்; அங்கு எழுந்தருளிய அம்மையப்பரை வணங்கி அத்திருக்கோயிலின் மேற்றிசையிலுள்ள அரசமரத்தின் கீழ்த் தேவாசனத்தில் சிவயோகத்தில் அமர்ந்து, நெஞ்சத் தாமரையில் வீற்றிருந்தருளும் செம்பொருளாம் சிவபரம் பொருளுடன் உணர்வினால் ஒன்றியிருந்தார்.

திருமந்திரம் அருளிச் செய்தல் இங்ஙனம் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த திருமூல நாயனார். ஊனொடு தொடர்ந்த பிறவியாகிய தீய நஞ்சினாலுளவாம் துயரம் நீங்கி உலகத்தார் உய்யும் பொருட்டு ஞானம் யோகம் சரியை கிரியை என்னும் நால்வகை நன்னெறிகளும் நால்வகை மலர்களாக விரிந்து ஞானமணம் பரப்பிச் சிவானந்தத் தேன் பிலிற்றும் திருமந்திர மாலையாகிய செந்தமிழ்ப் பனுவலை இறைவன் திருவடிக்கு அணிந்து போற்றும் நிலையில்,

**ஒன்றவன் தானே, இரண்டவன் இன்னருள்,**
**நின்றனன் மூன்றினுள், நான்குணர்ந்தான், ஐந்து**
**வென்றனன், ஆறு விரிந்தனன், ஏழும்பர்ச்**
**சென்றனன், தானிருந் தானுணர்ந் தெட்டே .**

-தி.10 பாயி. பா.2

என்னும் திருப்பாடலைத் தொடங்கி, ஓராண்டுக்கு ஒரு திருப்பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத் தமர்ந்திருந்து மூவாயிரம் திருப் பாடல்களைத் திருவாய் மலர்ந்தருளினார். இவ்வாறு தமிழ் மூவாயிரமாகிய திருமந்திர மாலையை நிறைவு செய்தருளிய திருமூல நாயனார் சிவபெருமானது திருவருளாலே திருக்கயிலையை யடைந்து இறைவன் திருவடி நீழலில் என்றும் பிரியாதுறையும் பேரின்ப வாழ்வினைப் பெற்று இனிதிருந்தார். திருமூலர் அருளிய திருமந்திர மாலை நலஞ் சிறந்த ஞான யோகக் கிரியா சரியையெலாம் மலர்ந்த மொழிமாலையாகத் திகழ் கின்றது எனச் சேக்கிழார் பெருமான் திருமூலநாயனார் வரலாற்றினைப் பெரிய புராணத்தில் விரித்துக் கூறியுள்ளார்.

இங்ஙனம் திருமூல நாயனார் வரலாறாகச் சேக்கிழார் நாயனார் விரித்துரைத்த நிகழ்ச்சிகள் பலவற்றுக்குத் திருமந்திரத்தில் திருமூலர் தம் வரலாறு கூறும் முறையில் அருளிச் செய்த திருமந்திரப் பாடல்கள் அகச்சான்றுகளாக அமைந்துள்ளன. மூலன் என்னும் ஆயனது உடம்பிற் புகுந்து திருமந்திர மாலையை அருளிச் செய்த முனிவர்பிரான் திருக்கயிலையில் நந்தி தேவர்பால் ஞானோபதேசம் பெற்ற நான்மறையோகிகளுள் ஒருவர் எனவும் அருளாளராகிய அவர் சாத்தனூரை அடைந்த பொழுது மூலனால் மேய்க்கப்பெற்ற பசுக்களின் துயரம் நீங்கத் தமது சித்தித் திறத்தால் தமது உயிரை மூலனது உடம்பிலே புகச் செய்து, திருமூலர் என்னும் பெயர் பெற்றுத் திருமந்திரமாகிய செந்தமிழ் ஆகமத்தை அருளிச் செய்தார் எனவும் நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழா ரடிகளும் தெளிவாகக் கூறியிருத்தலால், திருமந்திர நூலாசிரியர்க்கு வழங்கும் திருமூலர் என்னும் இப்பெயர் அவர் மூலன் என்னும் ஆயனது உடம்பிற் புகுந்த பின்னரே உளதாயிற்று என்பது நன்கு புலனாகும். நந்தி தேவர் பால் அருளுபதேசம் பெற்ற நான்மறை யோகியராகிய அவர்,

தம்முன்னை நிலையில் அவர் பிறந்த ஊர், குடி, பேர் முதலியவற்றை அறிந்து கொள்ளுதற்குரிய வரலாற்றுச் சான்றுகள் தெளிவாகக் கிடைக்காமையால், அவரது வரலாறு கூற வந்த சேக்கிழாரடிகள், சிவயோகியார் மூலனுடம்பிற் புகுந்து திருமூலர் என்னும் பெயர் பெறுவதற்கு முன்னுள்ள அவர்தம் ஊர், பேர், குலம், முதலிய வரலாற்றுச் செய்திகளைக் குறித்து எதுவும் கூறாது விட்டார் எனக் கருதவேண்டியுள்ளது.

தமிழ் முனிவராகிய அகத்தியரைக் காண விரும்பித் திருக்கயிலாயத்தினின்றும் தென்றிசை நோக்கி வந்த சிவயோகியார், வடநாட்டிற் சிவத்தலங்கள் பலவற்றையும் வழிபட்டு வருபவர், தென்னாட்டிற் காஞ்சி நகரத்தையடைந்து அங்கு வாழும் சிவயோகியர் பலரொடும் அளவளாவினார் எனச் சேக்கிழாரடிகள் குறித்தலாலும், தமிழ் நாட்டிற் பொதிய மலையில் தங்கிய அகத்திய முனிவரொடு பழகிய நட்பினால் அவரைக் காணப் புறப்பட்டு வந்தமையாலும், தமிழகத்தின் தெற்கெல்லையாகிய குமரித்துறையில் அருட்சத்தியாகிய அம்மையார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருத்தலையும், தம் காலத்தில் தமிழ்நாடு ஐந்து மண்டலங்களாகப் பகுக்கப்பட்டிருத்தலையும், வழிப்போவார் அச்சமின்றிச் செல்லவொண்ணாதபடி கொங்கு நாட்டில் வழிப்பறித் தொழில் நிகழ்தலையும் இந்நூலிற் குறித்துள்ளமையாலும் இந்நூலாசிரியராகிய சிவயோகியார் மூலனுடம்பிற் புகுந்து திருமூலர் என்னும் பெயரைப் பெறுவதற்கு முன்னரும் தமிழ் நாட்டிற் பல்லாண்டுகள் வாழ்ந்த பயிற்சியுடையார் என்பது நன்கு தெளியப்படும். சிவாகமப் பொருளை நன்றாகத் தமிழிற் செய்யும்படி இறைவன் தம்மை நன்றாகப் படைத்தனன் எனத் தம்மைத் தமிழொடு தொடர்புபடுத்திக் கூறுதலால் அவர் தமிழ்க்குலத் தொடர்புடையவர் என்பதும், எனவே தென்தமிழ் நாட்டிலிருந்து வட கயிலையை அடைந்து மீண்டு தென்னாடுபோந்து

அற இலக்கியம் குறிப்புகள்

திருவாவடுதுறையிற் சிவயோகத்தமர்ந்து செந்தமிழாகமத்தை அருளிச்செய்து சிவபரம்பொருளுடன் இரண்டறக் கலந்த தமிழ்முனிவர் திருமூல நாயனாரென்பதும் நன்கு துணியப்படும்.

இனி, திருமூல நாயனார் இத் திருமந்திரப் பனுவலை அருளிச் செய்த காலம் எது என்பது இங்கு ஆராய்தற்குரியதாகும். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன் எனப் போற்றியிருத்தலாலும், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகிய தேவார ஆசிரியர் பாடியருளிய திருப்பதிகங்களில், திருமூலர் அருளிய திருமந்திரப் பாடல்களின் சொற்றொடர்களும் பொருள்களும் எடுத்தாளப்பட்டிருத்தலாலும், திருமூல நாயனார் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முற்பட்டதென்பது தெளிவு. திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தமர்ந்து ஆண்டுக்கொரு திருப்பாடலாக மூவாயிரந் திருப்பாடல்களை அருளிச் செய்தார் எனப் பெரிய புராணம் கூறும்.

வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் தெளிந்துணர்ந்த சிவஞானச் செல்வராகிய திருமூலர், தாம் சிவயோக நிலையிலிருந்து சிந்தித்துணர்ந்த சிவாகம உண்மைகளை இந்நாட்டவர் யாவரும் ஓதியுணர்ந்து உய்தல் வேண்டும் என்னும் அருள்நோக்குடன் திருமந்திரப் பனுவலை அருளிச் செய்தமையால், அவரருளிய பாடல்களில் சமய சாத்திரக் குறியீடுகளாகிய பதி, பசு, பாசம்; ஆணவம், கன்மம், மாயை; சித்து, அசித்து; சரியை, கிரியை, யோகம், ஞானம்; சத்து, அசத்து, சதசத்து; வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம்; நாதம், விந்து, சத்தி, சாத்துமான், வயிந்தவம்; சத்தாதி வாக்கு மனாதிகள், சாக்கிராதீதம், சுத்தம், துரியம் விஞ்ஞானர், பிரளயாகலத்து

அஞ்ஞானர்; இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி; கவச நியாசங்கள் முத்திரை; பத்மாசனம், பத்திராசனம், சிங்காதனம்; பூரகம், கும்பகம், ரேசகம் என்பன முதலாகவுள்ள வடசொற்களும் சொற்றொடர்களும் அக்காலத்துப் பொது மக்களிடையே வழங்கிய வழக்குச் சொற்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன. தமிழ் வடமொழி என்னும் இரு மொழிகளையும் கலந்து திருமூலர் தாமே படைத்து வழங்கிய அணுவன், மாயாள், என்றாற்போலும் புதுச் சொற்களும் திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளன. வேத ஆகமங்களின் முடிந்த முடிபாகிய சைவசமயத் தத்துவம் என்ற பொருளில் சித்தாந்தம் என்ற சொற்றொடரை முதன் முதல் வழங்கியவர் திருமூல நாயனாரே யாவர். சுந்தரர் காலத்துப் பல்லவ மன்னனாகிய இரண்டாம் நரசிங்க வர்மன், தான் காஞ்சியில் அமைத்த கைலாசநாதர் கோயிலிற் பொறித்துள்ள வடமொழிக் கல்வெட்டில், சைவ சித்தாந்த மார்க்கத்தைப் பின் பற்றியவன் எனத் தன்னைக் குறித்திருப்பது இங்கு நோக்கத்தகுவதாகும்.

ஆரியம் தமிழ் என்னும் இருமொழிகளையும் உணர்ந்து இமயம் முதல் குமரிவரையுள்ள எல்லாத் தலங்களிலும் போக்கு வரவு புரிந்த தவமுனிவராகிய திருமூலர் அருளிய திருமந்திரப் பாடல்களில் சமய சாத்திரக் குறியீடுகளாகிய வட சொற்களும் சேரி வழக்குச் சொற்களும் விரவிக் காணப்படுதல் இயல்பே; திருமந்திரத்தின் மொழிக்கலப்பு ஒன்றே பற்றித் திருமூலர் காலத்தின் தொன்மை யினைக் குறித்து ஐயுறுதற்குச் சிறிதும் இடமில்லை.

பிற சமயத்தைப் பற்றிய குறிப்புக்கள் திருமூலர், தம் நூலில் ஆறு சமயங்கள் எனவும் அவற்றிற் பலவாகிய நூறு சமயங்கள் எனவும் இந்நாட்டில் வழங்கும் சமயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

அற இலக்கியம் குறிப்புகள்

ஆயினும் வேத வழக்கொடு மாறுபட்ட புறச் சமயங்களாகிய புத்த, சமண மதங்களைப் பற்றிய குறிப்பெதுவும் புறச் சமய தூடணம் பற்றிய திருமந்திரப் பாடல்களில் இடம் பெறவில்லை. இதனைக் கூர்ந்து நோக்குங்கால், புத்த சமண மதங்கள் தமிழ் நாட்டிற் புகுந்து யாண்டும் பரவித் தமிழ் மக்களது வாழ்க்கையில் வேரூன்றி நிலைபெறுதற்கு முன்னரேயே சிவயோகியராகிய திருமூலர், சிவாகமப் பொருள் குறித்த இத்திருமந்திரப் பனுவலை இயற்றி யருளினார் என்பது இனிது விளங்கும்.

## குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம்

நவ திருப்பதி, நவ கயிலாயங்கள் அமையப்பெற்ற புண்ணிய நதியான தாமிரபரணியின் வடகரையில் தோன்றியவர் குமரகுருபர சுவாமிகள். ஸ்ரீ வைகுண்டம் எனும் கிராமத்தில் சண்முக சிகாமணிக் கவிராயர் - சிவகாம சுந்தரி தம்பதிக்குத் திருச்செந்தூர் முருகப்பெருமானின் அருளால் மகனாகப் பிறந்தவர். குமரகுருபரர் வாய் பேச முடியாதவராக இருந்தார். பிறந்ததிலிருந்து ஐந்தாண்டுகள் வரை அவர் பேசாத காரணத்தால் வருத்தமடைந்த பெற்றோர் குழந்தை வரம் கொடுத்த திருச்செந்தூர் முருகனிடம் சென்று முறையிட்டார்கள்.

தங்கள் குழந்தைக்குப் பேச்சு வரவேண்டும் என்று 45 நாள்கள் கடுமையாக விரதமிருந்து முருகப்பெருமானை வேண்டினார்கள். விரதம் முடிந்த பிறகும் குமரகுருபரருக்குப் பேச்சு வரவில்லை. மிகுந்த மனவருத்தம் கொண்ட பெற்றோர், குமரகுருபரரை செந்திலாண்டவரிடம் ஒப்படைத்துவிட்டு, கடலில் விழுவதற்குச் சென்றார்கள். சிறிது தொலைவுதான் சென்றிருப்பார்கள். குமரகுருபரர் பேசத் தொடங்கிவிட்டார். பேசத் தொடங்கினார் என்பதைவிட, பாடத்

தொடங்கினார் என்பதே சரி. முருகனின் அருளால் பேசும் வரம் பெற்ற குமரகுருபரர், கந்தர் கலிவெண்பாவைப் பாடி கந்தக் கடவுளை வழிபட்டார். வாய் பேசுவானா என்று ஏங்கிய பெற்றோர்கள், குமரகுருபரர் பாடிய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து கண்ணீருடன் முருகனைத் தொழுதார்கள்.

இறைவனின் திருவருளால் தமிழ் இலக்கண இலக்கியங்கள், ஞான சாத்திரங்கள் ஆகியவற்றை விரைவில் கற்றுத் தேர்ந்தார் குமரகுருபரர். இவற்றோடு பக்தி ஞானமும் இவரிடம் பெருகத் தொடங்கியது. ஸ்ரீவைகுண்டத்தில் தங்கியிருந்த காலத்தில், அந்தத் தலத்திலிருந்த கயிலாசநாதர் கோயிலுக்குச் சென்று வழிபடுவது வழக்கம். மேலும், கயிலாசநாதரைப் போற்றி கயிலைக் கலம்பகம் எனும் பிரபந்த நூலை இயற்றினார்.

மதுரையை ஆட்சி செய்த திருமலை நாயக்கர், குமரகுருபரரின் கடவுள் பக்தியையும், தமிழ்ப் புலமையைப் பற்றியும் கேள்விப்பட்டு, அவரை அரண்மனைக்கு அழைத்துச் சிறப்பித்தார். அரசரின் விருப்பத்துக்கிணங்க, குமரகுருபரர், மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றிக் கொண்டிருந்த போது புலவர்கள், அமைச்சர்கள் என அனைவரும் பக்தியுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது மீனாட்சியம்மன் கோயிலின் தலைமை அர்ச்சகரின் மகள் உரிமையோடு வந்து திருமலை நாயக்கரின் மடியில் அமர்ந்தாள். குமரகுருபரர் முத்தப் பருவத்தை அரங்கேற்றிக் கொண்டிருந்தபோது தன் கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலையைப் பரிசாக அவரது கழுத்தில் சூட்டிய குழந்தை, கோயில் கருவறையில் மீனாட்சியோடு கலந்து மறைந்தாள். குமரகுருபரரின் அருளால் மீனாட்சியையே நேரில் பார்க்கும் புண்ணியம் கிடைக்கப்பெற்ற மக்கள் அனைவரும் அவருக்கு நன்றி

அற இலக்கியம் குறிப்புகள்

கூறினார்கள். இந்த அதிசயம் நடந்த பிறகு சில காலம் மதுரையில் தங்கியிருந்த குமரகுருபரர் மதுரை சொக்கநாதரைப் போற்றி, மதுரைக் கலம்பகத்தைப் பாடினார்.

அதன் பிறகு, சோழநாட்டு சிவத் தலங்களைத் தேடித் தேடி தரிசித்த குமரகுருபரர், திருவாரூர் தியாகராஜரைத் தரிசித்தபோது அவரைப் பற்றி திருவாரூர் நான்மணிமாலை எனும் நூலைப் பாடினார். திருவாரூர் தியாகராஜரை தரிசித்த பிறகு அவருக்குச் சிவ ஞான உபதேசம் பெற வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. தருமபுர ஆதீனம் மாசிலாமணி தேசிகர் என்பவரிடம் சீடராக இருந்து உபதேசம் பெற்றார். மாசிலாமணி தேசிகரின் அறிவுரைப்படி சிதம்பரம் சென்றார் குமரகுருபரர். இடையில் அவர் ஸ்ரீ வைத்தீஸ்வரன்கோவில் தலத்தில் தங்கியிருந்தார். அந்தத் திருக்கோயிலில் அருள்புரியும் முருகப் பெருமானின் பெயர் முத்துக்குமார சுவாமி. அவர் மீது கொண்ட பக்தியால், முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் பாடினார்.

சிதம்பரம் சென்று நடராஜரை தரிசனம் செய்த வேளையில், நடராஜரின் அருளினால் தன்னிலை மறந்த பரவச நிலையில், சிதம்பர மும்மணிக்கோவையை இயற்றினார். மேலும், சிதம்பரச் செய்யுட் கோவை என்ற நூலையும் இயற்றினார்.

நடராஜரின் தரிசனம் கிடைத்த பிறகு துறவறம் மேற்கொண்டு இறைவனின் பாதங்களைச் சரணடைய வேண்டுமே என்ற எண்ணம் தோன்றியது. தனது குரு மாசிலாமணி தேசிகரிடம் தீட்சை பெற்றார். அப்போது பாடப்பட்டதுதான், பண்டார மும்மணிக் கோவை. அதிலிருந்து குமரகுருபர சுவாமிகள் என அழைக்கப்பட்டார். பிறகு காசி நோக்கிப் பயணம் செய்தார். காசி சென்ற குமரகுருபர சுவாமிகள், சுல்தான் பாதுஷாவைச் சந்தித்தார். சுல்தானுக்குத் தெரிந்த மொழி ஹிந்துஸ்தானி மட்டுமே. சுல்தானுடன் பேசும்

வல்லமையைப் பெற சரஸ்வதி தேவியை நோக்கி, சகலகலாவல்லி மாலை எனும் பாமாலையைப் பாடினார். அதைக் கேட்டு மகிழ்ந்த சரஸ்வதி தேவி குமரகுருபரருக்குச் சுல்தான் பேசிய ஹிந்துஸ்தானி மொழியைப் பேசும் வல்லமையை அளித்தாள்.

அமர்வதற்கு இருக்கைகூட கொடுக்காமல் அவமதித்திருந்தான் சுல்தான். பராசக்தியிடம் வேண்டிய குமரகுருபரர் அவளது சிம்மத்தை வாகனமாகப் பெற்று சிம்மத்தின் மீதேறி அவனிடத்துக்குச் சென்றார். சிங்கத்தின் மீதேறி வந்த குமரகுருபரரை வணங்கிய சுல்தான் பாதுஷா அவருடன் நட்பு கொண்டு பழகினான். பிறகு மடம் அமைக்க இடம் கேட்டார் குமரகுருபர சுவாமிகள். சுல்தான், காசியில் கருடன் சுற்றுவதில்லை. கருடன் சுற்றினால் அவன் சுற்றும் இடத்தில் உமக்கு மடம் அமைக்க இடம் கொடுக்கிறேன் எனத் தெரிவித்தான்.

குமரகுருபரர் இறைவனை நோக்கிப் பாடினார். அவர் பாடத் தொடங்கியதும் கருடன் காசியில் வட்டமடிக்கத் தொடங்கியது. குமரகுருபரர் கேட்ட இடத்தை அவருக்குக் கொடுத்து சிறப்புச் செய்தான். அந்த இடத்தில் அமைக்கப்பட்டதுதான் காசி குமாரசுவாமி மடம். அங்கு முகம்மதியரால் மறைக்கப்பெற்ற கேதாரலிங்கத்துக்குக் கோயில் கட்டி பூஜை செய்தார். அந்தக் காலத்தில், காசித் துண்டி விநாயகர் பதிகமும், காசிக் கலம்பகமும் இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்.

அதன் பிறகு தமிழகம் திரும்பிய குமரகுருபரர், தனது குரு மாசிலாமணி தேசிகரைத் தரிசித்து வணங்கிவிட்டு மீண்டும் காசிக்கே சென்றுவிட்டார். காசியில் தங்கி இறைவனுக்குச் சேவை செய்து வந்தவர், வைகாசி தேய்பிறை திரிதியைத் திதியில் இறைவனடி சேர்ந்தார்.

அற இலக்கியம் குறிப்புகள்

நீதிநெறி விளக்கம் ஒரு தமிழ் நீதிநூல். கி.பி.17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குமரகுருபரரால் எழுதப்பட்ட நீதிநெறி விளக்கம் 102 பாடல்களால் ஆனது. இதில் இளமை, செல்வம், யாக்கை ஆகியவற்றின் நிலையாமை, கல்வியின் சிறப்பு, துறவியில் பின்பற்ற வேண்டியன, செய்யக் கூடாதன ஆகியவற்றை எடுத்துரைக்கிறது. இவற்றுள் 75 பாடல்கள் தனிமனித ஆளுமைகளை எடுத்துரைக்கும் தன்மையில் அமைந்துள்ளன. அதாவது தனி மனிதனுக்குரிய நீதிகளை எடுத்துரைத்து அவர்களின் ஆளுமையை வளர்த்தெடுக்க இந்நூல் முயல்கிறது.

## கூறு 11. திருமந்திரம் - யாக்கை நிலையாமை

11.0. பாட அமைப்பு

11.1. முன்னுரை

11.2. குறிக்கோள்கள்

11.3. யாக்கை நிலையாமை

11.4. தொகுத்துக் காண்போம்

11.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

11.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

11.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 11.1. முன்னுரை

திருமூலர் வாழ்க்கையின் பல்வேறு நிலைமையினையும் கண்டு தெளிந்த சான்றோர். இவர் எழுதிய நூல் திருமந்திரம். இவர் திருமூல நாயனார் என்று பெரியபுராணம் கூறுகிறது. இவரைச் சிவயோகத்தில் அமர்ந்த யோகி என்பர். திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. ஒன்பது தந்திரங்களில் இருநூற்று முப்பத்திரண்டு அதிகாரங்கள் உள்ளன. இந்நூல் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இது சைவ சமயக் கருத்துக்களை முதன் முதலாக விளக்க எழுந்த முழு முதல் நூலாகும். இவர் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனலாம். திருமூலரின் தலையாய கொள்கை அன்பே சிவம் என்பதாகும்.

நிலையாமையாவது தோற்றமுடையன யாவும் நிலை இல்லாத தன்மை வாய்ந்தது. மயங்கிய வழிப் பேய்த்தேரிற் புனல்போலத்

தோன்றி, மெய்யுணர்ந்த வழிக் கயிற்றில் அரவுபோலக் கெடுதலிற் பொய்யென்பாரும், நிலை வேறுபட்டு வருதலாற் கணந்தோறும் பிறந்திருக்குமென்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறுபடாமையும் ஒருங்கேயுடைய வென்பாரும் எனப்பொருட் பெற்றி கூறுவார் பல திறத்தராவர். இத்திறத்தவரெல்லாம் உடல் நிரந்தரம் என்றெண்ணி இருப்பர். இவ்வுடல் என்றும் நிரந்தரம் இல்லை என்பதைத் திருமூலர் முதல் தந்திரத்திரத்தில் இரண்டாவதான யாக்கை நிலையாமை அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இருபத்தைந்து பாடல்களால் ஆன இப்பகுதி பிரிவு நான்கு, கூறு பதினொன்றில் இங்குப் பாடமாக அமைந்திருக்கிறது.

## 11.2. குறிக்கோள்கள்

⇒ உடம்பு அழிவதற்கான காரணம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ இறந்த பின் கூட வருவதெவை என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ இறந்த பின் உற்றார் உறவினர் செயற்பாடுகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ உடல் எதனால் போர்த்தப்பட்டுள்ளது என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ மந்தணம் கொள்ளுதல் என்றால் என்ன என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பிண்டம் போடுவதன் நோக்கம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ பஞ்சேந்திரங்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ உடலில் இருந்து உயிர் பிறிந்த பின் நேர்வன பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ உடல் சுடுகாட்டை அடைந்த பின் நேர்வன பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ உடம்பில் இடம்பெற்றுள்ள உறுப்புகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ உயிர் தோன்றுவதற்குத் தேவையானவை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ இறக்கும்போது மூச்சுக்காற்று எத்திசையில் சுழலும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

அற இலக்கியம்

குறிப்புகள்

## 11.3. யாக்கை நிலையாமை

**மண்ணொன்று கண்டீர் இருவினைப் பாத்திரம்**
**திண்ணென்று இருந்தது தீயினைச் சேர்ந்தது**
**விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ஆவபோல்**
**எண்ணின்ற மாந்தர் இறக்கின்ற வாறே.**

என்பது, மாயையாகிய மண் ஒன்று உள்ளது. அதனின்றும் தோன்றியது இரு வினையால் விளைந்த உடம்பாகிய பாத்திரம். அப்பாத்திரம் சுடப்பட்டபோது வலிமையாகக் காணப்பட்டு இருந்தது. சுடப்படாத பாண்டம் ஆகாயத்தில் இருந்து மழைநீர் பெய்தபோது கரைந்து மண்ணாவதுபோல் எண்ணற்ற மக்கள் உடம்பு அழிந்து கெடுகின்றனர் என்பதாகும்.

(1)

**பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால்**
**உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்**
**கொண்ட விரதமும் ஞானமும் அல்லது**
**மண்டி அவருடன் வழிநட வாதே.**

என்பது, வினை போகங்களை அளவிட்டு வைக்கப்பட்ட உடம்பு வினை போகங்களை அனுபவித்து நீங்கியபின், சுக போகங்களை உடனிருந்து அனுபவித்த மனைவியும் மக்களும் கூட வரமாட்டார். உயிரோடு வாழ்ந்த காலத்துக் கடைப்பிடித்த விரதத்தின் பயனும் ஞானமும் அன்றி, வேறு எவையும் இறந்தோருடன் கூடச் செல்வது இல்லை என்பதாகும்.

(2)

**ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்**
**சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.**

என்பது, உடல் விழுந்தபின் ஊரார் எல்லாம் ஒன்றுகூடி ஓலமிட்டு அழுது, அதுவரையிலுள்ள பெயரை மாற்றிப் பிணம் என்ற பெயரைச் சூட்டி, தூதுவளை நிறைந்த சுடுகாட்டில் கொண்டு போய்க் கொளுத்திவிட்டு, இவ்வண்ணம் ஒருவர் இருந்தார் என்ற எண்ணமின்றி நீரினில் மூழ்கிவிட்டு நீங்கினார்கள் என்பதாகும்.

(3)

**காலும் இரண்டு முகட்டலகு ஒன்றுள**
**பாலுள் பருங்கழி முப்பத்தி ரண்டுள**
**மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்**
**போலுயிர் மீளப் புகஅறி யாதே.**

என்பது, உடம்பாகிய வீட்டுக்குக் கால்கள் இரண்டு. உச்சி உத்தரமாகிய முதுகுத்தண்டு ஒன்றுள்ளது. பக்கத்தில் போடப்பட்டுள்ள விலா எலும்பாகிய சாற்றுக் கழிகள் முப்பத்திரண்டு உள்ளன. இவையெல்லாம் மூடப்பெற்ற தசையாகிய கூரை ஒரு

காலத்தில் பிரியும். பிரிந்தால் உயிர் அதனுள் முன்போல புக அறியாது என்பதாகும்.

(4)

**சீக்கை விளைந்தது செய்வினை மூட்டிற்ற**
**ஆக்கை பிரிந்தது அலகு பழுத்தது**
**மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்**
**காக்கைக் குப்பலி காட்டிய வாறே.**

என்பது, கபம் மேலோடியது. பல பிறவிகளில் செய்யப்பட்ட வினைகளின் தொடர்புகள் ஒழிந்தன. உடம்பு நீங்கியது. பழு எழும்பு வலி கெட்டது. மூக்கினில் கைவைத்துப் பார்த்து உயிரியக்கம் இல்லாமையை உணர்ந்து ஆடையால் மூடிக் கொண்டு போய், காக்கைக்குப் பலியிட்டு இறுதிக் கடனைச் செய்தனர். சீக்கை என்பது சிலேட்டுமம். காக்கைக்குப் பலி - வாய்க்கரிசி போடுதல் என்பதாகும்.

(5)

**அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்**
**மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்**
**இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்**
**கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.**

என்பது, நல்ல முறையில் பக்குவமாகச் சமையல் பண்ணி வைத்தனர். அவ்வாறு சமைத்த அறுசுவை உணவை வீட்டுக்குத் தலைவன் உண்டார். மனைவியோடு குலாவியிருந்தார். இடப்புறம் நெஞ்சம் சிறிது வலிக்கிறது என்று மனைவியிடம் கூறினார். சொன்ன பிறகு கீழே படுத்தவர் அப்படியே கிடந்து இறந்து ஒழிந்தார். மந்தணம் கொள்ளுதல் என்பது உடல் உறவு கொள்ளுதல் என்பதாகும்.

(6)

**மன்றத்தே நம்பி மாடம் எடுத்தது**
**மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான்**
**மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்**
**சென்றத்தா என்னத் திரிந்திலன் தானே.**

என்பது, சிறப்புடைய தலைமகன் மாடிவீடு கட்டி மகிழ்ந்திருந்தான். அவன் பலர் காணப் பல்லக்கில் அமர்ந்து சென்றான். அவன் பொது இடத்தில் இயல்புடைய மூவர்க்கும் புத்தாடை வழங்கினான். உயிர் பிரிந்த பின் மகள் அப்பா என்று அழைக்கவும் அவன் மீண்டலன் என்பதாகும்.

(7)

**வாசந்தி பேசி மணம்புணர்ந்து அப்பதி**
**நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை**
**ஆசந்தி மேல்வைத்து அமைய அழுதிட்டுப்**
**பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னார்களே.**

என்பது, நிச்சயதார்த்தம் பண்ணித் திருமணம் செய்துக்கொண்ட அக்கணவனது காதலும் கசந்து, அவரது நினைப்பையும் உரிமை மனைவியர் பின்னர் மறந்து விடுவர். அவர் இறந்த பின் பாடையில் வைத்துப் பொருத்தமாகப் புலம்பியழுது, பற்றினையும் சுட்டெரித்துப் பிண்டம் போட்டார்களே, என்ன பரிதாபம் என்பதாகும்.

(8)

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. இறந்த பின் உடன் வருவன யாவை?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. உடல் எதனால் போர்த்தப்பட்டுள்ளது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. மந்தணம் கொள்ளுதல் என்றால் என்ன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. பிண்டம் போட்டோர் நிலை என்ன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

குறிப்புகள்

கைவிட்டு நாடிக் கருத்தழிந்து அச்சற
நெய்பட்டுச் சோறுண்ணும் ஐவரும் போயினர்
மையிட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே.

என்பது, நாடி பார்ப்பவர் இனிப் பயனில்லையெனக் கைவிட்டுவிட, நினைவு கெட்டு உயிர்ப்பு இயக்கம் நீங்க, நெய்யிட்டுப் பிசைந்த சோற்றைச் சுவைக்கும் நாக்கு முதலிய பஞ்சேந்திரியங்கள் செயலழிந்தன. மைபூசிய கண்ணையுடைய மனைவியும் செல்வமும் இவ்வுலகத்து இருக்க, உடலை விட்டு உயிர்போக விடை கொள்ளும் முறை இதுவாகும் என்பதாகும்.

(9)

பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன
துன்புறு காலத் துரிசுவர மேன்மேல்
அன்புடை யார்கள் அழுதகன் றார்களே.

என்பது, உடம்பாகிய பந்தல் பிரிந்தது. உயிர் நிலையாகிய களஞ்சியம் கட்டு விட்டுப் போயிற்று. உடம்பிலுள்ள ஒன்பது வாயில்களும் ஒருசேர அடைபட்டன. துன்பத்தைத் தருவதாகிய கால முடிவு விரைவாக வந்தடைய அன்புடையவர்களாகிய சுற்றத்தாரும் பிறரும் அழுது நம்மைவிட்டு அகன்றார்கள் என்பதாகும்.

(10)

நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன்று ஏறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.

என்பது, நாட்டுக்குத் தலைவனும் நம்முடைய ஊருக்குத் தலைவனுமாக உள்ளவன் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் பாடையில் இறந்த பின் ஏறிக் கொண்டு நாட்டிலுள்ளவர் இறுதிக் கடன் செலுத்தப் பின்னே வரவும். பாடைக்கு முன்னே பறை கொட்டவும், நாட்டின் தலைமகன் காட்டுக்குச் செல்கின்ற முறை இதுவாம் என்பதாகும்.

(11)

**முப்பதும் முப்பதும் முப்பத் தறுவரும்**
**செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்**
**செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்**
**ஒப்ப அனைவரும் ஓட்டெடுத தார்களே.**

என்பது, தொண்ணூற்றாறு தத்துவங்களும் நன்றாகச் செய்யப்பெற்ற மதில் சூழ்ந்த கோயிலில் வாழ்பவராவர். செம்மையாகச் செய்யப்பட்ட மதிள் சூழ்ந்த கோயில் நிலைகெட்டபின் அக்கோயிலில் வாழ்ந்த அனைவரும் ஓடிப் போயினர். உடம்பு அழியத் தத்துவங்கள் முதலியன நீங்கும் என்பதாகும்.

(12)

**மதுவூர் குழலியும் மாடும் மனையும்**
**இதுவூர் ஒழிய இதணம் தேறிப்**
**பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி**
**மதுவூர் வாங்கியே வைத்தகன் றார்களே.**

என்பது, தேன் பிலிற்றும் மலர்களை அணிந்த கூந்தலையுடைய மனைவியும், செல்வமும், வீடும், இவ்வூரின் கண்ணே தங்கிவிட, உயிர் நீங்கிய உடம்பைப் பாடையில் வைத்து, ஊருக்குப் பொதுவாகப் புறத்தே உள்ள சுடுகாட்டை நோக்கி எடுத்துச் சென்று,

மயக்கத்தோடு பாடையினின்றும் எடுத்துச் சிதையில் வைத்து விட்டுச் சென்றார்கள் என்பதாகும்.

(13)

**வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்**
**அச்சக லாதென நாடும் அரும்பொருள்**
**பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்**
**எச்சக லாநின்று இளைக்கின்ற வாறே.**

என்பது, மேலே சொன்னவாறு சுடுகாட்டில் வைத்து எல்லோரும் நீங்கியதைக் கண்டும் மக்கள், உயிர் உடலை விட்டு நீங்காது என்று தாம் தேடும் அருமையான பொருள்களில் மயக்கமுற்று அதனைத் தேடுவதற்கு அலையும் மக்கள் மேன்மை நீங்க நின்று வருந்துகின்றார்களே என்பதாகும்.

(14)

**ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்**
**ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்**
**வேர்த்தலை போக்கி விறகிட்டு எரிமூட்டி**
**நீர்த்தலை மூழ்குவர் நீதியி லோரே.**

என்பது, ஆரவாரம் செய்துக்கொண்டு எழுகின்ற உறவினரும் மனைவியும் மக்களும், ஊருக்குப் புறம்பேயுள்ள நீர்த்துறை வரை வந்து நீங்குவர். அவ்வாறு நீங்கிய பின் வாழ்வுக்கு அடியாகவுள்ள தலையினை மறைத்துப் பின்னர்த் தீயினை மூட்டி நீரில் தலை மூழ்குவார்கள் நீதியில்லாதவர் என்பதாகும்.

(15)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

5. பஞ்சேந்திரங்கள் யாவை?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

6. நாட்டின் தலைமகன் காட்டுக்குச் செல்லும் முறை யாது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

7. உடல் நீங்க தத்துவங்கள் நீங்கும் என்பதை விளக்குக?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

.8. நீர்த்தலை மூழ்குபவர் யார்?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

வளத்திடை முற்றதோர் மாநிலம முற்றுங்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடம்உடைந் தால்அவை ஓடென்று வைப்பர்
உடலுடைந் தால்இறைப் போதும் வையாரே.

என்பது, ஒப்பற்ற உலகம் முழுவதும் வளப்பம் மிக்க இடைப் பிரதேசமாகிய முன்னிடத்து கருப்பை யாகிய குளத்தினது சுரோணிதமாகிய மண்ணைக் கொண்டு பிரமனாகிய குயவன் படைத்தலைச் செய்தான். மண்ணாலாகிய குடம் உடையுமாயின் அதன் பகுதியாகிய ஓடானது உதவும் என்று வைத்திருப்பர். உடல் உடைந்தால் ஒரு கணப்பொழுதும் வீட்டில் வைக்க மாட்டார்கள் என்பதாகும்.

(16)

ஐந்து தலைப்பறி ஆறு சடையுள
சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்
பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்து கிடந்தது மேலறி யோமே.

என்பது, இவ்வுடம்பில் ஐந்து இந்திரியங்களும் ஆறு ஆதாரங்களும் உள்ளன. எலும்பு இணைப்புகள் முப்பது. அவற்றைச் சார்ந்துள்ள பொருத்துகள் பதினெட்டு. இவற்றின் மீது போர்த்தப் பெற்ற பந்தலும் ஒன்பது. வரிசையாகவுள்ள எலும்புகள் பதினைந்து. இவையெல்லாம் சேர்ந்த உடம்பு தீயில் வெந்து கிடந்தது. அதற்குமேல் உயிரின் நிலையை நம்மால் அறிய முடியவில்லை என்பதாகும்.

(17)

அத்திப் பழமும் அறைக்கீரை நல்வித்தும்
கொத்தி உலைப்பெய்து கூழ்அட்டு வைத்தனர்

**அத்திப் பழத்தை அறைக்கீரை வித்துண்ணக்**
**கத்தி எடுத்தவர் காடுபுக் காரே.**

என்பது, சுரோணிதமாகிய அத்திப் பழத்தையும் சுக்கிலமாகிய அறைக்கீரை வித்தையும் கிளறிக் கருப்பையாகிய உலையில் இட்டு கருவாகிய கூழைச் சமைத்தனர். சுரோணிதமாகிய அத்திப் பழத்தைச் சுக்கிலமாகிய அறைக்கீரை வித்து உண்டு சிசுவாய் வளர்ந்து பின் அமுது சமைத்தவர், இறுதியில் சுடுகாட்டுக்குச் சென்றனரே என்பதாகும்.

(18)

**மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை**
**காலும் இரண்டு முகட்டலக் கொன்றுண்டு**
**ஓலையான் மேய்ந்தவர் ஊடு வரியாமை**
**வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளியே.**

என்பது, உடம்பாகிய வீட்டுக்கு உச்சிக் கூரை இல்லை. கீழே குறடும் இல்லை. ஆனால் இரண்டு கால்கள் உள்ளன. நடுக்கால் ஒன்று உள்ளது. இவ்வாறுள்ள கூரையை ஓலையினால் வேய்ந்தவர் இடையே வரிச்சுக் கழி போட்டுக் கட்டாமல், அழகுபடச் செய்த ஒரு வெண் கோயிலாகும் என்பதாகும்.

(19)

**கூடம் கிடந்தது கோலங்கள் இங்கில்லை**
**ஆடும் இலயமும் அற்றது அறுதலும்**
**பாடுகின் றார்சிலர் பண்ணில் அழுதிட்டுத்**
**தேடிய தீயினில் தீயவைத் தார்களே.**

என்பது, உயிர் நடனம் செய்த உடம்பாகிய கூடம் அப்படியே கிடந்தது. முன் உயிர் இருந்த காலத்துள்ள அழகு இப்போது அவ்வுடம்பில் இல்லை. அசைந்து ஆடிக் கொண்டிருந்த பிராண

ஓட்டமும் நின்றது. அவ்வாறு பிராணன் நீங்குதலும் உற்றார் உறவினர் ஒப்பாரி வைத்து அழுகின்றனர். நெருப்பை உண்டாக்கி அதில் உடலைச் சுட்டெரித்து விடுகிறார்கள் என்பதாகும்.

(20)

**முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்**
**இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்**
**பட்டது பார்மணம் பன்னிரண்டு ஆண்டினில்**
**கெட்டது எழுபதில் கேடறி யீரே.**

என்பது, முன் முட்டையைப் போல் கருப்பையில் பதியும் உடம்பு பத்து மாதங்களில் வெளி வந்தது. இவ்வுடம்பு ஏதாவது விருப்பப்படி அமைந்தது அல்ல. அறிவிலிகளே! பிறந்து பன்னிரண்டு ஆண்டுகளில் அது உலக வாசனை பொருந்தும் இடமாக இருந்தது. எழுபது ஆண்டுகளில் மடிந்தது. இந்நிலைமையை அறிவீராக என்பதாகும்.

(21)

**இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்**
**முடிஞ்சது அறியார் முழங்குவர் மூடர்**
**விடிஞ்சுஇரு ளாவது அறியா உலகம்**
**படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.**

என்பது, உடம்பாகிய அகல் இருக்க, உயிராகிய தீபவொளியைக் காலன் கொண்டு சென்றான். அறிவில்லாதவர்கள் உடம்பு அழியும் உண்மையை அறியாது அரற்றுகின்றனர். பிறப்பாகிய விடிவும், இறப்பாகிய இருளும் மாறி மாறி வரும் என்பதை உலகினர் அறியாது, நிலையற்ற உடம்பை நிலையென்று பற்றிக் கிடந்து வருந்துகிறார்களே என்பதாகும்.

(22)

மடல்விரி கொன்றையன் மாயன் படைத்த
உடலும் உயிரும் உருவம் தொழாமல்
இடர்படர்ந்து ஏழா நரகிற் கிடப்பர்
குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே.

என்பது, விரிந்த கொன்றை மாலை அணிந்தவனும், மாயைக்கு ஆதாரமானவனுமாகிய சிவன் படைத்த உடம்பிலும் உயிரிலும் கலந்து விளங்கும் உருவத்தை வணங்காமல், குடர் கிழிய விருப்பம் மிக்க சுற்றத்தார் கதறுமாறு துன்பம் பெருகி ஏழு வகையான நரகத்தில் வாடிக் கிடப்பர் என்பதாகும்.

(23)

குடையும் குதிரையும் கொற்றவா ளுங்கொண்டு
இடையும்அக் காலம் இருந்து நடுவே
புடையும் மனிதனார் போக்கும்அப் போதே
அடையும் இடம்வலம் ஆருயி ராமே.

என்பது, வெண்கொற்றக் குடையும் குதிரையும் செங்கோலும் கொண்டு, நாற்புறமும் மக்கள் சூழ்ந்து வர நடுவில் செல்லும் போதே அழிவு உண்டாகும் காலத்தில் அத்தலைவனது பிராணன் இடம் வலமாகச் சுழன்று நின்றுவிடும். முடிமன்னராய் நால்வகைச் சேனை புடைசூழச் சென்றாலும் பிராணன் நீங்குவதைத் தடுக்க முடியாது என்பதாகும்.

(24)

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே.

என்பது, உடம்பாகிய தோற்பையில் இருந்து வினைமுடிவு பெறச் செய்து, வினைப் பயனை ஊட்டிக் கொண்டிருந்த உயிராகிய கூத்தன்

அற இலக்கியம்

குறிப்புகள்

வெளிப்பட்டுப் போனபின் இவ்வுடம்பாகிய கூட்டைக் காக்கை கொத்தினால் என்ன? கண்டவர்கள் பழித்தால் என்ன? உடம்பைச் சுட்டெரித்த பின் எலும்பின்மேல் பாலைத் தெளித்தால் என்ன? பலர் பாராட்டிப் பேசினால் என்ன? என்பதாகும்.

(25)

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

9. உயிர்த் தோற்றம் எவ்வாறு உருவாகிறது?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

10. உயிர் நடனம் புரிவது எதில்?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

11. விடிவும் இருளும் பற்றித் திருமூலர் கூறுவது யாது?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

12. இறக்கும்போது மூச்சுக்காற்று எத்திசையில் சுழலும்?

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------

## 11.4. தொகுத்துக் காண்போம்

அற இலக்கியம்

குறிப்புகள்

⇒ உடம்பு அழிவதற்கான காரணம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ இறந்த பின் கூட வருவதெவை என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ இறந்த பின் உற்றார் உறவினர் செயற்பாடுகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ உடல் எதனால் போர்த்தப்பட்டுள்ளது என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ மந்தணம் கொள்ளுதல் என்றால் என்ன என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பிண்டம் போடுவதன் நோக்கம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பஞ்சேந்திரங்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ உடலில் இருந்து உயிர் பிறிந்த பின் நேர்வன பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ உடல் சுடுகாட்டை அடைந்த பின் நேர்வன பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ உடம்பில் இடம்பெற்றுள்ள உறுப்புகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ உயிர் தோன்றுவதற்குத் தேவையானவை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ இறக்கும்போது மூச்சுக்காற்று எத்திசையில் சுழலும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

அற இலக்கியம்

குறிப்புகள்

## 11.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | |
|---|---|
| 1. 11.3. (2ம் பாடல்) | 7. 11.3. (12ம் பாடல்) |
| 2. 11.3. (4ம் பாடல்) | 8. 11.3. (15ம் பாடல்) |
| 3. 11.3. (6ம் பாடல்) | 9. 11.3. (18ம் பாடல்) |
| 4. 11.3. (8ம் பாடல்) | 10. 11.3. (20ம் பாடல்) |
| 5. 11.3. (9ம் பாடல்) | 11. 11.3. (22ம் பாடல்) |
| 6. 11.3. (11ம் பாடல்) | 12. 11.3. (24ம் பாடல்) |

## 11.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. யாக்கை நிலையாமை குறித்து திருமூலர் சுட்டுவன யாவை?
2. இறந்தாரின் சுற்றத்தார் மேற்கொள்ளும் செயற்பாடுகள் யாவை?
3. உடல் அழியும் என்பதை அறியாதார் மேற்கொள்ளும் செயற்பாடுகள் யாவை?

## 11.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. வித்துவான் எம். நாராயண வேலுப்பிள்ளை (தெளி.), திருமூலரின் திருமந்திரம் மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1994.
2. ச.வே. சுப்பிரமணியம் (பதி.), பன்னிரு திருமுறை - மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2007.

## கூறு 12. செல்வம் நிலையாமை

12.0. பாட அமைப்பு

12.1. முன்னுரை

12.2. குறிக்கோள்கள்

12.3. செல்வம் நிலையாமை

12.4. தொகுத்துக் காண்போம்

12.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

12.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

12.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 12.1. முன்னுரை

திருமூலர் வாழ்க்கையின் பல்வேறு நிலைமையினையும் கண்டு தெளிந்த சான்றோர். இவர் எழுதிய நூல் திருமந்திரம். இவர் திருமூல நாயனார் என்று பெரியபுராணம் கூறுகிறது. இவரைச் சிவயோகத்தில் அமர்ந்த யோகி என்பர். திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. ஒன்பது தந்திரங்களில் இருநூற்று முப்பத்திரண்டு அதிகாரங்கள் உள்ளன. இந்நூல் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இது சைவ சமயக் கருத்துக்களை முதன் முதலாக விளக்க எழுந்த முழு முதல் நூலாகும். இவர் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனலாம். திருமூலரின் தலையாய கொள்கை அன்பே சிவம் என்பதாகும்.

சென்ற பகுதியில் யாக்கை நிலையாமை பற்றிக் கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து செல்வம் நிலையாமை பற்றி இங்கு

அற இலக்கியம் குறிப்புகள்

எடுத்துரைக்கப்படுகிறது. செல்வம் இரண்டு நிலைப்படும். ஒன்று, அகச்செல்வம், மற்றொன்று புறச்செல்வம். அகச்செல்வமாவது மனிதன் வாழ்ந்த காலத்து தவத்தாலும் தர்மத்தாலும் சேர்த்து வைத்த அகப்பொருள்களான புகழே யாகும். புறச்செல்வமாவது மனிதன் வாழ்ந்த காலத்தில் மனை, மாடு முதலிய புறப்பொருள்களான உயர்திணை மற்றும் அஃறிணைப் பொருள்கள் ஆகும். இங்கு அகச்செல்வம் நிலையானது என்றாகிது. புறச்செல்வம் நிலையற்றது என்றாகிறது. இதனைத் திருமூலர் வாக்கால் உணர்வோம். திருமூலரின் திருமந்திரம் முதல் தந்திரத்தில் மூன்றாவது அதிகாரமாக அமைந்திருக்கும் செல்வம் நிலையாமையே இங்குப் பாடமாக அமைந்திருக்கிறது.

## 12.2. குறிக்கோள்கள்

⇒ இறைவனை அடைந்தவன் நிலை பற்றித் தெரிந் கொள்வீர்கள்.

⇒ நிலையான செல்வம் எது என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ நிலையற்ற செல்வம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ செம்பொருள் அடைவதற்கான வழி பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ இறை வழிபாட்டால் ஏற்படும் மேன்மை குறித்து தெரிந்து கொள்வீர்கள்.

## 12.3. செல்வம் நிலையாமை

குறிப்புகள்

**அருளும் அரசனும் ஆனையும் தேரும்**
**பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்**
**தெருளும் உயிரொடும் செல்வனைச் சேரின்**
**மருளும் பினையவன் மாதவம் அன்றே.**

என்பது, அருள்புரியும் அரச பதவியும், யானைப் படையும், தேர்ப் படையும் பொருட் குவியலும் ஆகியவற்றைப் பிறர் கவர்ந்து செல்வதற்கு முன், தெளிந்த உயிரோடு நிலையான செல்வத்தையுடைய இறைவனை அடைந்தவுடன், பிறகு அவன் பெரிய தவத்தையும் விரும்பாது வெருவுவான். உயிருடன் உள்ள போதே சிவனைச் சேரின் மாதவம் வேண்டா என்பதாகும்.

(1)

**இயக்குறு திங்கள் இரும்பிழப்பு ஒக்கும்**
**துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா**
**மயக்கற நாடுமின் வானவர் கோனை**
**பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே.**

என்பது, வானத்தில் இயங்குகின்ற ஒளியுடைய சந்திரன் ஒளி குறைந்து இருளாவது போலத் தளர்ச்சியுறும் செல்வம் குறைந்து இல்லையாவதை யாரும் சொல்லத் தேவையில்லை. ஆதலால், தேவதேவனாகிய இறைவனைப் பொருள் மயக்கம் நீங்கி நாடுங்கள். மழை மேகம் போலப் பெருஞ்செல்வம் உண்டாகும். இறைவனே நிலையான செல்வம் ஆகும் என்பதாகும்.

(2)

**தன்னது சாயை தனக்கு வாதுகண்டு**
**என்னது மாடென்று இருப்பர்கள் ஏழைகள்**

**உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது**
**கண்ணது காணொளி கண்டுகொ ளீரே.**

என்பது, தன்னோடு பொருந்திய நிழல் தனக்கு உதவாதது கண்டும் அறிவில்லாதவர்கள் தமக்கு வேறாகவுள்ள செல்வம் தமக்கு உதவும் என்று எண்ணுவார்கள். உடலோடு ஒன்றாக வந்தது உன்னுடைய உயிர். எனினும் உயிர் போகும்போது உடல் அழிந்து போகும். அகக்கண் இடமாக விளங்குகிறது நிலையான ஒளி. அதனை உடம்பு உள்ளபோதே நாடிக் கொள்ளுங்கள் என்பதாகும்.

(3)

**ஈட்டிய தேன்பூ மணங்கண்டு இரதமும்**
**கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்**
**ஓட்டித் துரந்திட்டு அதுவலி யார்கொளக்**
**காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே.**

என்பது, பூவினது மணத்தை ஆராய்ந்து கண்டு அதனுள் பொருந்திய தேனைச் சேகரித்த வண்டு, எடுத்துக் கொண்டு வந்து ஒரு மரக்கிளையில் அடையாக வைக்கும். வண்டினை விரட்டிவிட்டு வலிமையுடையவர் அத்தேனை எடுத்துச் செல்ல, அது காட்டிக் கொடுத்து நீங்கிவிடும். செல்வம், உடையானுக்குப் பயன்படாமையோடு தீமையும் செய்யும் என்பதாகும்.

(4)

**தேற்றித் தெளிமின் தெளிந்தீர் கலங்கண்மின்**
**ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே**
**மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்**
**கூற்றன் வருங்கால் குதிக்கலும் ஆமே.**

என்பது, செல்வம் நிலையாமையை நன்கு அறிந்து தெளியுங்கள். தெளிந்தவர்கள் மீண்டும் பயம் கொள்ளாதீர்கள். ஆற்று வெள்ளம்

போல் பெருகிவரும் செல்வத்தைக் கண்டு கலங்கி மயங்காமல், உங்களது பொருட் பற்றினை நீத்து மேலான செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள். உயிரை உடலினின்றும் கூறு செய்கின்ற கூற்றுவன் வரும்போது கடத்தலும் கூடும் என்பதாகும்.

(5)

**மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே**
**கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்**
**அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடு பேறாகச்**
**சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறி யாரே.**

என்பது, மகிழ்ந்து அனுபவிக்கின்ற பரம்பரைச் சொத்தும், தாமே முயன்று ஈட்டிய பொருளும், ஆற்றுப் பெருக்கில் சென்று உடனே கவிழ்கின்ற படகைப் போன்றன. அழிந்து போகின்ற உடம்புக்கு ஒரு நிலை பேறாகச் சேமித்து வைத்துள்ளதை உணர்ந்து பெருக்கிக் கொள்ள உலகவர் அறியார் என்பதாகும்.

(6)

**வாழ்வும் மனைவியும் மக்கள் உடன்பிறந்**
**தாரும் அளவுஏது எமக்கென்பர் ஒண்பொருள்**
**மேவும் அதனை விரிவுசெய் வார்கட்குக்**
**கூவும் துணையொன்று கூடலும் ஆமே.**

என்பது, உயிர்க்கு உதவியில்லாத வாழ்வுக்குரிய பொருளும் மனைவியும் மக்களும் உடன் பிறந்தாரும் எமக்கு அளவற்றவர் இருக்கின்றனர் என்று உலகவர் கூறுவர். ஆனால் இவற்றை விட்டு உற்ற இடத்து உதவும் ஒளிப் பொருளான சிவத்தை நினைந்து அச்செல்வத்தைப் பெருக்கிக் கொள்வார்க்கு, கூவி அழைத்துக் கொள்ளும் மேலான செம்பொருளை அடைதல்கூடும் என்பதாகும்.

(7)

**வேட்கை மிகுந்தது மெய்கொள்வார் இங்கிலை**
**பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது**
**நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்**
**காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.**

என்பது, உலக வாழ்வில் ஆசை பெருகிற்று. உண்மைப் பொருளை அறிபவர் யாரும் இல்லை. உடம்பை நிலையாக நிறுத்தும் சுழுமுனையாகிய தறி ஒன்று உள்ளது. ஆனால் அதற்கு அழிக்கின்ற வழி ஒன்பது உள்ளன. உறவு முறையை நிலைநாட்டிய தாயாரும் சுற்றத்தாரும் வந்து வணங்கிய பின் சுடுகாட்டைக் காட்டிக் கொடுத்து நீங்கிவிடுவர் என்பதாகும்.

(8)

**உடம்போடு உயிரிடை விட்டோடும் போது**
**அடும்பரிசு ஒன்றில்லை அண்ணலை எண்ணும்**
**விடும்பரி சாய்நின்ற மெய்ந்நமன் தூதர்**
**சுடும்பரி சத்தையும் சூழகி லாரே.**

என்பது, உடம்பைவிட்டு உயிர் இடையிலே விட்டுச் செல்லும் போது வெல்லும் வகை ஒன்றுமில்லை. இறைவனை எண்ணுங்கள் உயிரை உடம்பினின்றும் வேறுபடுத்தும் பரிசினை நல்கும் உண்மையான எம தூதர்கள் வேதனைப்படுத்தும் பரிசினைக் கருதமாட்டார்கள் என்பதாகும்.

(9)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. நிலையான செல்வம் எது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. ஆற்றில் கவிழும் படகை ஒத்தது எது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. செம்பொருள் அடைவதற்கான வழி யாது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. எமன் அஞ்சத்தக்க செயல் யாது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

## 12.4. தொகுத்துக் காண்போம்

⇒ இறைவனை அடைந்தவன் நிலை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ நிலையான செல்வம் எது என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ நிலையற்ற செல்வம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ செம்பொருள் அடைவதற்கான வழி பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ இறை வழிபாட்டால் ஏற்படும் மேன்மை குறித்து தெரிந்து கொண்டீர்கள்.

## 12.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

| | |
|---|---|
| 1. 12.3. (2ம் பாடல்) | 3. 12.3. (7ம் பாடல்) |
| 2. 12.3. (6ம் பாடல்) | 4. 12.3. (9ம் பாடல்) |

## 12.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. நிலையற்ற செல்வம் குறித்து திருமூலம் குறிப்பிடுவன யாவை?
2. நிலையற்ற செல்வத்திற்கு மக்கள் கொடுக்கும் இடம் பற்றித் திருமூலர் வாக்கால் விவரி.
3. திருமூலம் கூறும் நிலையான செல்வம் எது என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## 12.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

1. வித்துவான் எம். நாராயண வேலுப்பிள்ளை (தெளி.), திருமூலரின் திருமந்திரம் மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1994.
2. ச.வே. சுப்பிரமணியம் (பதி.), பன்னிரு திருமுறை - மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2007.

## கூறு 13. இளமை நிலையாமை

13.0. பாட அமைப்பு

13.1. முன்னுரை

13.2. குறிக்கோள்கள்

13.3. இளமை நிலையாமை

13.4. தொகுத்துக் காண்போம்

13.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

13.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

13.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 13.1. முன்னுரை

திருமூலர் வாழ்க்கையின் பல்வேறு நிலைமையினையும் கண்டு தெளிந்த சான்றோர். இவர் எழுதிய நூல் திருமந்திரம். இவர் திருமூல நாயனார் என்று பெரியபுராணம் கூறுகிறது. இவரைச் சிவயோகத்தில் அமர்ந்த யோகி என்பர். திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. ஒன்பது தந்திரங்களில் இருநூற்று முப்பத்திரண்டு அதிகாரங்கள் உள்ளன. இந்நூல் சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இது சைவ சமயக் கருத்துக்களை முதன் முதலாக விளக்க எழுந்த முழு முதல் நூலாகும். இவர் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனலாம். திருமூலரின் தலையாய கொள்கை அன்பே சிவம் என்பதாகும்.

சென்ற பகுதியில் செல்வம் நிலையாமை பற்றிக் கூறப்பட்டது. அதனைத் தொடர்ந்து இளமை நிலையாமை பற்றி இங்கு எடுத்துரைக்கப்படுகிறது. இளமை என்பது வாலிபத்தைக் குறிக்கும்.

அற இலக்கியம் குறிப்புகள்

ஒருவருக்கு வாலிபம் எக்காலத்தும் நிலைத்து நிற்பதில்லை. மனதளவில் வாலிபம் இருந்தால் உடல் வாலிபம் குன்றி தளர்ச்சி காணும். எனவே, வாலிபம் என்பது காலவோட்டத்தில் மாறும் இயல்பினது. இதனைத் திருமூலர் வாக்கால் உணர்வோம். திருமூலரின் திருமந்திரம் முதல் தந்திரத்தில் மநான்காவது அதிகாரமாக அமைந்திருக்கும் இளமை நிலையாமையே இங்குப் பாடமாக அமைந்திருக்கிறது.

## 13.2. குறிக்கோள்கள்

⇒ இளமை நிலையாமை குறித்து திருமூலர் குறிக்கும் நிலைகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ இறை நிலை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ இளமை-முதுமையில் பெண்களின் நிலை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ உயிர்களின் பருவ காலங்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ உடலில் தோன்றும் ஐந்து இந்திரியங்களின் செயற்பாடுகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ சூரியன்-சந்திரனின் உலகியல் செயற்பாடுகள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ மனமயக்கம் ஒழியாதவர் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 13.3. இளமை நிலையாமை

**கிழக்கெழுந்து ஓடிய ஞாயிறு மேற்கே**
**விழக்கண்டும் தேறார் விழியிலா மாந்தர்**
**குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்**
**விழக்கண்டும் தேறார் வியனுல கோரே.**

என்பது, கிழக்கே வானத்தில் உதயமாகிய நன்றாக விளங்கிய சூரியன், மேற்கில் மறைவதைக் கண்டும் அறிவில்லாத மக்கள் இளமை நிலையாமையை உணரார். அதேபோன்று இளங்கன்று சில நாளில் வளர்ந்து மூப்படைந்து இறப்பதைக் கண்டும் அகன்ற உலகிலுள்ளோர் இந்த இளமை நிலையாமையை உணரமாட்டார் என்பதாகும்.

(1)

**ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்**
**பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை**
**நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினும்**
**தூண்டு விளக்கின் சுடர்அறி யாரே.**

என்பது, பல ஆண்டுகள் அறியாமையில் கழிந்தோடின. உயிர்த் தந்தையாகிய இறைவனை யாரும் தங்கள் உடலில் நிலைபெறச் செய்து அவனது அகண்ட ஒளியில் புகுந்து பேரறிவைப் பெறுவார் இல்லை. நீண்ட காலம் உலகில் வாழும் பேறு பெற்றிருப்பினும் தூண்டுகின்ற விளக்கின் சுடர்போன்ற இறைவனை உலகவர் அறியாதவர்களாக உள்ளனர் என்பதாகும்.

(2)

**தேய்ந்தற்று ஒழிந்த இளமை கடைமுறை**
**ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்**
**பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை**
**ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே.**

என்பது, இளமையானது நாள்தோறும் சிறிது சிறிதாகத் தேய்ந்து கடைசியில் இற்று ஒழிந்தது. மூப்பு எய்திய பின் அருமையான காரியங்கள் செய்ய முடியாதனவாகும். ஆதலால் உயிர் செழுமையான உடலில் இருக்கும் போதே கங்கையாறு பாய்ந்து

மறைந்த பரவிய சடையையுடைய சிவபெருமானை ஆராய்ந்து பொருந்துங்கள் என்பதாகும்.

(3)

**விரும்புவர் முன்என்னை மெல்லியன் மாதர்**
**கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்**
**அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்கும்**
**கரும்பொத்துக் காஞ்சிரங் காயும்ஒத் தேனே.**

என்பது, மென்மையான பெண்கள் கரும்பைப் பிழிந்து கடைசியில் வருகின்ற சாற்றினைப்போல, இளமைக் காலத்தில் என்னை இனிமையாக விரும்புவர். அத்தகைய யான், தாமரை மொட்டுப் போன்ற முலையினையும், அழகிய அணியையும் உடைய பெண்களுக்கு, இளமையில் கரும்பைப் போன்று இனிமையாகவும் முதுமையில் எட்டிக்காய் போன்று கசப்பாகவும் ஆயினேன் என்பதாகும்.

(4)

**பாலன் இளையன் விருத்தன் எனநின்ற**
**காலங் கழிவன கண்டும் அறிகிலார்**
**ஞாலம் கடந்துஅண்டம் ஊடறுத் தான்அடி**
**மேலும் கிடந்து விரும்புவன் நானே.**

என்பது, பாலன் என்றும் இளையன் என்றும் முதியோன் என்றும் உள்ள பருவ காலங்கள் மாறுபடுவதை உலகோர் அறியவில்லை. ஆனால் இவ்வுலகத்தைக் கடந்து அதற்கு மேலாக உள்ள அண்டங்களையும் ஊடறுத்து நிற்கின்ற இறைவனது திருவடியை மேன்மேலும் பொருந்தி நான் அன்பு செய்வேன் என்பதாகும்.

(5)

அற இலக்கியம்

குறிப்புகள்

காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாணாள் கழிவதும்
சாலும்அவ் ஈசன் சலவிய னாகிலும்
ஏல நினைப்பவர்க்கு இன்பம்செய் தானே.

என்பது, நாள்தோறும் காலையில் எழுந்தவர்கள் மாலையில் உறக்கத்துக்குச் செல்வதும் வாழ்நாள் குறைவதும் போதும்! அவ்வாறு வாழ்நாளைக் குறைக்கின்ற உருத்திர மூர்த்தி கோபமுடையவன். ஆகிலும் பொருந்த நினைப்பவர்க்கு இன்பம் அருளுகின்றான் என்பதாகும்.

(6)

பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்
பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்
பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டால்
பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே.

என்பது, பருமையான ஊசி போன்ற ஐந்து இந்திரியங்களும் ஒரு பை போன்ற உடம்பினுள் உள்ளன. பறந்து சென்று தீயனவற்றைப் பற்றி உண்ணும் காக்கை போன்றவை இந்த ஐந்து இந்திரியங்களுமாகும். ஐந்து இந்திரியங்களும் சிரசின்மேல் பனிப்படலம் போல விளங்கும் ஒளியில் தலைப்பட்டு அமையுமாயின் ஐந்து இந்திரியங்களைக் கொண்ட உடம்பின் நினைவு நீங்கிவிடும் என்பதாகும்.

(7)

கண்ணதும் காய்கதி ரோனும் உலகினை
உண்ணின்று அளக்கின்றது ஒன்றும் அறிகிலார்
விண்ணுறு வாரையும் வினையுறு வாரையும்
எண்ணுறும் முப்பதில் ஈர்ந்தொழிந் தாரே.

என்பது, தண்ணிய சந்திரனும் வெம்மையான சூரியனும் உலகவரின் உடம்பினுள் இருந்து வாழ்நாளை அளந்து கொண்டிருப்பதை யாரும் அறியவில்லை. ஆகாயப் பேறு அடைபவரையும் வினையுள்பட்டு அழிபவரையும் சூரிய சந்திரர்கள் முப்பது ஆண்டில் பிரிந்து விடுகின்றனர் என்பதாகும்.

(8)

**ஒன்றிய ஈரெண் கலையும் உடலுற**
**நின்றது கண்டு நினைக்கிலர் நீசர்கள்**
**கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்**
**சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே.**

என்பது, பொருந்திய பதினாறு கலைகளும் உடனாய் நிற்றலைக் கண்டும், கீழானவர்கள் தலைவழியே சென்று மேல் விளங்கும் இறைவனைச் சிந்திக்கின்றிலர். சினக்கின்ற காலனாகவுள்ள உருத்திரன் மீண்டும் கருப்பையில் வைத்தபின் அதில் போய் மீண்டும் பிறவியில் வீழ்வர். இவர் மனமயக்கம் ஒழியாதவராவர் என்பதாகும்.

(9)

**எய்திய நாளில் இளமை கழியாமை**
**எய்திய நாளில் இமையினால் ஏத்துமின்**
**எய்திய நாளில் எறிவது அறியாமல்**
**எய்திய நாளில் இருந்துகண் டேனே.**

என்பது, பிராசாத நெறியே சென்று சந்திர மண்டலம் விளங்கிய காலத்து, இளமை நிலைக்காதிருக்கும்போது, துதிப்பாடல்களால் சிவனைப் புகழ்ந்து பாடுங்கள். அவ்வாறு ஏத்திப் பிராண இயக்கம் நடைபெறுவதை உணராமல் அப்போது தியானத்தில் பொருந்தியிருந்து உண்மையை நான் உணர்ந்தேன் என்பதாகும்.

(10)

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. இறைவனை ஏன் அடையவேண்டும்?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. மனிதனின் பருவ காலங்கள் யாவை?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. இந்திரியங்களின் செயற்பாடு எத்தன்மைத்து?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. சூரிய சந்திரனின் செயற்பாடு யாது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

குறிப்புகள்

## 13.4. தொகுத்துக் காண்போம்

குறிப்புகள்

⇒ இளமை நிலையாமை குறித்து திருமூலர் குறிக்கும் நிலைகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ இறை நிலை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ இளமை-முதுமையில் பெண்களின் நிலை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ உயிர்களின் பருவ காலங்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ உடலில் தோன்றும் ஐந்து இந்திரியங்களின் செயற்பாடுகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ சூரியன்-சந்திரனின் உலகியல் செயற்பாடுகள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ மனமயக்கம் ஒழியாதவர் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

## 13.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 13.3. (2-3ம் பாடல்கள்)
2. 13.3. (5ம் பாடல்)
3. 13.3. (7ம் பாடல்)
4. 13.3. (8ம் பாடல்)

## 13.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. நிலையற்றது இளமை என்பதைத் திருமூலர் எவ்வாறு நிரூபிக்கின்றார்?
2. நிலையற்ற வாழ்க்கையில் மனிதன் கடைபிடிப்பன யாவை?
3. இளமையில் செய்ய வேண்டுவன மற்றும் செய்ய வேண்டாதனவாகத் திருமூலர் குறிப்பிடுவன யாவை?

## 13.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

1. வித்துவான் எம். நாராயண வேலுப்பிள்ளை (தெளி.), திருமூலரின் திருமந்திரம் மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1994.

2. ச.வே. சுப்பிரமணியம் (பதி.), பன்னிரு திருமுறை - மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2007.

குறிப்புகள்

குறிப்புகள்

## கூறு 14. நீதிநெறி விளக்கம் - 1 - 50 பாடல்கள்

14.0. பாட அமைப்பு

14.1. முன்னுரை

14.2. குறிக்கோள்கள்

14.3. நீதிநெறி விளக்கம் 1-50 பாடல்கள்

14.4. தொகுத்துக் காண்போம்

14.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

14.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

14.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 14.1. முன்னுரை

ஒழுக்க நிலையை ஒவ்வொருவரும் தவறாது கடைப்பிடித்தல் அவசியம். ஒழுக்கமின்மை நாட்டில் நிலவி வருங் காலத்தில் எழுந்த நீதி நூல்கள் பலப்பல. காப்பியங்களுக்குள்ளும் அங்கங்கே நீதிகள் எடுத்துரைத்தாலும் நீதியை உணர்த்தும் நூல்கள் தனித்தனியே தோன்றலாயின. இந்நிலையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைக் குறிப்பிடலாம். இதற்குப் பிறகும் காலந்தோறும் பல்வேறு நூலாசிரியர்களால் பல்வேறு வகைப்பட்ட நீதி நூல்கள் தோன்றிக் கொண்டே வந்திருக்கின்றன. இந்நிலையில் குமரகுருபரர் இயற்றிய நீதிநெறி விளக்கமும் ஒன்று. இந்நூல் ஒழுக்கமும் விழுப்பமும் தருவதாகும். இந்நூல் கடவுள் வாழ்த்தோடு 102 பாடல்களால் ஆனது. இப்பாடல்கள் வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. இவற்றில் முதல் ஐம்பது பாடல்கள் பிரிவு 4இல் கூறு பதினான்காவது பாடப் பகுதியாக இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

## 14.2. குறிக்கோள்கள்

குறிப்புகள்

- ⇒ கல்வியின் சிறப்பு மற்றும் பயன் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ சொல் வன்மையின் சிறப்புப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ புலவர்களின் புகழ் எத்தன்மைத்து என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ கல்வி கற்றலின் சிறப்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ பித்து பிடித்தவர்களின் குணங்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ கற்றுணர்ந்தவர்களின் அணிகலன்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ பயன்பாடற்ற செல்வத்தின் நிலை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ செல்வம் நிலைகொள்ளும் இடம் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ தற்புகழ்ச்சியுடையாரைப் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ கற்றவாறு ஒழுகாதாரின் நிலை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ கல்வி விற்பவரின் நிலை பெற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ தெய்வத் தன்மை பொருந்தியவர்கள் யார்யார் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ கொடுங்கோல் மன்னர்தம் செயற்பாடுகள் பற்றியும், செங்கோல் மன்னர்தம் செயற்பாடுகள் பற்றியும் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ கற்பதருவுக்குச் சமமானவர்கள் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ அடைக்கலம் கொடுப்போரின் இயல்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.
- ⇒ சாதற்கு அஞ்சாதார் பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

அற இலக்கியம் குறிப்புகள்

⇒ அரசன் எவ்வழியோ அவ்வழியே குடியும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ அரசர் மற்றும் அமைச்சர் ஆகியோரின் இயல்பு பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ அறிவுடையோர் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

⇒ ஊழின் வலிமை பற்றித் தெரிந்து கொள்வீர்கள்.

## 14.3. நீதிநெறி விளக்கம் (1 - 50பாடல்கள்)

காப்பு

**நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்**
**நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் - நீரில்**
**எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே**
**வழுத்தாத தெம்பிரான் மன்று.**

என்பது, இளமையானது நீரினிடத்து உண்டாகும் குமிழியே; நிறைந்த செல்வமும் நீரினிடத்துச் சுருளும் நெடிய திரைகளே: யாக்கையும் நீரிலெழுதிய எழுத்தேயாம். நம்மவரே! நம்முடைய நித்தியக் கடவுளாகிய நடேசனுடைய திருச்சிற்றம்பலத்தை வழுத்தாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? என்பதாகும்.

நூல்

**அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்**
**புறங்கடை நல்லிசையு நாட்டும் - உறுங்கவலொன்**
**றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை**
**சிற்றுயிர்க் குற்ற துணை.**

என்பது, கல்வியானது அறம் பொருள் இன்பத்தையும் மோக்ஷத்தையும் தரும். அன்றியும் தலைவாயிலிடத்து நல்ல புகழையும் நிலைநிறுத்தும். மிகுந்த கவலை ஒன்று நேரிட்ட இடத்தும் உதவி செய்யும். ஆதலால், அற்ப ஆயுளையுடைய உயிர்களாகிய மனிதருக்குக் கல்வியின் அதிகமாய்ப் பொருந்திய துணையின்று என்பதாகும்.

(1)

**தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்**
**மடங்கொள் றறிவகற்றுங் கல்வி - நெடுங்காமம்**
**முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய்**
**பிற்பயக்கும் பீழை பெரிது.**

என்பது, கல்வியானது ஆரம்பிக்குங் காலத்தில் வருத்தம் ஆகி, பின்பு இன்பத்தைத் தரும். அன்றியும் அறியாமையைக் கெடுத்து அறிவை விசாலமாக்கும் தொழில் முற்றிய ஆபரணத்தையுடைய பெண்ணே! மிகுந்த காமமானது முன்பு கொடுக்கிற அற்பத் தன்மையையுடைய இன்பத்தினும் பின்பு கொடுக்கிற துன்பமே மிக்கது என்பதாகும்.

(2)

**கல்வியே கற்புடைப் பெண்டிர்ப் பெண்டிர்க்குச்**
**செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச் - சொல்வளம்**
**மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்**
**செல்வமு முண்டு சிலர்க்கு.**

என்பது, கல்வியே கற்புடைய மனைவியராகவும், இனிமையாகிய செய்யுளே அம் மனைவியர் பெறும் செல்வப் புத்திரராகவும், பொருளறிவுறுத்தஞ் சொல்லின் வளமே வளப்பத்தை உடைய பொருளாகவும் இருப்பது மன்றி பெருமையை உடைய சபையில்

அழகை உண்டாக்கும் அவையஞ்சாமை ஆகிய செல்வமும் சிலருக்கு உண்டு என்பதாகும்.

(3)

**எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்**
**துய்த்துணர் வில்லெனி னில்லாகம் - உய்த்துணர்ந்தும்**
**சொல்வன்மை யின்றெனி னென்னாகு ம஼துண்டேற்**
**பொன்மலர் நாற்ற முடைத்து.**

என்பது, நல்லாசிரியனைக் கண்டுணர்ந்து எவ்வளவாகிலும் கல்வியை ஆராய்ந்து அறிதல் இல்லையாயின் கற்றறிவு சீர்ப்படாது. அவ்வாறு ஆராய்ந்து அறிந்தும் பிறருக்குத் தாம் கற்றதை ஏற்கச் சொல்லுஞ் சொல்லாற்றல் இல்லையாயின் கற்றதனாற் பிரயோசன மென்ன? சொல்லாற்றலும் இருந்தால் இக்கற்றறிவுச் சீர்ப்பாடுஞ் சொல்லாற்றலும் பொற்பூவுக்கு மணம் வாய்த்தது போலச் சிறக்கும் என்பதாகும்.

(4)

**அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்**
**அவையஞ்சா வாகுலச் சொல்லும் - நவையஞ்சி**
**ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்**
**பூத்தலிற் பூவாமை நன்று.**

என்பது, சபைக்குப் பயந்து உடம்பு நடுக்குகிறவர்களுடைய கல்வியும், சபைக்கு அஞ்சாத மூடர்களுடைய ஆரவார மொழிகளும், பொருள் ஈட்டுங்கால் வரக்கூடிய பழிப்பும் பாவமும் ஆகிய குற்றத்துக்கு அஞ்சி இரந்தோர்க்குக் கொடுத்துத் தாமும் அநுபவியாதவர்களுடைய செல்வமும், தரித்திரர்களுடைய இளமை முதலிய இனிய நலமும் உண்டாதலினும் உண்டாகாமையே நல்லது என்பதாகும்.

(5)

**கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்**
**மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் - மலரவன்செய்**
**வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு**
**மற்றிவர் செய்யு முடம்பு.**

என்பது, சரசுவதி முகத்தினிடத்து வாழ்தல் இருவர்க்கும் ஒத்ததே யானாலும் பிரமன் வண்மையை உடைய தமிழ்ப் புலவோர்க்கு ஒருவாற்றான் ஒப்பாகான். எவ்வாற்றானெனில், தமிழ்ப் புலவராகிய இவர் தம் புகழ் மூலமாகப் படைக்கின்ற உடம்பு அப்பிரமன் படைக்கும் பயனிம்மையை உடைய உடம்பு இறப்பதுபோல இறத்தல் இல என்பதாகும்.

(6)

**நெடும்பகற் கற்ற வவையத் துதவா**
**துடைந்துளா ருட்குவருங் கல்வி - கடும்பகல்**
**ஏதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே**
**தீதென்று நீப்பரி தால்.**

என்பது, பல நாளாய்த் தாம் கற்றனவாய நூல்களால் ஆய பிரயோசனத்தை அவையத்து உதவாது கற்று வல்லோர் சபையினிடத்துப் பெறாமற் போனவரது நாணத்தக்க கல்வியைக் கொடியது என்று நீக்குதல் கூடாது. ஆதலால், அது நெடும் பகலில் அயலானிடத்து இருக்கக் கண்ட தன் மனையாளினும் ஒருவனுக்குப் பொல்லாதது என்பதாகும்.

(7)

**வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்**
**பரிந்துசில கற்பான் றொடங்கல் - கருந்தனம்**
**கைத்தலத்த வுய்த்துச் சொந்திட் டரிப்பரித்தாங்**
**செய்த்துப் பொருள்செய் திடல்.**

என்பது, தாம் வருத்த முற்றுக் கற்றனவாகிய நூற்பொருள்களைச் சிந்தித்தல் முதலியவற்றால் பாதுகாவாது வேறு சில நூற்களை வருந்தி கற்கப்புகுதல், கையிலுள்ள மிக்க பொருள்களைப் புறத்திற் கொண்டுபோய் எறிந்துவிட்டுப் பின்னர் வருந்தி அரிப்பரித்துப் பொருளை யீட்டல் போலும் என்பதாகும்.

(8)

**எனைத்துணைய வேனு மிலம்பாட்டார் கல்வி**
**தினைத்துணையுஞ் சீர்ப்பா டிலவாம் - மனைத்தக்காள்**
**மாண்பில ளாயின் மணமக னல்லறம்**
**பூண்ட புலப்படா போல்.**

என்பது, கணவனானவன் மேற்கொண்ட விருந்தோம்பல் முதலிய நல்ல தருமங்கள் இல்வாழ்க்கைக்குத் தக்கவளாகிய மனைவி நற்குண நற்செயல்கள் எனும் மாட்சிமை இல்லாதவளாயின் விளங்காமை போலத் தரித்திரருடைய கல்வியானது எவ்வளவு மிகுதியை உடையது ஆயினும் தினையினுடைய அளவுதானும் சிறப்பை அடைதல் இல்லை என்பதாகும்.

(9)

**இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல்**
**வன்சொல்லி னல்லது வாய்திறவா - என்சொலினும்**
**கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்**
**பித்துடைய வல்ல பிற.**

என்பது, ஒருவன் இனிய சொல்லையுடையோனும் பணியத் தக்காரிடத்துப் பணியுமியல்பு உடையோனுமாயினும் அவன் சிறிது பொருளும் இல்லானாயின் கடல் சூழ்ந்த இந்த உலகத்துள்ளார் அவனை நோக்கிக் கடுமையாகிய சொற் சொல்லுதல் இனாலன்றி இன்சொல்லினால் வாய் பேசார். ஆனாலோ, பொருளை உடையோன்

எவ்வாறு சொல்லினும் அவன் காலின் கீழ் ஒதுங்குவார். ஆகையால், இவ்வுலகத்தார் பைத்திய குணத்தை உடையவர்களே யன்றி நற்குணத்தை உடையவர்கள் அல்லர் என்பதாகும்.

(10)

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

1. மிக்க காமம் எதனைத் தரும்?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

2. சொல் வன்மையின் சிறப்பு யாது?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

3. தமிழ்ப் புலவோரின் புகழ் பற்றிக் குமரகுருபரரின் கருத்து யாது?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

4. பித்துடையோர் யார்?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

அற இலக்கியம்

குறிப்புகள்

**இவறன்மை கண்டு மடையாரை யாரும்**
**குறையிரந்துங் குற்றேவல் செய்ப - பெரிதுந்தாம்**
**முற்பக னோலாதார் நோற்றாரைப் பின்செல்லல்**
**கற்பன்றே கல்லாமை யன்று.**

என்பது, உலோபகுணம் அவரிடமிருப்பதைக் கண்டிருந்தும் செல்வம் உடையவரிடம் யாவரும் தங்குறை சொல்லி யிரந்து அவர் ஏவிய சிறு தொழில்களையும் செய்வார்கள். மிகுதியும் முன்னாட்களாகிய தம் பிறப்பில் தவம் செய்யாதார் அந்நாட்களில் தவம் செய்தவரைப் பின் தொடர்ந்து போதல் நியமம் அல்லவா? ஆதலால், இது அறியாமை அல்ல என்பதாகும்.

(11)

**கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்**
**மற்றோ ரணிகலம் வேண்டாவாம் - முற்ற**
**முழுமணி பூணுக்குப் பூண்வேண்டா யாரே**
**அழகுக் கழகுசெய் வார்.**

என்பது, யாவர்தாம் அழகுக்கு அழகைக் கொடுப்பார்? முற்றுப் பெற முழு மணிகள் அழுத்திய நகைகளுக்குப் பின்னும் அழகைக் கொடுக்கும்படி வேறு ஆபரணங்கள் வேண்டப்படாவாம். அதுபோலக் கற்றுணர்ந்தவர்க்குக் கல்வியறிவென்னும் ஆபரணமே யன்றி வேறே ஆபரணம் வேண்டியதில்லை என்பதாகும்.

(12)

**முற்று முணர்ந்தவன ரில்லை முழுவதூஉம்**
**கற்றன மென்று களியற்க - சிற்றுளியாற்**
**கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்**
**கொல்லுலைக் கூடத்தி னால்.**

என்பது, எல்லாம் அறிந்தவர்கள் இல்லை. ஆதலால், எல்லாவற்றையும் கற்றுவிட்டோம் என்று மகிழ்ச்சி யடைதல் வேண்டாம். கனத்த காதணியை உடையவளே! சிறிய உளியினால் கல்லானதும் உடைக்கப்டும். ஆனாலும் அது கொல்லனுடைய உலை முகத்திலுள்ள சம்மட்டியினால் உடைக்கப்பட்டது என்பதாகும்.

(13)

**தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை**
**அம்மா பெரிதென் றகமகிழ்க - தம்மினும்**
**கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்**
**எற்றே யிவர்க்குநா மென்று.**

என்பது, தம்மின் எளியாரைப் பார்த்துத் தமது பொருளே ஓ ஓ மிக்கது என்பது மனம் மகிழ்க. தம்மினும் அதிகமாகக் கற்றவர்களைப் பார்த்து நாம் கற்றது முழுவதும் இவரது கற்றறிவோடு எத்தன்மையதாம் ஒப்புடவுந் தகாது என்று கருத்தித் தம் மனத்துள் வருந்துக என்பதாகும்.

(14)

**கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு**
**செல்வமுஞ் செல்வ மெனப்படும் - இல்லார்**
**குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமும்**
**தலைவணங்கித் தாழப் பெறின்.**

என்பது, தரித்திரர் தமது குறையைத் தமக்கு இரந்து சொல்லித் தமது முன்னே நிற்பது போலக் கல்வியும் பொருளும் உடையராய தாமும் தந்தலையால் வணங்கிப் பிறர்க்குத் தாழ்வராயின், கல்வி உடைமை, பொருள் உடைமை தமது கல்வியும் திரவியமும் ஆகிய இரண்டு மாக்கியமுமே பாக்கியம் என்று பலராலும் விசேடித்துச் சொல்லப்படும் என்பதாகும். (15)

**ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட**
**மீச்செலவு காணி னனிதாழ்ப - தூக்கின்**
**மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல**
**வலிதன்றே தாழுந் துலைக்கு.**

என்பது, செல்வத்திற் பெரியார் சிறியோரிடத்து உண்டாகிய வரம்பிகந்த நடையைக் கண்டால், தாமே மிகவுந் தாழ்வார்கள். ஆராய்ந்து பார்க்கின் துலாக்கோலில் நொய்ய பொருளுள்ள தட்டு மென்மேலும் உயர்ந்து போகப் போகத் திண்ணிய பொருளுள்ள தட்டல்லவா தாழுகின்றது என்பதாகும்.

(16)

**விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யும்**
**நலத்தகையார் நல்வினையுந் தீதே - புலப்பகையை**
**வென்றன நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று**
**தம்பாடு தம்மிற் கொளின்.**

என்பது, விலக்கப்பட்டனவாகிய கருமங்களைச் செய்யாமற் பாதுகாத்து விதிக்கப்பட்டவனவற்றையே செய்கின்ற நல்ல தகுதியை உடையவர்கள் ஐம்புலன்களாகிய பகைவரை யாம் அடக்கினோம்; நல்லொழுக்கங்களிலும் வழுவாமல் நின்றோம் என்று கூறி தம்முடைய பெருமையைத் தமக்குள் மதித்திக் கொள்ளின் அப்படி மதிப்பவரது நல்ல செய்கையும் தீயதே என்பதாகும்.

(17)

**தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த ரீச்சுடர்**
**நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற் - றன்னை**
**வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்**
**நயவாமை யன்றே நலம்.**

என்பது, பிறர் தன்னைப் புகழுங் காரணமாக ஒருவன் தானே தன்னைப் புகழ்தல் விளக்கின் சுடரில் தண்ணீர் வார்த்து அவ்விளக்கை வளர்த்தது போலாம். ஆதலால், ஒருவன் தன்னை நன்குமதியாமல் இருப்பதல்லவா அவனுக்குப் புகழாகுவது. தன் சுகத்தைத் தானே நாடாமையல்லவா அவனுக்கு இன்பமாகுவது என்பதாகும்.

(18)

**பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்**
**மறவாமே நோற்பதொன் றுண்டு - பிறர்பிறர்**
**சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து**
**யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.**

என்பது, பிறரால் நன்கு மதிக்கப்படுதலை விரும்புகிறவன் எக்காலத்தும் மறவாமல் நோற்கத்தக்கது ஒன்றுண்டு. அஃதென்னவெனில், பிறருடைய சிறப்பையெல்லாம் பிரசித்தப்படுத்தி, அவரது குற்றத்தை அடக்கி, யாவருக்கும் தாழ்மையான வசனங்களைச் சொல்லுதல் என்பதாகும்.

(19)

**கற்றுப் பிறர்க்குரைத்துத் தாநில்லார் வாய்ப்படூஉம்**
**வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை - சொற்றநீர்**
**நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்**
**சொல்லாமே சூழ்ந்து சொலல்.**

என்பது, நூலைக் கற்றும் பிறர்க்கு அதைக் கூறியும் தாம் அதன் வழி நில்லாதாரிடத்தினின்று பெறப்படும் பயனில் வார்த்தைகளுக்கும் ஒருவாற்றான் ஓர் பயன் உண்டு. அஃதென்னவெனின், கூறிய நீரே அதன் வழி நில்லாதது என்ன காரணத்தைப் பற்றி? என்று அவர்க்கு வெட்கம் உண்டாகும்படி ஒருவன் எதிர்ப்பட்டு வெளிப்படையாய்ச் சொல்லாமல் குறிப்பாயேனுஞ் சொல்லுதல் என்பதாகும்.

(20)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

5. கற்றுணர்ந்தார்க்கு ஆபரணம் எது?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

6. கல்விச் செருக்குப் பற்றிக் குமரகுருபரர் கூறும் கருத்து யாது?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

7. தற்புகழ்ச்சியுடையார் யார்?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

8. கற்றவாறொழுகாதார் நிலை எத்தன்மைத்து?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

**பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்**
**தமக்குப் பயன்வே றுடையார் - திறப்படூஉம்**
**தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்**
**கோவினை வேலை கொளல்.**

என்பது, தாம் கற்ற அறிவைப் பிறர்க்கு அவரும் அதனால் முத்திநெறி அறியும் வண்ணம் கைம்மாறாகப் பொருள் பெற்றுக் கொண்டு போதிப்பவர் பல வகைப்பட்ட கொடுமையாகிய செயல்களைச் செய்வதற்கு மனந்தளராத வலிடை அடைந்து யமனைத் தம்முயிரைக் கொண்டு போகும்படி அழைப்பதாகிய பின்னொரு பயனையும் தமக்கு உடையவர் ஆவர் என்பதாகும்.

(21)

**கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்**
**கொற்கமின் றூத்தைவா யங்காத்தல் - மற்றுத்தம்**
**வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை**
**புல்லுரு வஞ்சுவ போல்.**

என்பது, நூல்களைக் கற்கும்படியான விதியில்லாமல் போனவர்கள் அறிவினால் கழுவப்படாத தம்முடைய ஊத்தை வாயை கற்றோர் சபையில் வெட்கமின்றித் திறத்தல், அக்கற்றோரைப் பார்த்து நீவிர் விலங்குகளும் பறவைகளும் புல் உருவுக்குப் பயப்படுவதுபோல, எம்முடைய வல்லுருவுக்குப் பயப்படவேண்டாம் என்பதை ஒருவாறு ஒக்கும் என்பதாகும்.

(22)

**போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி**
**மீக்கொ ணகையினார் வாய்ச்சேரா - தாக்கணங்கும்**
**ஆணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ணலம்**
**பேடு கொளப்படுவ தில்.**

என்பது, பிற பொருள்மேல் இழத்தற் கருமையாகிய கல்வி அறிவின் மிக்காரிடத்தன்றி நகையின் மிக்காரிடத்துச் சேராது. தானே ஆடவரைத் தீண்டி வருத்துவதோர் தெய்வ மகனும் மோகினியும் ஆண் தன்மையை விரும்புதற்கு ஏதுவாகிய ஒரு பெண்ணுக்கு பெண் தன்மையாகிய அழகுடையதாயினும் அப்பெண்ணின் இன்பத்தை வலிமையிற் சிறந்த ஆணேயன்றி மடமையிற் சிறந்த பேடு அநுபவிப்பது முடியாது என்பதாகும்.

(23)

**கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉம்**
**குற்றந் தமதே பிறிதன்று - முற்றுணர்ந்தும்**
**தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா**
**ஏதிலரை நோவ தெவன்.**

என்பது, கற்றுணர்ந்தார் தாம் கற்றவற்றைக் கல்லாதவரது காதில் நுழைத்து அவரால் தாம் அவமதிக்கப்படுவதாகிய குற்றத்திற்குக் காரணம் தமது அறியாமையேயாம், வேறன்றாம். தாம் எல்லாவற்றையும் அறிந்திருந்தும் அக்கல்லாதவரது தன்மையை உணராதவராய் தம்மை இத்தன்மையரென்று அறியாத அக்கல்லாதவரை வெறுப்பது யாது பற்றியாம்? என்பதாகும்.

(24)

**வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்**
**காத்தது கொண்டாங் குகப்பெய்தார் - மாத்தகைய**
**அந்தப் புரத்தது பூஞை புறங்கடைய**
**கந்துகொல் பூட்கைக் கயிறு.**

என்பது, மேலானோர் தயவுபெற வேண்டி இராச சபையை எக்காலமுங் காத்துக் கொண்டிரார். ஆனால், வேறு சிலரோ இராச சபையையே காத்தது கொண்டு அதனால் அவ்விடத்து மகிழ்ச்சியை யடையார்.

பூனையானது மிகவும் சம்பிரமத்தையுடைய அந்தப்புரத்திலேயே இருக்கும். கட்டுத்தறியை முறிக்கும் துதிக்கையை உடைய யானையோ தலைவாசலில் நிற்கும் என்பதாகும்.

(25)

**குலமகட்குத் தெய்வங்க கொழுநனே மன்ற**
**புதல்வர்க்குத் தந்தையுந் தாயும் - அறவோர்க்**
**கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வம்**
**இலைமுகப் பைம்பூ ணிறை.**

என்பது, குலமளுக்கு அவன் கணவனே தெய்வமாவன். புத்திரர்களுக்கு அவரது தந்தையும் தாயுமே நிச்சயமாகத் தெய்வமாவர். அறத்தின் வழி நிற்போர்க்கு அவரது குருவே தெய்வமாவர். ஆனால் இவர்கள் யாவர்க்கும் இலை முகத்தைப் போன்ற செழுமையான பைம்பொன்னாற் செய்யப்பட்ட நகைகளால் அலங்கரிப்பட்ட இராஜனே தெய்வமாவன் என்பதாகும்.

(26)

**கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி**
**புண்ணியத்தின் பாலதே யாயினும் - தண்ணளியால்**
**மன்பதை யோம்பாதார்க் கென்னாம் வயப்படைமற்**
**றென்பயக்கு மாணல் லவர்க்கு.**

என்பது, பார்வையினால் தம் கருத்தை வெளியிட்டு தம் பிரசைகளுடைய வேண்டுதலைச் செவிகொடுத்துக் கேட்கும் இராசத்துவம் அரசர்க்கு மேனாள் தவத்தினாற் கிடைத்ததே யாயினும் கிருபையினால் அவ்வாறு தம் பிரசைகளைக் காவாத அந்த அரசர்க்கு அதனாற் பிரயோசனம் யாதாம்? ஆண் தன்மைக்குரிய வீரம் இல்லாதவர்க்கு அவருடைய கையிலுள்ள வலிமை பொருந்திய ஆயுதம் என்ன பிரயோசனத்தைக் கொடுக்கும்? என்பதாகும்.

(27)

**குடிகொள் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா**
**மடிகொன்று பால்கொளலு மாண்பே - குடியோம்பிக்**
**கொள்ளுமா கொள்வோற்குக் காண்டுமே மாநிதியம்**
**வெள்ளத்தின் மேலும் பல.**

என்பது, தன் பிரசைகளை வருத்தித் திறை வாங்கும் அரசனுக்கு கறவைப் பசுவினது மடியை யரிந்து பாலைக் கொள்ளுதலும் நன்மையாயிருக்கும். இ∴து இப்படியிருக்க தம் குடிகளைப் பாதுகாத்துத் திறையை நீதி வழுவாது வாங்கும் வீதப்படி வாங்கும் அரசர்க்குத் திரவிய சம்பத்தானது வெள்ளத்திலும் அதிகமாய் இருப்பதை நாம் கண்டிருக்கிறோம் என்பதாகும்.

(28)

**இன்று கொளற்பால நாளைக் கொளப்பொறான்**
**நின்று குறையிரப்ப நேர்படான் - சென்றொருவன்**
**ஆவனகூறி னெயிறலைப்பா னாறலைக்கும்**
**வேடலன் வேந்து மலன்.**

என்பது, இன்றைக்குப் பெறவேண்டிய திறையை நாளைக்கு வாங்கும்படியான பொறுமை யில்லாதவனும், தன்னைச் சந்தித்து ஒருவன் தன் குறையைச் சொல்லும் படியாக நேர்படாதவனும், ஒருவன் தானே தன்னிருப்பிடம் வந்து தனக்கு ஆகவேண்டிய காரியத்தைச் சொன்னால் பற்களைக் கடித்துக் கோபித்துக் கொள்ளுபவனுகிய அரசன், வழிமறித்துப் பறியாமையால் வழியில் வருத்தும் வேடனுமல்லன். அரசமாட்சி யில்லாமையால் அரசனுமல்லன் என்பதாகும்.

(29)

**முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி**
**வுடுப்ப வுடுத்துண்ப வுண்ணா - இடித்திடித்துக்**
**கட்டுரை கூறிற் செவிக்கொளா கண்விழியா**
**நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.**

என்பது, முடிக்கப்படுவனவற்றை முடித்தும், பிறகு பூசப்படுவனவற்றைப் பூசியும், உடுக்கப்படுவனவற்றை யுண்டும் அமைச்சர் முதலாயினோர் அடிக்கடி நெருங்கி உறுதி வார்த்தைகளைச் சொன்னால் அவ்வுறுதி வார்த்தைகளைக் கவனித்துக் கேளாதவை கண் விழித்துக் கொண்டு நெட்டுயிர்ப்போடிருக்கும் பிணத்துக்குச் சமம் என்பதாகும்.

(30)

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

9. கல்வியறிவில்லாதார் உரை எவ்வாறு இருக்கும்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

10. யாருக்கு யார் தெய்வமாகலாம் என்பது பற்றிக் குமரகுருபரரின் கருத்து யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

11. கொடுங்கோல் வேந்தர், செங்கோல் வேந்தர் ஆகியோருக்கான தகுதி யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

12. பிணத்திற்கொப்ப அரசன் யார்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

அற இலக்கியம்

குறிப்புகள்

**ஒற்றிற் றெரியாச் சிறைப்புறத் தோர்துமெனப்**
**பொற்றோ டுணையாத் தெரிதந்தும் - குற்றம்**
**அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று**
**முறையிடியினுங் கேளாமை யன்று.**

என்பது, நம் பிரசைகளது குற்றங்களை வேவுகாரரால் அறிவது முடியாது. ஆகையால், அவற்றை நாமே மறைவிடங்களினின்று அறிவோம் என்று தம் அழகிய தோள்களே தமக்குத் துணையாகப்போய் நின்று அவற்றை யறியினும், அக்குற்றங்களின் காரண காரியங்களை முழுமையும் அறிவது அரிது என்று பயப்படுவதே இராஜநீதி. ஒருவன் தானே தம்மிடம் வந்து நின்று தனது குறையைச் சொன்னாலும் அதைக் கேளாதிருப்பது இராஜ நீதியன்று என்பதாகும்.

(31)

**ஏதிலார் யாதும் புகல விறைமகன்**
**கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு நேர்நின்று**
**காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை**
**சால்புடைத் தென்பாரு முண்டு.**

என்பது, அரசனானவன் அயலார் யாது கூறினும் அதனது குற்றங்களை நீக்கி உண்மையைத் தன் மனத்துள் கொள்ளுவதே அவனுக்குப் பேரறிவாகும். காக்கையின் எதிரே நின்றுக்கொண்டு அக்காக்கையை வெண்மை நிறமுடையது என்று சொல்லுகின்ற இவ்வுலகத்தார் பின்னை யென்னதான் சொல்லமாட்டார்? தம் தாயைக் கொல்வது தகுதியுடையது என்று சொல்லுவாரும் உண்டே என்பதாகும்.

(32)

**கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்**
**குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகும் - மண்டெரி**
**தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ**
**பேரா பெருமூச் செறிந்து.**

என்பது, கேடானது கண்ணுக்கு எதிராக தோன்றியதாயினும் கீழ்மக்களுக்கு உணர்ச்சி யுண்டாமோ? (அக்கேட்டில் நின்றும் ஒழியத்தக்க அறிவு உண்டாகுமோ?) இல்லையாம். நெருங்கிய தீயானது பக்கத்தில் சூழ்ந்து எரிந்து நெருங்கிக் கொண்டாலும் பெரும்பாம்புகள் பெருமூச்செறிந்து தூங்குவனவே யன்றி தம் இடம் விட்டுப் பெயராது என்பதாகும்.

(33)

**நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்**
**பக்கத்தார் யாரையு மையுறுதல் - தக்கார்**
**நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்**
**கெடுவது காட்டுங் குறி.**

என்பது, இஷ்டருக்குள் பகையை உண்டாகுவதும், பகைவரை இஷ்டராக்குவதும், வேவுகாரரை நிந்திப்பதும், தன் பக்கத்தில் உள்ளாராகிய எல்லாரையும் பற்றிச் சந்தேகிப்பதும், தகுதியுடையாரது (உறுதி வார்த்தை சொல்லத் தக்கவர்களுடைய) நன்மை நிறைந்த உறுதி மொழிகளை அலட்சியம் பண்ணுவதும் இயற்கையாகிய குணம் மாறுவதும், ஒருவனுக்கு வரப்போகிற கேட்டை முன்னே அறிவிக்கும் அடையாளம் என்பதாகும்.

(34)

**பணியப் படுவார் புறங்கடைய ராகத்**
**தணிவில் களிப்பினாற் றாழ்வார்க் - கணிய**

**திளையாண் முயக்கெனினுஞ் சேய்த்தன்றே மூத்தாள்**
**புணர்முலைப் போகங் கொளல்.**

என்பது, தம்மாற் பணியப்படுபவர் தந்தலைவாசலில் நிற்பாராக. தம்முடைய அளவற்ற பாக்கிய மகிழ்ச்சியினால் அவரை எதிர்கொள்ளுவதினின்றுந் தாழ்பவர்களுக்கு இளையவளாகிய இலட்சுமியின் போக அநுபவம் அச்சமயத்தில் சமீபத்திலிருந்தாலும் அவளுக்கு மூத்த தேவதையாகிய மூதேவியினடைய நெருங்கிய ஸ்தலங்களின் போகத்தைக் கொள்ளுதல் தூரமன்று என்பதாகும்.

(35)

**கண்ணோக் கரும்பா நகைமுகமே நாண்மலரா**
**இன்மொழியின் வாய்மையே தீங்காயா - வண்மை**
**பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே**
**சலியாத கற்ப தரு.**

என்பது, தம்முடைய குளிர்ந்த பார்வையே அரும்பாகவும், தம் இனிய முகமே புதுமலராகவும், தம் இனிய உண்மையாய மொழியே இனிய காயாகவும், தம் ஈகையே பழமாகவும் பொருந்திய பண்பை உடையவர்கள் அல்லவா நன்மை மிகுந்த கொடுப்பதில் ஒருகாலுந் தளராத கற்பதருவுக்குச் சமானமானவர் என்பதாகும்.

(36)

**வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்**
**றூங்குங் களிறோ துயருறா - ஆங்கதுகொண்**
**டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்**
**ஆருங் கிளையோ டயின்று.**

என்பது, தாம் பெற்றுக்கொள்ளும் கவளத்தினுடைய ஒரு சிறிய பாகமானது வாயினின்றுந் தவறி விழுந்தால் அசைந்துகொண்டு நிற்கும் யானைகளோ அதனால் வருத்தமடையமாட்டா. ஆனால்,

அது சிந்திய இடத்தில் ஊருகின்ற ஒரு கோடியளவான திரளான எறும்புகள் இவ்வுலகத்தில் தமது நெருங்கிய சுற்றத்தோடு அப்படி விழுந்த பாகத்தைப் புசித்துப் பிழைக்கும் என்பதாகும். (37)

**மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை**
**ஈகையி னேக்கழுத்த மிக்குடைய - மாகொல்**
**பகைமுகத்த வென்வேலான் பார்வையிற் றீட்டும்**
**நகைமுகத்த நன்கு மதிப்பு.**

என்பது, தன் தோற்றத்தினாலேயே பகைவராகிய மிருகங்களைக் கொல்லக் கூடிய பகைத்தன்மையைத் தன் முனையிலுள்ள பிரகாசமான வேலையுடைய அரசன் தன் பார்வையினால் குறிப்பிடுகின்ற அவனது மலர்ந்த முகத்திலுள்ள உயர்வாக மதித்தல்கள் ஆகாயமுஞ் சிறுத்தது என்று சொல்லும்படி குவித்து திரவியக் குவையைக் கொடுப்பதினும் எழுகின்ற பெருந்தன்மையை மிகுதியும் உடையன என்பதாகும்.

(38)

**களைகணாத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்**
**விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார் - தளர்நடைய**
**தூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே**
**தானுடம் பட்டார்க டாம்.**

என்பது, இறைச்சியால் ஆகிய இவ்வுடம்பு பிணி மூப்பு முதலிய காரணமாகத் தளர்கின்ற இயல்பினையுடையது என்று அதனை வெறுத்து புகழினாலாகிய உடம்பினை வளர்த்தற்கே உடம்பட்டவர்கள், தம்மை ஆதாரமாக அடைந்துளோர்க்கு சிறிது துன்பம் வந்தவிடத்தும் வேறொரு உலகப் பயனைக் கருதி தம் வெறிய உடம்பினைத் தாங்கிக் கொண்டு வாளாவிரார் என்பதாகும்.
(39)

**தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்தம்**
**இன்னுயி ரோம்பினு மோம்புக - பின்னர்ச்**

சிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின்.

குறிப்புகள்

என்பது, இனிமேல் தமக்குக் கணப்பொழுதாயினும் நிச்சயமாக சாங்கால மில்லையாயின் தம்முடைய வலிமையையும் பெருமையையும் இழந்து தமது இனிய உயிரைக் காக்கினுங் காப்பாராக என்பதாகும்.

(40)

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

13. இராஜ நீதி எது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

14. கேடு அறிவிக்கும் அடையாளங்கள் யாவை?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

15. கற்பதருவுக்குச் சமமானவர்கள் யார்யார்?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

16. அடைக்கலம் கொடுத்தோரின் இயல்பு யாது?

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

**கலனழிந்த கற்புடைப் பெண்டிரு மைந்து**
**புலனொருங்கப் பொய்கடிந் தாரும் - கொலைஞாட்பின்**
**மொய்ம்புடை வீரரு மஞ்சார் முரண்மறலி**
**தும்பை முடிச்சூ டினும்.**

என்பது, மங்கலநாண் இழந்த கற்பினையுடைய குலமகளிரும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களும் அடங்கி நிற்க பொய்ம்மையினின்று நீங்கினவரும் கொலைக்களத்தின்கண் வெற்றியடையும் வலிமையுடைய வீரரும் வலிமையை உடைய யமன் தம்மோடெதிர்த்துப் போர் செய்ய வருவதற்கு அடையாளமாகத் தும்பைப் பூமாலையை முடியில் தரித்துக் கொண்டாலும் பயப்படார் என்பதாகும்.

(41)

**புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறும்**
**கழிமுடை நாற்றத்த வேனும் - விழலர்**
**விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டார்**
**சுளியார் சுமைபோடு தற்கு.**

என்பது, தம் பிறப்பின் பயனை யடையாத வீணர், தமதுடம்புகள் புண்களுடையனவா யழுகிப் புழுக்கள் நெளிய யோசனை தூரத்திற்கு வீசுகின்ற மிகுந்த துர்க்கந்தமாகிய நாற்றத்தை உடையனவாயினும் சாதலை நினைத்து பெருமூச்செறிவார். தம்முடம்பினாலாகிய பயனைக் கொண்டவராகிய ஞானிகளோ இவ்வுடம்பாகிய சுமையை விட்டுவிடுவதற்கு வெறுப்படையார் என்பதாகும்.

(42)

**இகழி னிகழ்ந்தாங் கிறைமக னொன்று**
**புகழினு மொக்கப் புகழ்ப - இகன்மன்னன்**
**சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்**
**நீர்வழிப் பட்ட புணை.**

என்பது, உலகத்தார் தம் அரசன் ஒன்றை இகழ்வானாயின் தாமும் ஒத்து அவனிகழ்ந்தவாறே இகழ்ந்து அவன் அதனைப் புகழ்ந்தாலும் தாமும் அவனோடு கூடப் புகழ்வர். மக்கட் கூட்டம் வலிமை தங்கிய அரசனது குறிப்பின் வழியில் பொருந்தியதே யாம். நீர்ப்பெருக்கிலகப்பட்ட தெப்பமானது நீரால் தள்ளப்படாமல் வேறு என் செய்யும்? என்பதாகும்.

(43)

**செவிசுடர் சென்றாங் கிடித்தறிவு மூட்டி**
**வெகுளினும் வாய்வெரீஇப் பேரா கவுண்மதத்த**
**கைம்மா வயத்ததோ பாகுமற் றெத்திறத்தும்**
**அம்மாண் பினவே யமைச்சு.**

என்பது, கதுப்பின்கண் மதத்தினையுடைய யானையானது பாகனது வசத்துக்கு உட்பட்டதேயாம். எவ்வாற்றானும் அமைச்சரும் அத்தன்மை யுடையவரே. ஏனென்றால், அமைச்சர் அரசன் தமது உறுதி வார்த்தைகளைக் கேளாத போதிலும், தாமே சென்று அவற்றை அவன் காது வருந்தும்படி வற்புறுத்திச் சொல்லி, அறிவு வளரும்படி பண்ணி, அவன் கோபிக்கினும் அவனுக்குப் பயந்து அவனை விட்டு அகலார் என்பதாகும்.

(44)

**கைவரும் வேந்த னமக்கென்று காதலித்த**
**செவ்வி தெரியா துரையற்க - ஒவ்வொருகால்**
**எண்மைய னேனு மரியன் பெரிதம்மா**
**கண்ணில னுள்வெயர்ப்பி னான்.**

என்பது, அரசன் ஒவ்வொரு காலத்திலே எளியனாயிருந்தாலும் பெரும்பான்மையாக அரியனாகவும் இருப்பன், கருணையில்லாதவ னாகவும் இருப்பன், மனக்கோபம் உடையவனாகவும் இருப்பன்.

ஆதலால், இவன் நமக்குப் பழகினவனென்று எண்ணி விரும்பின வற்றைச் சமயமறியாமல் சொல்லற்க என்பதாகும்.

(45)

**பழமை கடப்பிடியார் கேண்மையும் பாரார்**
**கிழமை பிறிதொன்றுங் கொள்ளால் வெகுளின்மற்**
**காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரும்**
**ஆர்வலரு மில்லை யவர்க்கு.**

என்பது, அரசர் தமது பழைய முக நட்பையும் முடிவு மட்டும் நிலைநிறுத்தார். சிநேக மென்பதையும் கவனியார். வேறொரு பாத்தியத்தையும் மனத்துள் நோக்கார். அவர் கோபிப்பாராயின் அப்போது அவருக்கு அயலாரும் அன்புடையவரும் இல்லை. ஆதலால், அரசில் மாட்சிமைப்பட்டவர்க்கு ஒருவர் மீது சிநேகமென்பது உண்டோ? இல்லை என்பதாகும்.

(46)

**மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்**
**எந்நலங் காண்டுமென் றெள்ளற்க - பன்னெடுநாட்**
**காத்தவை யெல்லாங் கடைமுறைபோய்க் கைகொடுத்து**
**வேத்தவையின் மிக்குச் செயும்.**

என்பது, நாம் அரசர் தலைவாயிலை யாதோர் ஊதியமும் பெறாது காத்து வந்தும், யாது பிரயோசனத்தை அடைந்தோம் என்று அலட்சியஞ் செய்யற்க. நீவிர் பல நாட்கள் அரசரது தலைவாயிலில் காத்திருந்தவையெல்லாம் முடிவிலே சென்று, இராஜ சபையில் உமக்கு மிகுந்த நன்மையைச் செய்யும் என்பதாகும்.

(47)

**உறுதி பயப்ப கடைபோகா வேனும்**
**இறுவரை காறு முயல்ப - இறுமுயிர்க்கும்**

**ஆயுண் மருந்தொழுக்க நீதன்றா லல்லனபோல்**
**ஆவனவு முண்டு சில.**

என்பது, ஆயுளைத் தரும் மருந்தைச் சாகும் நிலையிலுள்ள உயிருக்கும் வாயில் விடுதல் தீதாகாது. சில கருமங்கள் முன்பு முடியாதன போலத் தோன்றிப் பின்பு முடிவனவும் உண்டு. ஆதலால் நன்மை பயக்குங் காரியங்கள் முற்றுப் பெறாவிடினும் அவை முடிவுபெறும் வரைக்கும் அறிவுடையோர் முயற்சி செய்து வருவர் என்பதாகும்.

(48)

**முயலாது வைத்து முயற்றின்மை யாலே**
**உயலாகா வூழ்த்திறத்த வென்னார் - மயலாயும்**
**ஊற்ற மறுவிளக்க மூழுண்மை காண்டுமென்**
**றேற்றா ரெறிகான் முகத்து.**

என்பது, புத்தி மயக்கத்தினாலேனும் ஊழ்வினையினது உண்மையை யாம் பார்ப்போம் என்று நினைத்து மறைவின்றி யிருக்கும் தூய விளக்கை வீசுகின்ற காற்றுக்கெதிரே ஒருவரும் ஏற்றார். அதுபோல, அறிவுடையோர், பயன்தருங் கருமங்களைச் செய்யத் தாம் முயற்சி செய்யாதிருந்தும் முயற்சி செய்யாமையினால் தமது, ஊழ்வினைப் பகுதியாய கருமங்கள் தம்மை விட்டுத் தப்புவன ஆகமாட்டா என்று சொல்லார் என்பதாகும்.

(49)

**உலையா முயற்சி களைகணா வூழின்**
**வலிசிந்தும் வன்மையு முண்டே- உலகறியப்**
**பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த**
**கான்முளையே போலுங் கரி.**

என்பது, சிலர்க்கு ஊழினது வலிமையை இளைத்தலில்லாத தமது முயற்சியையே ஆதாரமாகக் கொண்டு சிதைக்கின்ற வலிமையும் உண்டு. அதற்கு, உலகமறியும்படி ஊழினது முளையைக் கெடுத்து

இயமனது உயிரையும் குடித்த மார்க்கண்டேயன் என்னும் பிள்ளையே நல்ல சாட்சி என்பதாகும்.

(50)

குறிப்புகள்

முன்னேற்றத்தைச் சோதித்தறிக.

குறிப்பு :

1. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
2. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.

17. சாவதற்கு அஞ்சாதவர் யார்?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

18. பலனை எதிர்பார்க்காத செயல் எவ்வாறு அமையும்?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

19. அறிவுடையோர் முயற்சி எத்தகையது?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

20. ஊழின் வலிமையை எவ்வாறு உணர முடியும்?

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------

அற இலக்கியம்

குறிப்புகள்

## 14.4. தொகுத்துக் காண்போம்

⇒ கல்வியின் சிறப்பு மற்றும் பயன் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ சொல் வன்மையின் சிறப்புப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ புலவர்களின் புகழ் எத்தன்மைத்து என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ கல்வி கற்றலின் சிறப்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பித்து பிடித்தவர்களின் குணங்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ கற்றுணர்ந்தவர்களின் அணிகலன்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ பயன்பாடற்ற செல்வத்தின் நிலை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ செல்வம் நிலைகொள்ளும் இடம் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ தற்புகழ்ச்சியுடையாரைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ கற்றவாறு ஒழுகாதாரின் நிலை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ கல்வி விற்பவரின் நிலை பெற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ தெய்வத் தன்மை பொருந்தியவர்கள் யார்யார் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ கொடுங்கோல் மன்னர்தம் செயற்பாடுகள் பற்றியும், செங்கோல் மன்னர்தம் செயற்பாடுகள் பற்றியும் தெரிந்து கொடீர்கள்.

⇒ கற்பதருவுக்குச் சமமானவர்கள் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ அடைக்கலம் கொடுப்போரின் இயல்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ சாதற்கு அஞ்சாதார் பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ அரசன் எவ்வழியோ அவ்வழியே குடியும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ அரசர் மற்றும் அமைச்சர் ஆகியோரின் இயல்பு பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ அறிவுடையோர் செயற்பாடுகள் எவ்வாறு அமையும் என்பது பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

⇒ ஊழின் வலிமை பற்றித் தெரிந்து கொண்டீர்கள்.

அற இலக்கியம்

குறிப்புகள்

## 14.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. 14.3. (2ம் பாடல்)
2. 14.3. (4ம் பாடல்)
3. 14.3. (6ம் பாடல்)
4. 14.3. (10ம் பாடல்)
5. 14.3. (12ம் பாடல்)
6. 14.3. (13ம் பாடல்)
7. 14.3. (17ம் பாடல்)
8. 14.3. (20ம் பாடல்)
9. 14.3. (22ம் பாடல்)
10. 14.3. (26ம் பாடல்)
11. 14.3. (27-28ம் பாடல்கள்)
12. 14.3. (30ம் பாடல்)
13. 14.3. (31ம் பாடல்)
14. 14.3. (34ம் பாடல்)
15. 14.3. (36ம் பாடல்)
16. 14.3. (39ம் பாடல்)
17. 14.3. (41-42ம் பாடல்கள்)
18. 14.3. (47ம் பாடல்)
19. 14.3. (48ம் பாடல்)
20. 14.3. (50ம் பாடல்)

## 14.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. கற்றோர்க்குரிய தகுதிகள் பற்றிக் குமரகுருபர் கூறுவன பற்றி விளக்குக.
2. வேந்தர்க்குரிய செயற்பாடுகளைக் குமரகுருபரர் வழி நின்று கட்டுரை வரைக.

அற இலக்கியம்

குறிப்புகள்

3. செல்வ நிலையாமையையும் யாக்கை நிலையாமையையும் குமரகுருபரர் எவ்வாறு விளக்குகின்றார்?

4. நீதியொழுகா மாந்தர் நிலைப்பாடு பற்றிக் கட்டுரை வரைக.

## 14.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. உ.வே.சா. குறிப்புரை, நீதிநெறி விளக்கம் (ஆங்.இந்தி மொழிபெயர்ப்புடன்), காசி மடம், திருப்பனந்தாள், 1983.

2. அ. மகாதேவன் (பதி.), நீதிநெறி விளக்கம் மூலமும் விருத்தியுரையும், மீனாகோபால் பதிப்பகம், சென்னை, 2005.

3. நீதிநெறி விளக்கக் கட்டுரைகள், காசிமடம், திருப்பனந்தாள், 1983.

# மாதிரி வினாத்தாள்-1

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. 2x10=20**

1. வள்ளுவரின் துன்ப நெறி யாது?
2. இழிந்த செயலைச் செய்யாதார் யார்?
3. மரத்திற்கு ஒப்பாவர் யார்?
4. தர்மத்தின் பயன் யாது?
5. போர் அறம் யாது?
6. குரங்கினில் நான்முகத்து இல் என்பது எதைக் குறிக்கும்?
7. சான்றோர் நட்பு எத்தகையது?
8. உடல் எதனால் போர்த்தப்பட்டுள்ளது?
9. எமன் அஞ்சத்தக்க செயல் யாது?
10. கற்றுணர்ந்தார்க்கு ஆபரணம் எது?

**II. ஒரு பக்க அளவில் விடை தருக. 5x5=25**

11.அ. சான்றாண்மை மிக்கோரின் பண்பு நலன்கள் பற்றி வள்ளுவர் குறிப்பிடுவன யாவை?

அல்லது

ஆ. இயல்பாக அமையும் பண்புகளாக வள்ளுவர் கூறுவன யாவை?

12.அ. பிறன்மனை நோக்காதார் அடையும் மேன்மைகளை விளக்குக.

அல்லது

ஆ. அறிவுடையார் ஆற்றும் செயல்களை நாலடியார் வாக்கால் எடுத்துரைக்க.

குறிப்புகள்

அற இலக்கியம்

குறிப்புகள்

13. அ. யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற வரியை நினைவூட்டும் மூன்றுறை அரையனாரின் கருத்து யாது?

அல்லது

ஆ. ஒழுக்கத்தினால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை பழமொழி நானூறு உணர்த்துவன யாவை?

14. அ. விடிவும் இருளும் பற்றித் திருமூலர் கூறுவது யாது?

அல்லது

ஆ. நிலையற்றது இளமை என்பதைத் திருமூலர் எவ்வாறு நிரூபிக்கின்றார்?

15. அ. செல்வ நிலையாமையைக் குமரகுருபரர் எவ்வாறு விளக்குகின்றார்?

அல்லது

ஆ. கொடுங்கோல் வேந்தர், செங்கோல் வேந்தர் ஆகியோருக்கான தகுதிகள் யாவை?

**III. எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.** 10**x**3**=**30

16. வள்ளுவத்தின் வாழ்வியல் சிந்தனைகள் பற்றிக் கட்டுரை வரைக.
17. அறன் வலியுறுத்தலில் வள்ளுவர் குறிப்பிடும் அறச்செயல்கள் பற்றிக் கட்டுரை வரைக.
18. கல்வியிற் சிறப்பினை உணர்த்தும் பழமொழிகள் நான்கினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
19. யாக்கை நிலையாமை குறித்து திருமூலர் சுட்டுவன யாவை?
20. நீதியொழுகா மாந்தர் நிலைப்பாடு பற்றிக் கட்டுரை வரைக.

## மாதிரி வினாத்தாள்-2

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. 2x10=20**

1. செய்ந்நன்றி குறித்து வள்ளுவர் குறிப்பிடுவன யாவை?
2. புகழுக்கும் இளிக்கும் என்ன வேறுபாடு?
3. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எத்தன்மைத்து?
4. வறுமைக்கான ஆபரணம் எது?
5. பிறன்மனையை விரும்பாதார் யார்?
6. பகைமை மறையும் நெறி யாது?
7. கற்றலை விட கேட்டல் சிறந்தது என்பது எதனால்?
8. மந்தணம் கொள்ளுதல் என்றால் என்ன?
9. செம்பொருள் அடைவதற்கான வழி யாது?
10. இராஜ நீதி எது?

**II. ஒரு பக்க அளவில் விடை தருக. 5x5=25**

11.அ. பெருமையுடையோர் - சிறுமையுடையோர் பண்புகள் யாவை?

அல்லது

ஆ. தாழ்ந்த நிலையுடையாரின் செயல்கள் யாவை?

12. அ. பிறன்மனை பேணுவாரின் குணங்களை வள்ளுவர் எவ்வாறு சுட்டுகிறார்?

அல்லது

ஆ. அறத்தால் விளையும் நன்மை தீமைகளைப் பட்டியலிடுக.

குறிப்புகள்

அற இலக்கியம்

குறிப்புகள்

13. அ. கெட்டார்க்கு நட்டாரே இல் என்னும் பழமொழி உணர்த்தும் செயல் யாது?

அல்லது

13. ஆ. பழமொழி நானூற்றில் அறியத்தகும் நல்லொழுக்கங்கள் யாவை?

14. அ. இந்திரியங்களின் செயற்பாடு எத்தன்மைத்து?

அல்லது

ஆ. நிலையற்ற செல்வம் குறித்து திருமூலம் குறிப்பிடுவன யாவை?

15. அ. யாக்கை நிலையாமையைக் குமரகுருபரர் எவ்வாறு விளக்குகின்றார்?

அல்லது

ஆ. தமிழ்ப் புலவோரின் புகழ் பற்றிக் குமரகுருபரரின் கருத்து யாது?

**III. எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.**

10**x**3**=**30

16. பெருமை அதிகாரத்தில் வள்ளுவர் எடுத்துரைக்கும் கருத்துக்களை எடுத்துக்காட்டுடன் கட்டுரை வரைக.

17. தானம், தவம் இவற்றின் மேன்மை குறித்து கட்டுரை வரைக.

18. ஒழுக்கத்தினால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை பழமொழி நானூறு உணர்த்துவன யாவை?

19. உடல் அழியும் என்பதை அறியாதார் மேற்கொள்ளும் செயற்பாடுகள் யாவை?

20. கற்றோர்க்குரிய தகுதிகள் பற்றிக் குமரகுருபர் கூறுவன பற்றி விளக்குக.

# மாதிரி வினாத்தாள்-3

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக. 2x10=20**

1. செல்வத்துட் சிறந்த செல்வம் எது?
2. பகைவர் மனத்தை மாற்றும் கருவி எது?
3. கொல்லாமைக்குரிய சான்றாண்மை யாது?
4. நல்லறிவுடையார் நட்பு எத்தன்மைத்து?
5. அணையா பெண்ணாசையின் நிலை யாது?
6. நாய்மேல் தவிசிடு மாறு என்பது எதனை?
7. அழிவில்லாதவர்கள் யார்?
8. பிண்டம் போட்டோர் நிலை என்ன?
9. நீர்த்தலை மூழ்குபவர் யார்?
10. சாவதற்கு அஞ்சாதவர் யார்?

**II. ஒரு பக்க அளவில் விடை தருக. 5x5=25**

11. அ. மானமுடையாரின் பண்புகள் யாவை?

அல்லது

ஆ. பெருமையுடையாரின் பண்புகளை வள்ளுவர் வாக்கால் எடுத்துரைக்க.

12. அ. பிறன்மனை கொண்டாரின் தீச்செயல்களை விளக்குக.

அல்லது

ஆ. "பாம்பின் தலையை நக்கியது போல" எதற்காக எடுத்துக் காட்டப்பட்டது? விளக்குக.

குறிப்புகள்

அற இலக்கியம்

குறிப்புகள்

13. அ. தீநாள் திருவுடையார்க்கு இல் என்பதன் பொருள் யாது?

அல்லது

ஆ. அறிவுடையோர் எத்தன்மைத்வர் என்பதை பழமொழி நானூறு வழி விளக்குக.

14. அ. உயிர்த் தோற்றம் எவ்வாறு உருவாகிறது?

அல்லது

ஆ. இளமையில் செய்ய வேண்டுவன மற்றும் செய்ய வேண்டாதனவாகத் திருமூலர் குறிப்பிடுவன யாவை?

15. அ. கல்வியறிவில்லாதார் உரை எவ்வாறு இருக்கும்?

அல்லது

ஆ. கல்விச் செருக்குப் பற்றிக் குமரகுருபரர் கூறும் கருத்து யாது?

**III. எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.** 10x3=30

16. பண்புடையவர் மற்றும் பண்பற்றவர்தம் செயற்பாடுகளை வள்ளுவர் வாக்கால் எடுத்துரைக்க.

17. அறத்தால் விளையும் நன்மை தீமைகளைப் பட்டியலிடுக.

18. பழமொழி நானூறு உணர்த்தும் சான்றோர் கடமைகள் யாவை?

19. இறந்தாரின் சுற்றத்தார் மேற்கொள்ளும் செயற்பாடுகளைத் திருமூலர் எவ்வாறெல்லாம் விவரித்துள்ளார் என்பதை எடுத்துக்காட்டுடன் விவரி?

20. வேந்தர்க்குரிய செயற்பாடுகளைக் குமரகுருபரர் வழி நின்று கட்டுரை வரைக.